
GOKULAM

கோகுலம்

மார்ச் '97 ரூ. 5/-



கொஞ்சும், பேசும், பாடும் பஞ்சவர்ணக் கிளி!



> உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
> உண்மையென்று தானறிதல் வேணும்
>
> \- பாரதியார்



கோகுலம்

மார்ச் 1997
மலர் : 15 இதழ் : 2

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். ஆண்டுத் தேர்வைச் சந்திக்க உங்களில் பலர் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். திட்டம் போட்டுப் படித்து வருபவர்களைப் பற்றிக் கவலையே இல்லை. எந்த வகையான திட்டமும் இல்லாமல், படிக்கவும் படிக்காமல் காலத்தைப் பொழுதுபோக்கிக் கழித்தவர்கள்தான் கவலைப்பட வேண்டியவர்கள். இன்னும் கூட எதுவும் கைவிட்டுப் போகவில்லை. இவர்களுக்கும் கூட விழித்து எழக் கடைசி வாய்ப்பு இப்பொழுது இருக்கிறது. இவர்கள், படிப்பைத் தவிர மீதி எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு, இலட்சியத்தோடு படிக்க முயல்வார்களானால், வெற்றிக்கனி கிடைப்பது உறுதி. ஒரு நிமிடத்தைக் கூட வீணடிக்காமல் திட்டம் போட்டு அதன்படி உறுதியாக நடக்க வேண்டும்.

குழந்தைகளுக்காக எழுதப்படும் படைப்புகளுக்கு இலக்கியப் பெருமைகிடைக்கப் பாடுபட்ட குழந்தைக் கவிஞரின் நினைவு நாள் இந்த மாதம்தான். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுள் ஒருவரான கூத்தபிரான், தனது நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

'உதயன் எங்கே?' தொடர்கதையில் ஒரு புதிய மாற்றம் இந்த இதழில் ஏற்படுகிறது.


இந்துமதத்தின் பெருமைகளை உலகறிய வைத்து, உலக சகோதரத்துவத்திற்கு ஞானமும் ஒருவழியாகும் என்பதைக் காட்டியவர் சுவாமி விவேகானந்தர். அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் இந்துமதம், உலக சகோதரத்துவம் ஆகியவை பற்றி வியப்பளிக்கும் உரையாற்றி விட்டு, இவர் தாயகம் திரும்பியதன் நூற்றாண்டு விழா நாடெங்கும் நடைபெறுகிறது. இதை ஒட்டி தம்பி தங்கைகளின் கருத்துக் கோர்வை ஒன்றும் பெருமையளிக்கும் விதத்தில் வெளியாகிறது.

நீங்கள் விரும்பிக் கேட்ட 'உங்கள் நூலகம்' பகுதியும் இந்த இதழில் இடம்பெறுகிறது. மகிழ்ச்சிதானே?

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



நிறுத்து சண்டையை!

ஒரு காட்டில் இரண்டு பெரிய யானைகள் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டே இருந்தன. எதற்கெடுத்தாலும் சண்டை. ஒருநாள் வழக்கம் போல் சண்டை ஆரம்பித்து விட்டது. சண்டையென்றால் கடுமையான சண்டை! இரண்டும் பயங்கரமாக மோதிக் கொண்டன. விலக்கச் சென்ற சிங்கம், புலி, சிறுத்தை, மற்ற யானைகளெல்லாம் உதை வாங்கிக் கொண்டு திரும்பின. என்ன சொல்லி, எப்படிச் சண்டையை நிறுத்துவது என்பது யாருக்கும் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் ஒரு சுண்டெலி யானைகளின் சண்டையைத் தான் தீர்ப்பதாகச் சொல்லிச் சென்றது. எல்லா மிருகங்களும் ஆவலோடு பார்த்தன. சுண்டெலி ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறி யானைகளின் கண்ணில் படும்படி வசதியாக உட்கார்ந்து கொண்டது.

"சண்டை போடுவதை யார் முதலில் நிறுத்துகிறீர்களோ அவர்களுக்கு ஒரு பரிசு தரப் போறேன். பரிசு என்றால் சாதாரணமான பரிசு அல்ல. அருமையான பரிசு" - இப்படி யானைகளைப் பார்த்துக் கூச்சலிட்டது சுண்டெலி.

சண்டையிடுவதை நிறுத்திவிட்டு சுண்டெலியை ஆச்சர்யத்துடன் பார்த்தன யானைகள் இரண்டும்.

"என்ன பரிசு? அதைச் சொல்லு முதல்ல?"

என்ன பரிசு என்பதை அறிய இரண்டு யானைகளும் தங்களை மறந்து சுண்டெலியை நோக்கின.

"அதுவா? யார் முதலில் சண்டையை நிறுத்துகிறீர்களோ அவர்கள் ஒருநாள் மட்டும் என் கொலுசைப் போட்டுக்கலாம்."

சொல்லிவிட்டு சுண்டெலி எடுத்தது ஓட்டம்!

யானைகள் சண்டையை மறந்தன. காரணம் அவை இரண்டும் அடக்க முடியாத ஆத்திரத்துடன் சுண்டெலியைத் துரத்திச் சென்றதுதான்!

- கே. பி. ஜோதிரஞ்சன்.

இந்தியாவின் ஞானவிளக்கு என்று போற்றப்படும் சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர். குருவின் ஒப்பற்ற கருத்துகளை உலகெங்கும் பரவச் செய்த மனிதநேயப் பண்பாளர். அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமயங்களின் பேரவையில் அவர் ஆற்றிய உரை, இந்தியாவைப் பற்றிய மேலைநாட்டு அறிஞர்களின் தவறான கருத்தை மாற்ற வைத்தது; இந்து மதத்தையும், விவேகானந்தரையும் உலகறிய வைத்தது. இராமகிருஷ்ணருக்கும் அவர் சார்ந்த ஆசிரமத்திற்கும் நண்பர்களுக்கும் மட்டுமே அறிமுகமான சாதாரணத் துறவியாக அமெரிக்கா சென்ற விவேகானந்தர் உலகம் புகழும் உன்னதத் துறவியாகத் திரும்பி வந்தார். அவர் தாயகம் திரும்பிய நூற்றாண்டு விழாவை நாடு கொண்டாடி வருகிறது. அவர் தாயகத்தில் இறங்கியது தமிழ்நாட்டில் என்பதைப் பற்றி நாம் பெருமை கொள்ளலாம். "விவேகானந்தரை ஏன் பிடிக்கும்?" என்று சில தம்பி தங்கையரிடம் கேட்டோம். அவர்கள் சொன்ன பதிலை நீங்களும் கேட்க வேண்டாமா?



விவேகானந்தரை ஏன் பிடிக்கும்?

அருப்புக்கோட்டை காந்தி வித்யாலய மேநிலைப் பள்ளியில் 9-ஆம் வகுப்பில் படித்து வருபவன் நான். இந்தியாவின் ஆன்மீகத் தலைவர்களுள் விவேகானந்தர் ஒப்பற்றவர்.

ஒரு சமயம் விவேகானந்தர் பாரதம் முழுதும் பாதயாத்திரையாகச் சென்றார். இந்த யாத்திரையின் நோக்கம் இந்திய மக்களின் உண்மையான வாழ்க்கை நிலையை நேரடியாகக் கண்டு அறிவது. அந்த முறையில் அவர் ஆள்வார் சமஸ்தானத்திற்கு வந்தார். இது ராஜபுதனத்தில் இருந்த சுயேச்சை இராஜ்யம். அதன் மன்னர் உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவர். இருந்தபோதிலும் விவேகானந்தரின் பெருமையைக் கேள்விப்பட்டு அவரைக் காண விரும்பினார். தன்னுடைய திவான் மூலம் அழைப்பு விடுத்தார். விவேகானந்தரும், அழைப்பை ஏற்று மன்னரைக் காண அரண்மனை வந்தார்.

இருவரும் நீண்ட நேரம் பேசினர். மன்னரின் பல சந்தேகங்களுக்கு சுவாமி



எத்தனை எளிமையாகப் புரிய வைத்தார்! - ஏ. நந்தகுமார்.

விளக்கமளித்துக் கொண்டே வந்தார். பேச்சு, உருவ வழிபாட்டைப் பற்றித் திரும்பியது. உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாத மன்னர் அதைப் பற்றிக் குறைத்துப் பேசினார். அது குறித்து சுவாமியின் கருத்தைக் கேட்டார். விவேகானந்தர் சுவரில் மாட்டப்பட்டிருந்த மன்னரின் போட்டோவைக் கழற்றி எடுத்து வரச் சொன்னார். திவானிடம் தந்து அதைக் கீழே போட்டு உடைக்கச் சொன்னார். அதன் மேல் காரி உமிழச் சொன்னார். அது மன்னருடைய தந்தையாரின் போட்டோ! யாருக்கு அவ்வாறு செய்யத் துணிவு வரும்? அனைவரும் பயந்து நின்றனர். "ஏன் பயப்படுகிறீர்கள்? இது வெறும் புகைப்படம்தானே? உண்மையாகவே மன்னரின் தந்தையா இதில் இருக்கிறார்?" என்று கேட்டார் சுவாமி. மற்றவர்கள் அதன் மீது தாங்கள் கொண்டிருந்த மதிப்பைக் கூறினார்கள். இப்போது மன்னருக்கு எல்லாம் புரிந்து விட்டது. உருவ வழிபாட்டின் உண்மையை அவர் புரிந்து கொண்டார். உருவ வழிபாடு அர்த்தமற்றது என்ற தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார் மன்னர். புரியாத ஒரு மிகப் பெரிய தத்துவத்தை எத்தனை எளிமையாகப் புரிய வைத்தார் சுவாமி!

ஒரு பெரிய உண்மையை எளிய விளக்கத்தால் புரிய வைத்த அவரது திறமை எனக்கு மிகவும் பிடிக்கிறது.

— ஏ. நந்தகுமார்

கல்லூரணியில் உள்ள எஸ்.பி.கே. மேல்நிலைப் பள்ளியில் 8-வது பயிலும் மாணவி நான். பொதுவாகக் கூட்டங்களில் பேசும்போது, 'பெரியோர்களே, தாய்மார்களே' என்று அழைத்துப் பேசுவதுதான் எல்லோரது வழக்கமும். மேலை நாடுகளில் சீமாட்டிகளே, சீமான்களே (LADIES AND GENTLEMEN) என்று அழைப்பார்கள். அப்புறம்தான், பேச வந்த பொருளைப் பற்றிப் பேசுவார்கள். தற்போதெல்லாம் மேடையில் பேசுபவர்கள், ஒவ்வொருவராகப் பெயரைச் சொல்லி, பட்டங்களைச் சொல்லி, தகுதி சொல்லிப் பேசி முடிக்க எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறார்கள் என்பதை நீங்களும் கவனித்திருப்பீர்கள். அமெரிக்காவில் பேசத் தொடங்கிய விவேகானந்தர் கூடியிருந்தவர்களை எப்படி அழைத்தார் தெரியுமா? அமெரிக்க சகோதர, சகோதரிகளே (SISTERS AND BROTHERS OF AMERICA) என்று அன்புடன் அழைத்துப்



உலக சகோதரத்துவத்தை வலியுறுத்திய விவேகானந்தரை யாருக்குத்தான் பிடிக்காது? - சொ. சிவசங்கரி.

பேச ஆரம்பித்தாராம்! இதுபோன்ற புதிய அழைப்பினை உலகுக்கு முதலில் தந்தவர் நம் சுவாமிதானே! இந்த முகப்புப் பேச்சைக் கேட்டதுமே கூடியிருந்தவர்கள், நீண்ட நேரம் கைதட்டி ஆர்ப்பரித்தனராம்! இப்படி உலக சகோதரத்துவத்தை வலியுறுத்திய நரேந்திரரை யாருக்குத்தான் பிடிக்காது? அங்கு வந்திருந்தவர்களில் மிகவும் இளையவர் இவர்தானாம்!

— சொ. சிவசங்கரி.

அருப்புக்கோட்டையில் உள்ள நகரவை நடுநிலைப் பள்ளியில் 8-ஆவது படிக்கும் மாணவன் நான். இந்து சமயத்தின் உயர்வை உலகறிய வைத்த பெருமைக்கு உரியவரான சுவாமி விவேகானந்



ஆரோக்கியமான உடல் மலிந்த சிந்தனைகளுக்கு இடம்தராது என்று கூறிய ஒரே துறவி!
- மோ. ஸ்டீபன் ஜெகன்.

தரின் தோற்றமே மனதைக் கவரவல்லது. காவித் துணிதான் என்றாலும் அதை அவர் அணிந்திருந்தவிதம் பொலிவு தரக்கூடியது. எத்தனை கம்பீரம்! காவி உடைக்கே பெருமைதரக்கூடியது அல்லவா அவர் தோற்றம்! எனக்குத் தெரிந்து, "உடல், தெய்வம் உறையும் ஆலயம். அதனால் உடலைத் தூய்மையாக; வலிமையாக வைத்திருப்பது அவசியம். ஆரோக்கியமான வலுவான உடல் மலிந்த சிந்தனைகளுக்கு இடம் தராது" என்று கூறிய ஒரே துறவி அவர்தான். இதே போல் நாட்டை நேசிக்கச் சொன்ன துறவியும் இவர்தான்.

- மோ. ஸ்டீபன் ஜெகன்.

அருப்புக்கோட்டை தேவாங்கர் பெண்கள் மேநிலைப் பள்ளியில் 8-வது பயிலும் மாணவி நான். சுவாமி விவேகானந்தருக்கு இளமையில 'பிலே' 'வீரேஸ்வர்' 'நரேன்' என்று பல பெயர்கள். இவைகளுள் எனக்கு 'வீரேஸ்வர்' என்ற பெயரே மிகவும் பிடிக்கிறது. சிறு வயதில் அவர் நம்மைப் போலவே எப்போதும் குறும்புத்தனமாக ஏதாவது ஆக்கபூர்வமான சேட்டைகளைச் செய்து கொண்டே இருப்பாராம். ஒருமுறை அவரும், அவரது தோழர்களும் வீட்டின் எதிரில் உள்ள ஒரு பெரிய மரத்தில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தனர். அவ்வழியாக ஒரு பெரியவர் வந்தார். அவர் குழந்தைகளைப் பார்த்து, "இந்த மரத்தில் ஏறி விளையாடாதீர்கள். இதில் ஒரு பேய் உள்ளது" என்றார். உடனே எல்லாக் குழந்தைகளும் பயந்து போய்க் குதித்து ஓடி விட்டனர். ஆனால் விவேகானந்தர் மட்டும் பயப்படவில்லை; ஓடவில்லை! தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்தார். பெரியவருக்கு அதிசயமாக இருந்தது. "நீ மட்டும் ஏன் இறங்கவில்லை?" என்று கேட்டதற்கு, "எனக்கு அந்தப் பேயைப் பார்க்க வேண்டும். அது தான் இறங்கவில்லை" என்று கூறினாராம் சிறுவர் விவேகானந்தர் தைரியமாக. ஒருமுறை நரேன் தன் தோழர்களுடன், வீட்டின் பின்புறமிருந்த பழைய சாமான் அறையில் தியானம் செய்து கொண்



சுவாமியின் அச்சமற்ற தன்மையும், துணிவும் எனக்கு மிகவும் பிடித்தவை!
- க. நந்தினி.

டிருந்தார். திடீரென ஒரு பாம்பு வந்தது. உடனே நரேனைத் தவிர எல்லோரும் பயந்து ஓடி விட்டனர். ஆனால் நரேன் மட்டும் தொடர்ந்து நீண்ட நேரம் தியானத்தில் இருந்தார். பின்புதான் தகவல்

அறிந்து தாய் புவனேஸ்வரி வந்து அழைத்துச் சென்றார்கள்!

— சு. நந்தினி.

அருப்புக்கோட்டை அல். அமீன் மேநிலைப் பள்ளியின் 8-ஆம் வகுப்பு மாணவன் நான். விவேகானந்தரின் சர்வ மத ஏற்பு என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. மத நல்லிணக்கம் என்று இன்று போதிக்கிறார்கள். அக்காலத்திலேயே சுவாமிஜி இதை வலியுறுத்தி வந்திருக்கிறார்! மதம், மனித உறவை வளர்ப்பது என்றார். மனிதனை இறைவனிடம் சேர்க்கும் பாலமும் இதுதான் என்றார். அவர் அமெரிக்கா



அவரது மதநல்லிணக்கமே எனக்குப் பிடித்து - சீ. முகமது இஸ்மாயில்.

சென்றது 'இந்து மதத்தைப்' பரப்ப என்று கூறுகிறார்கள். எனக்கு இன்னொன்றும் தோன்றுகிறது. பாரதம் மிகவும் வறுமையில் இருந்த காலம் அது. அதனால் வளர்ச்சியடைந்த மேலைநாடுகளில் நம் நாட்டின் வளர்ச்சிக்கு ஏதாவது வழி கிடைக்காதா என்றறியும் தாகம் அவருக்கு இருந்திருக்கும் என்றே எனக்குத் தோன்றுகிறது. சர்வ மத சம்மதத்தை வலியுறுத்தி வந்தார். ஒருமுறை மூன்று நண்பர்களை அழைத்து மூன்று அவரை விதை தந்து விதைக்கச் சொன்னார். ஒருவர் கிறிஸ்தவர், 2-வது முஸ்லீம், 3-வது இந்து. மூவரும் விதைத்தனர். முளை வந்தது. செடி முளைத்து கொடியானது. பூத்தது, காய்த்தது. மூன்று பேருடைய காய்களும் ஒன்றாகச் சமைக்கப்பட்டன. உண்ணுகின்ற போது யாராவது அதில் மாற்று ருசியைச் சொல்ல முடியுமா? அல்லது தனித்தனி காயாகத்தான் பிரிக்க முடியுமா? யார் உற்பத்தி செய்தாலும் விளைவும், ருசியும் பலனும் ஒன்றுதான். இது போலத்தான் மதமும் என்று உணர வைத்தார்!

விதை வளர, நீர், சூரியன், காற்று, மண், வானம் ஆகியவை உதவினவே, விதை செடியாக முளைத்ததா அல்லது உதவிய கூறுகள் செடியாக மாற்றினவா? இதை நாம் சிந்தித்து வாழ வேண்டும் என்றார் சுவாமி.


இன்று பேசப்படும் கருத்தை நூறு ஆண்டுகளுக்கு முன்பே துணிவாக எளிமையாக உணர்த்திய பெருமை சுவாமிஜிக்கே உரியது.

— சீ. முகமது இஸ்மாயில்.

அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. ஆண்கள் மேநிலைப் பள்ளியில் 8-ஆம் வகுப்பு மாணவி நான். விவேகானந்தர் அதிகமான நூல்களைக் கற்றவர். அன்னிய மொழியான ஆங்கிலத்தில், ஆங்கிலேயர்களே வியக்கும் அளவு புலமை பெற்றவர். மேலைநாட்டுப் பயணத்தில் அவர் 'பிரான்ஸ்' நாட்டுக்குப் போனார். அவருக்குப் பிரெஞ்சு மொழி தெரியாது. இந்து மதத்தின் பெருமைகளை அவர்

அவரது படிக்கும் திறமையும் அளவிட முடியாத ஞாபக சக்தியும்தான்!
- எம். வசந்தி





கொஞ்சம் கீழே!

ரெயிலில் ஓர் இந்தியர், ஓர் அமெரிக்கர், ஒரு ரஷ்யர் ஆக மூவர் ஒரே பெட்டியில் பயணம் செய்தனர். அவரவர் நாட் டின் சாதனையைப் பற்றி மூவரும் பேசிக் கொண்டே வந்தனர்.

"நாங்கள் நிலவுக்கே ஏவுகணை விடு கிறோம்" என்று அமெரிக்கர் பெருமை யோடு சொன்னார். "ஏவுகணை நிலவில் போய் மோதி விடுமே?" என்று இந்தியர் கேட்டார். "நிலவுக்கு என்றால்.... கொஞ் சம் கீழேதான்" என்றார் அமெரிக்கர்.

"நாங்கள் சூரியனுக்கே ஏவுகணை விடு கிறோம்" என்றார் ரஷியர். "ஏவுகணை சூரியனில் மோதி எரிந்து விடுமே?" என்று இந்தியர் கேட்டார். "சூரியனுக்கு என் றால்... கொஞ்சம் கீழேதான்" என்றார் ரஷியர்.

"ஆமாம், உங்கள் சாதனை என்ன?" என்று இந்தியரிடம் இருவரும் கேட்ட னர்.

"நாங்கள் மூக்கால் சாப்பிடுவோம்" என்றார் இந்தியர். "அது எப்படி! மூக் கால் எப்படிச் சாப்பிட முடியும்?" - ரஷிய ரும், அமெரிக்கரும் வியப்புடன் கேட்ட னர். இந்தியர் சொன்னார் "மூக்கால் என்றால்... கொஞ்சம் கீழேதான்!"

ரஷ்யரும், அமெரிக்கரும் அசந்தனர்.

— ஜெ. கதிரவன்,
பனமலைப்பேட்டை

களுக்கு உணர்த்த வேண்டும் என்றால் பிரெஞ்சு பேசத் தெரிவது அவசியம் என்பதை அவர் உணர்ந்தார். அதனால் ஒரே மாதத்தில் பிரெஞ்சு மொழியைப் பேசும் அளவுக்குக் கற்றுக் கொண்டா ராம்! எத்தனை திகைப்பாக இருக்கிறது!

விவேகானந்தர் பள்ளி நூலகத்தில் இருந்து பெரிய பெரிய புத்தகங்களை எடுத்துச் செல்வாராம். ஆனால், உட னேயே திரும்பவும் கொண்டு வந்து கொடுத்து விடுவாராம்! அவர் அவற்றைப படிக்கிறாரா அல்லது படம் பார்க்கிறாரா என்று நூலகருக்கு நீண்ட நாளாகச் சந்தே கம்.


அவரே விவேகானந்தரிடம் இதைப் பற்றிக் கேட்டார். தான் படித்துத் திருப் பித் தந்த எந்த ஒரு புத்தகத்திலிருந்து வேண்டுமானாலும் கேள்விகள் கேட்க லாம் என்று சொன்னார் சுவாமிஜி. நூலக ர் எடுத்தது என்சைக்ளோபீடியா எனும் கலைக் களஞ்சியம். அதில் ஒரு குறிப் பிட்ட பக்கத்தைத் திருப்பி அதில் என்ன இருக்கிறது என்று கேட்டார். உடன் விவே கானந்தர் மளமளவென்று அந்தப் பக்கத் தில் இருந்த அத்தனையையும் ஒன்று விடாமல் கூறினாராம்!

நாமெல்லாம் வார்த்தை வார்த்தை யாகத்தானே புத்தகங்களைப் படிக்கி றோம்? ஆனால் விவேகானந்தர் புத்தகங் களைப் பக்கம் பக்கமாகப் படிக்கும் பழக்கம் உள்ளவராம்! கேட்கும்போதே மலைப்பாக இருக்கிறது இல்லையா? விவே கானந்தரிடம் எனக்கு மிகவும் பிடித்தது அவரது படிக்கும் திறனும், அளவிட முடி யாத ஞாபகசக்தியும்தான்!

– எம். வசந்தி.

தயாரிப்பு புகைப்படங்கள் :
Dr. செந்தூரம்மாள்

எத்தனை குடைகள்?



1. குடைகள்?
2. பிரித்தவை?
3. பிரிக்காதவை?
4. வேறேதேனும் இருக்கிறதா?

கீதா

விடை: 1—11; 2—6; 3—5; 4 — வாக்கிங் ஸ்டிக்

பூணேரு!



காட்சி : 1

மீரா: ரதி! ரதி! எங்கே போறே ரதி?

ரதி : யார்? ஓ.. மீராவா?... சே.. நான் இந்தத் தெருவுக்கு குடி வந்ததே தப்பாப் போச்சு!...

மீரா : ஏன் ரதி...? நான் கூப்பிடும்போதெல்லாம் ஏன் இப்படி மூஞ்சியைக் கடுகடுப்பா வச்சுக்கறே? மத்தவங்ககிட்டே மட்டும் எவ்வளவு அன்போடு பேசறே, பழகறே!

ரதி : மீரா உன்னை எனக்குப் பிடிக்கல்லே...?

மீரா: ஏன் பிடிக்கல்லே ரதி?... நான் என்ன தப்பு செய்தேன்?

ரதி: நீ அழகாயில்லையே, அதான் தப்பு! உன்னோட ஒருகால் வளைஞ்சிருக்கு... நீ கறுப்பா இருக்கே... அதனால எனக்குப் பிடிக்கல்லே...

மீரா: இப்படி இருக்கறது என்னோட தப்பில்லை ரதி! நான் சின்னக் குழந்தையா இருந்தப்போ, எங்க அப்பா அம்மா எனக்குப் 'போலியோ' சொட்டு மருந்தைக் கொடுக்காம அலட்சியமா இருந்துட்டாங்களாம்! அதனாலதான் இளம் பிள்ளை வாத நோய் என்னைத் தாக்கி, ஒருகால் கொஞ்சம் வளைஞ்சு போச்சு... நான் கறுப்பா இருந்தா என்ன? நீதான் பேருக்கேத்த மாதிரி ரொம்ப அழகா இருக்கியே... இன்னிக்காவது 'கேரம் போர்டு' விளையாட வாயேன்!

ரதி: ம்!... உன்கூட விளையாடணுமா? உன்னோடு பேசினதே பெரிய விஷயம்!... உன்கூட யாரும் விளையாட வரமாட்டாங்க!... நான் வரேன்!

(ரதி சென்றதும், மீரா வீட்டு வழியே சுதா வருகிறாள்)

சுதா: ஏய் மீரா? என்ன ஆச்சு?.. ஏன் கண்ணைக் கசக்கிக்கிட்டு உட்கார்ந்துக்கிட்டிருக்கே?

மீரா: சுதாக்கா!... நான் அழகாயில்லையாம்! அதனால ரதிக்கு என்னைப் பிடிக்கலையாம். என்கூட யாரும் விளையாட வரமாட்டாங்களாம்! கேலியா பேசிட்டுப் போறா!

சுதா: மீரா!... ரதிக்கு, தான் ரொம்ப அழகாயிருக்கோம்கிற கர்வம்!... அதனாலதான் இப்படி அலட்டிக்கிறா... அவள் கர்வம் ஒருநாள். தன்னால அடங்கிடும்! நீ கவலைப் படாதே... வா... நாம ரெண்டு பேரும் கேரம் விளையாடலாம்!

காட்சி : 2

ரதி : சுதா!.... சுதா!

சுதா: வா! ரதி!

ரதி : அடேடே! என்ன சுதா இது?... நான் போன வாரம் வந்தப்போ இந்தப் பூவேலை அலங்காரங்கள் இங்கே இருந்ததா?

சுதா: இல்லை! ஒரு மாசமா தயார் செய்து, இன்னிக்குத்தான் வாசல் படியிலேயும், ஜன்னல் கன்னேயும் மாட்டியிருக்கேன்! எப்படி இருக்கு?

ரதி: அபாரம்!... அபாரம்!.... எல்லாம் கண்ணைப் பறிக்கறது... சுதா... ப்ளீஸ்! எனக்குக் கூட இப்படி துணியிலேயும், காகிதத்திலேயும் பூவேலை செஞ்சு அழகு பார்க்க ஆசையாயிருக்கு... எனக்கும் கத்துக் கொடுக்கறியா?

சுதா: ரதி! இதை எனக்குக் கற்றுக் கொடுத்தது உங்க தெருவிலேயே இருக்கிற மீராதான்! நீயும் மீராவிடமே கற்றுக் கொள்ளேன்! நன்றாகக் கற்றுத் தருவாள்!

ரதி: அது என்னால முடியாது!

சுதா: ஏன்?

ரதி: மீரா அழகில்லாதவள்! அவளை எனக்குப் பிடிக்காது!

சுதா: மீரா எவ்வளவு கெட்டிக்காரி தெரியுமா ரதி! அவள் இதுவரை எவ்வளவோ போட்டிகளில் கலந்துகொண்டு பல பரிசுகள்

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

வாங்கியிருக்கிறான்! மீரா ஜாதி மல்லிகைப் பூ மாதிரி! மல்லிகையைவிட தாமரைப் பூ அழகா இருக்கலாம்! ஆனால் ஜாதி மல்லிகையோட வாசனை தாமரைக்குக் கிடையாது! குயில் கறுப்புதான்! ஆனால் அழகான மயிலின் குரலைவிட, குயிலோட குரல்தான் இனிமையா இருக்கும்! அதனால மீராகிட்டே அன்புகாட்டு ரதி!

ரதி: (கோபத்துடன்) சுதா! உன்னோட புத்திமதி எனக்குத் தேவையில்லை, நான் வரேன்! (போகிறாள்)

காட்சி : 3

ரதி: விஜி! விஜி!

விஜி: ஓ!... வா ரதி! என்ன திடீர் விஜயம்?

ரதி: உனக்கு துணிகள்ளேயும், காகிதத்திலேயும் பூவேலைகள் செய்யத் தெரியுமா?

விஜி: தெரியாது ரதி! நம்ப சுதாவுக்கும் மீராவுக்கும்தான் நீ சொல்ற பூ அலங்காரம் தெரியும். ஆனா எனக்குக் கண்ணாடி மண்டபம் செய்யத் தெரியும்?... இதோ இதுதான்... எப்படியிருக்கு பாரு!... நானே என் கையால செய்தேன்!

ரதி: பிரமாதமா செய்திருக்கே விஜி! இதை உனக்கு யார் கத்துக் கொடுத்தாங்க?

விஜி: உங்க தெருவிலேயே இருக்கிற மீராதான்!

ரதி: ஓ! அவளா?... சரி, நீயே இதை எனக்கும் கத்துக் கொடேன்!

விஜி: நான் கத்துக் கொடுக்கறதைவிட, மீராவே கத்துக் கொடுத்தாதான் நல்லா செய்யவரும்! இதை செய்யறதிலே இன்னும் கூட எனக்குச் சந்தேகம் இருக்கு!... வரயா மீரா வீட்டுக்கு?

ரதி: வரல்லே... மீரா அழகில்லாதவ... அவளை எனக்குப் பிடிக்காது!

விஜி: என்ன ரதி சொல்றே? "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்"ங்கற குறளைப் படிச்சிருக்கிற நீயா இப்படிப் பேசறே?

ரதி: (கோபமாக) விஜி! நான் உன்னை புத்திமதி கேட்கல்லே... வரேன்!

காட்சி : 4

ரதி: கீதா!... கீதா!... என்ன படிச்சுக்கிட்டிருக்கே?

கீதா: 'நாலடியார்' படிச்சுக்கிட்டிருக்கேன்! வா ரதி! இப்படி உட்கார்!

ரதி: கீதா!... உனக்கு காகிதத்திலேயும், துணிகள்ளேயும் பூவேலை போடத் தெரியுமான்னு கேட்க வந்தேன்!

கீதா: பூ வேலையா?... எனக்குத் தெரியாது!

ரதி: கண்ணாடி மண்டபம்?

கீதா: அதுவும் தெரியாது!...ஆனா வேற ஒண்ணு தெரியும்!.... பூஜை அறைக்கு வா காட்டறேன்!

ரதி: ஆ!... ரங்கோலிக் கோலம்! ஹை! கொன்னுட்டே! 'பளிச்'சுன்னு எவ்வளவு அழகா போட்டிருக்கே?

கீதா: இதை எனக்குக் கத்துக் கொடுத்தது உங்க தெருவிலேயே இருக்கற மீராதான்! நீ மீராகிட்டே போய் கேட்டா போதும்! பொறுமையா சொல்லிக் கொடுப்பா...

ரதி: எனக்கு அதெல்லாம் தேவையில்லை! இந்த ரங்கோலியை மட்டும் எனக்குச் சொல்லிக் கொடு! போதும்!


கீதா: ஏன் மீராகிட்டே நீ பேச மாட்டியா?

ரதி: மாட்டேன்; அவளை எனக்குப் பிடிக்காது. அவள் அழகாயில்லே!

கீதா: ரதி! எல்லாரும் உன்னைமாதிரி அழகாயிருப்பாங்கன்னு எதிர்பார்க்காதே! உடல் அழகு முக்கியம் இல்லே... உள்ள அழகுதான் முக்கியம்!

ரதி: ஓ! நீயும் எனக்குப் புத்திமதி சொல்ல ஆரம்பிச்சுட்டியா?

கீதா: நான் சொல்லல்லே!... இதோ இந்த 'நாலடியார்' பாட்டிலேயும் சொல்லியிருக்கு! மயிர்முடியின் அழகும், மடிப்புள்ள ஆடையின் அழகும், முகப்பூச்சுகளால் வரும் அழகும் அழகாகாது! மனத்தில்



நாம் நற்குணமுடையவர்தானா என்று அறிந்து கொள்ள உதவும் கல்வியினாலுண்டாகும் அழகே அழகு என்கிறது - ரதி! உண்மை அழகு எதுன்னு நாலடியார்லேந்து புரிஞ்சுக்கிட்டியா? அதுமட்டுமில்லை ரதி! உடல் ஊனமுள்ளவங் களையும் மதிச்சு நடக்கப் பழகணும்கிற எண் ணத்திலேதான் நாம வருஷத்துக்கு ஒருநாள் மார்ச் மாதத்திலே 'உலக உடல்ஊனமுற்றோர் நாளைக் கொண்டாடிக்கிட்டு வரோம்! இப்பவாவது உன் எண்ணத்தை மாத்திக்க ரதி!

ரதி: சீதா! எனக்கு நீங்களும் வேண்டாம்! நாலடியாரும் உங்க புத்திமதியும் வேண்டாம்! வரேன்!

காட்சி : 5

ரதி: மீரா! மீரா!

மீரா: யாரு? ரதி! நீயா! வா! வா! உட்கார்! பத்து நாளா உன்னைப் பாக்கவேயில்லை!... அடேடே.... என்ன ரதி இது? உன் முகத்திலே எப்படி திடீர்னு இவ்வளவு தழும்பு? என்ன ஆச்சு?

ரதி: மீரா! நான் உன்னை அழகில்லாதவன்னு சொல்லி வெறுத்தேன்! கேலி பண்ணினேன்! அதுக்குச் சரியான தண்டனை கிடைச்சுட்டுது.

மீரா: (பதறி) ஏன்! என்ன நடந்தது ரதி?



வேண்டிக் கொள்வோம்!



அதுமட்டும் நம்மிடத்தில் இருந்து விட்டாலோ - வேண்டும்
அத்தனையும் இருப்பதுபோல நிறைவிருந்திடும்
அது மட்டும் நம்மிடத்தில் இல்லாவிட்டாலோ - வேறு
ஆயிரங்கள் இருந்தால்கூட பயன் இருக்காது

எதுஎது எது அந்த சர்வசக்தியோ - நன்றாய்
எண்ணிப் பார்த்து இரகசியமாய் எனக்குச்
சொல்லுங்கள்
அழிவினின்றும் நம்மைமீட்கும் கருவி அதுவாம் - பகை
அண்டிடாமல் நம்மைக் காக்கும் அரணும்
அதுவாம்

தீமை தரும் வழியில் அது செல்ல விடாதாம் - நன்மை
தேர்ந்தெடுத்து செய்வதற்கே ஊக்கம் தருமாம்
எதுஎது எது அந்த சர்வசக்தியோ - நன்றாய்
எண்ணிப் பார்த்து இரகசியமாய் எனக்குச்
சொல்லுங்கள்

அதுஅது உண்மையான அறிவு என்பது - குறள்
அற்புதமாய் அதனைப் பற்றி நிறையச் சொல்லுது
அந்த அறிவு நமக்குமிக வேண்டுமல்லவா? - எனில்
ஆண்டவனின் காலைப் பற்றி வேண்டிக்
கொள்ளுவோம்

- ரா.பொன்ராசன்

ரதி: எங்க வீட்டுப் பூனை பத்து நாளைக்கு முன்னால நாலு குட்டிகள் போட்டது. அந்த நாலுலே ஒரு குட்டி கறுப்பா இருந்தது. ஒரு கால் குட்டைக்கால்! பார்க்க அழகா இல்லே! அதை எனக்குப் பிடிக்கல்லே! அதனால அந்தக் குட்டியை ஒருநாள் தெருவிலே தூக்கிப் போட்டேன். அதைப் பார்த்த தாய்ப்பூனை என்மேல் பாய்ந்து, என் முகத்திலே கால் நகங்கள்னால நல்லா பிறாண்டிடுத்து. ஒரு வாரமா படுக்கையிலேயே இருந்தேன்! நேத்துதான் டாக்டர் கட்டை அவிழ்த்தார் மீரா!

மீரா: ரதி! அழாதே! தழும்புகள் நிச்சயம் சரியாயிடும்! உன் அழகான தோற்றத்திற்கு ஒண்ணும் ஆகாது!

ரதி: மீரா! உன்னை வெறுக்கறது தவறுன்னு சுதா சொன்னாள்! உருவத்தை கேலி செய்யக்கூடாதுன்னு விஜியும் சொன்னாள்! திருக்குறளையும் எடுத்துச் சொன்னாள்! 'உண்மையான அழகு உருவம் இல்லே; கல்விதான்'னு நாலடியார், திருக்குறள் சொன்னதையும் கேட்காத, எனக்கு. கடைசியிலே எங்க வீட்டுப் பூனையே சரியான பாடம் கற்பிச்சுட்டுது! என்னை மன்னிச்சுடு மீரா!

மீரா: ரதி!... நீ பூ வேலை கத்துக்கவும்; ரங்கோலிக் கோலம் கத்துக்கவும்; கண்ணாடி மண்டபம் செய்யக் கத்துக்கவும் ஆசைப்பட்டதா சுதாவும், விஜியும், கீதாவும் சொன்னாங்க... மொதல்ல எதைக் கத்துக்கப் போறே சொல்லு? இப்பவே கத்துக் கொடுக்கறேன்!

ரதி: நீ எதையும் கத்துக் கொடுக்க வேணாம் மீரா!

மீரா: ஏன், மறுபடியும் என் மேல கோபமா?

ரதி: இல்லை! மொதல்ல - நாம ரெண்டு பேரும் - இப்பவே - 'கேரம் போர்டு' விளையாடப் போறோம்! அப்புறம் மாலை நான்கு மணிக்கு...

மீரா: 'பூ வேலை''யை கத்துக்கறியா?

ரதி: இல்லை! ''உலக ஊனமுற்றோர் தின'' விழாவிலே கலந்துக்கப் போகப் போறோம்!

மீரா: சபாஷ் ரதி! வா கேரம் விளையாடுவோம்!

ரூபாய் எங்கே?

வி.ர. வசந்தன்

7. தோளில் விழுந்த கை!

அன்று அமாவாசைக்குப் பின் மூன்றாம் நாள். வானத்தில் ஒட்டிக் கொண்டிருந்த பிறைச்சந்திரன் மேற்குத் திசையில் மறைந்து கொள்ள எங்கும் ஒரே இருள்.

ஆண்டிறுதித் தேர்வுக்கு இன்னும் இரண்டு மாதங்களே இருந்ததால் விடுதியில் இருந்த சிறுவர்கள் எல்லாம் இரவு வெகு நேரம் கண்விழித்துப் படித்துவிட்டு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். எல்லா அறைகளிலுமே விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. நேரம் நடு சாமத்தை எட்டிய அந்த வேளையில், மனோகரன் படுக்கையில் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். பார்வையைச் சுற்றிலும் ஓடவிட்டான்.


வானத்தில் வைரக் கற்களாய்க் கண்சிமிட்டிய நட்சத்திரங்களின் மெல்லிய ஒளியில், உதயன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

மெதுவாக நடந்து கதவை ஓசைப்படாமல் திறந்து வெளியே வந்த மனோகரன் விரைவாக இருட்டுக்குள் புகுந்து நடக்கலானான்.

காய்கறித் தோட்டங்களைக் கடந்து விடுவிடென்று நடந்தவன், இரவில் மாடுகளை அடைக்கும் அந்த மிகப் பெரிய தொழுவத்தின் அருகில் வந்தான். அங்கே அவனுக்குப் பெரும் வியப்புக் காத்திருந்தது.

தொழுவத்தினுள், தலையில் முண்டாசு கட்டிய இருவர் நின்று கொண்டிருந்தனர். 'முணுக், முணுக்'கென்று எரிந்த மின்சார விளக்கில் அவர்களை யார் என்பதை அடையாளம் கண்டு கொள்ள அவனால் இயலவில்லை. மாடுகளைக் கவனித்துக் கொள்ளப் பக்கத்து கிராமத்தில் இருந்து வரும் வேலையாட்கள் இரவு எட்டு மணிக்குள் திரும்பிப் போய் விடுவார்கள். அப்படியென்றால் இவர்கள் யார்?

மனோகரன் மெதுவாக இன்னும் சற்று நெருங்கி வந்தான். அவர்கள் அந்தப் பக்கம் திரும்பி நின்றதால் முகம் தெரியவில்லை. மாடுகளின் 'ம்மா... ம்மா' என்ற



சப்தத்திலும், கால்களை மாற்றி மாற்றிப் போடுகிற ஓசையிலும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதும் காதில் விழவில்லை. இருட்டோடு நகர்ந்து, அவர்கள் நின்ற இடத்தின் அருகில் வந்து ஒரு மரத்தடியில் மறைந்து கொண்டு கவனித்தான். மிகத் தீவிரமாக அவர்கள் என்னவோ பேசினார்கள்.

சற்றைக்கெல்லாம் அதில் ஒருவன் ஒரு மாட்டை அவிழ்த்து ஓட்டிக் கொண்டு இருட்டுக்குள் நடந்தான். இரண்டு மூன்று முறை அந்த மாடு பெருங்குரலில் கத்தியது. இரவின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு பயங்கரமாக ஒலித்தது. அது அவன் வெளிவாசலைத் தவிர்த்து எதிர்ப்புறமாக மாட்டோடு சென்றான்.

மனோகரன் திடுக்கிட்டுப் போனான். இவர்கள் மாட்டைத் திருடிச் செல்கிறார்கள்! இதை எப்படித் தடுப்பது? வெளியே இருக்கும் இரவு காவலாளியிடம் சொல்லி விடலாம் என்று நினைத்து அவன் திரும்பியபோது, தொழுவத்தில் முண்டாசு கட்டிக் கொண்டு நின்ற மற்றொருவனின் முகத்தில் மின்சார விளக்கின் வெளிச்சம் விழுந்தது.

மனோகரன் திகைத்து நின்றான். காரணம், அந்த மனிதன் வேறுயாருமல்ல விடுதி வார்டன் வைரவநாதன்தான்! அவர் அங்கிருந்து சென்றதும், தான் மறைந்திருந்த மரத்தடியிலிருந்து வெளியே வந்த மனோ, என்ன செய்வது என்று தெரியாமல் ஒருகணம் குழம்பி நின்றான். இந்தப் பாதகச் செயலை வார்டனே செய்கிறார் என்றால் என்ன சொல்வது?

அவன் ஒரு முடிவுடன் விடுதியை நோக்கி நடக்க முற்பட்டபோது, பின்னாலிருந்து ஒரு முரட்டுக்கரம் சட்டென்று அவன் தோளில் விழுந்து சட்டையைப் பற்றி இழுத்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் அவன். காளிமுத்து நின்று கொண்டிருந்தான்!

அவன் முகத்தில் தாண்டவமாடிய கோபமும், ஆவேசமும் மனோகரனுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. காளிமுத்து பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு அடிக்குரலில், "அடேய், மாட்டை வார்டன் வித்துட்டார்னு அந்த வெள்ளக்காரிக்கிட்ட சொல்லாதே... சொன்னே, அப்புறம் நடக்கறதே வேற" என்று அடிக்குரலில் மிரட்டினான்.

அவனது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட மனோகரன், "வார்டனே இந்தக் காரியத்தைச் செய்தால் அப்புறம் இங்க என்னதான் நடக்காது...? தன்னை நம்பிப் பொறுப்பை ஒப்படைச்சிருக்கற அம்மாவுக்கு, இப்படித் துரோகம் செய்யலாமா?" என்று கேட்டான் கொதிப்புடன்.

"டேய்... இதுல என்னடா பெரிய துரோகத்தைக் கண்டுட்ட? ...அந்தக் கிழவி மட்டும் நமக்கு வரும் பணத்தை ஏமாற்றி, சுகமா இருக்கலாம். வார்டன் மட்டும் இல்லாத கொடுமைக்கு மாட்டை விக்கக் கூடாதாக்கும்?" என்று அலட்சியமாகக் கேட்டான் காளிமுத்து.


"நீ புரியாம பேசாதே காளிமுத்து... அப்படித் தனக்கு உரிமையில்லாத எந்தப் பொருள் மேலேயும் அம்மா ஆசைப்படக் கூட மாட்டாங்க... வரப் போகிற வெயில் காலத்தை சமாளிக்க என்ன வழின்னு தெரியாம, அவங்க ராவும், பகலும் கவலையோடு யோசிச்சுட்டு இருக்காங்க... இந்த நேரத்துல இப்படி ஆளுக்கு ஆள் திருட்டு வேலை செய்தா என்ன ஆகும்னு கொஞ்சம் யோசிச்சுப்பாரு."

அவன் சொன்னதைக் கேட்ட காளிமுத்து, "வார்டன் சார் வீட்ல எவ்வளவு

கஷ்டம் இருக்குன்னு உனக்குத் தெரியுமா...? இந்தக் கிழவி தரும் கொஞ்ச சம்பளத்துல நாலு பிள்ளைகளைப் படிக்க வைப்பாரா? தாயாருக்கு வைத்தியம் செய்வாரா? சாப்பாட்டுக்குச் செலவழிப்பாரா? இதெல்லாம் அந்தக் கிழவிக்குப் புரியாது... அப்புறம் திருடாம அவர் என்ன செய்வாரு?'' என்றவன், சந்தேகத்துடன் மனோகரனைப் பார்த்தான். கண்களைச் சுருக்கியவாறு, "எல்லாம் சரி, இந்த நேரத்துல நீ எதுக்கு இங்க வந்தே?'' என்று அதட்டலாகக் கேட்டான் மனோவிடம்.

அந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பாராத மனோகரன், என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஒரு வினாடி சற்று விழித்தான். ஆனாலும், உடனேயே





சமாளித்துக் கொண்டு, "நான் வந்தது இருக்கட்டும்... நீ இங்க எதுக்கு வந்தே? அதைச் சொல்லு?" என்று திருப்பிக் கேட் டான் தைரியமாக.

காளிமுத்துவுக்குப் பொல்லாத கோபம் வந்தது. ஆத்திரத்துடன் காலைத் தரையில் ஓங்கி உதைத்தவன், "இதைப் பற்றி உனக்கென்னடா?" என்று சீறினான்.

"அப்படின்னா, நான் வந்த காரியத்தைப் பற்றி நீயும் ஒண்ணும் கேட்க வேண்டியதில்லை" என்றான் மனோகரன் மிகவும் துணிவாக.

"அந்த வெள்ளக்காரிக்கு வேவு பார்க்கிற வேலையை நீ விட மாட்டே. அப்படித்தானே?" என்று கண்களில் தீப் பொறி பறக்க மனோகரனைப் பார்த்து உருட்டி விழித்தான் காளிமுத்து.

"விட்டுடறேன்... நீயும், வார்டனும் என்றைக்கு இந்தத் திருட்டு வேலையை விடறீங்களோ, அன்னிக்கே நானும் இந்த வேலையை விட்டுடறேன்" என்ற மனோகரன், மேலும் அவனோடு பேச விரும்பாமல் 'விருட்'டென்று திரும்பி நடந்தான்.

"டேய், மரியாதையா உன் வேலையைப் பார்த்துட்டுப் போ. என்னை அனாவசியமா பொல்லாதவனாக்காதே" என்று பின்னாலிருந்து காளிமுத்து எச்சரித்துக் கத்துவது அவன் காதில் விழுந்தது.

ஆண்டிறுதித் தேர்வுகள் எல்லாம் முடிவடைந்து விட்டன. தேர்வுகளை நன்றாகச் செய்திருந்ததால் உதயனின் மனம் மிகவும் உற்சாகத்தோடிருந்தது. அவனிடம் எப்படியும் படித்து முன்னேற வேண்டும் என்ற துடிப்பு எப்போதும் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்ததால் கருணை இல்லத்தின் வாழ்க்கையை அவன் விரும்பி ஏற்றுக் கொண்டான். ஆனாலும் சுதந்திரப் பறவை போல் கட்டுப்பாடற்றுப் பறந்து திரிந்த பழைய கடலோர வாழ்க்கை அடிக்கடி அவன் மனத்தில் தோன்றி அவனை ஏங்கத்தான் வைத்தது.

தென்னந்தோப்பில் குப்பத்துச் சிறுவர்களுடன் கிட்டிப்புள் அடித்து விளையாடியதையும், தென்னை மரங்களில் காய்த்துக் குலுங்கும் இளநீரை வெட்டி ஆசைதீரப் பருகி மகிழ்ந்ததையும், ஒரு ரூபாய்க்கு அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டு மணலில் உட்கார்ந்து டூரிங் கொட்டகையில் திரைப்படம் பார்த்துக் களித்ததையும் அவனால் அவ்வளவு சுலபத்தில் மறக்க இயலவில்லை.

ஆனால் கருணையில்லத்தின் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. கட்டுப்பாடு, உழைப்பு, படிப்பு இதை விட்டால் வேறு ஒன்றும் இல்லை. இப் போது தேர்வுகள் வேறு முடிவடைந்து விட்டதால், அவன் மனம் பழைய வாழ்க்கையை எண்ணி ஏங்கித் தவித்தது.

கடுமையான கோடை காலம் ஆரம்பித்து விட்டதால் தண்ணீர் வறட்சி தலைவிரித்து ஆடியது. பச்சைப் பசேலென்று காட்சியளித்த காய்கறித் தோட்டமெல்லாம் களையிழந்து போய்க் கிடந்தன. அந்த நிலங்களைச் செப்பனிட்டு, உரமிடும் வேலைகளைத் தவிர, வேறு வேலையுமில்லை. பொழுதுபோகாமல் அவன் தவித்துக் கொண்டிருந்தான்.

அவன் அறை ஜன்னல் வழியே விருட்டென்று தலையை உள்ளே நுழைத்த காளிமுத்து, "என்ன உதயா, நல்லாருக்கியா?" என்று கேட்டான்.

இந்தக் கருணையில்லத்தின் கட்டுப்பாடுகளை மீறி இவனால் மட்டும் எப்படி சுதந்திரமாக இருக்க முடிகிறது என்பது தான் உதயனுக்குப் புரியாத புதிராக இருந்தது. எத்தனையோ தடவை மனோகரனிடமும் இதைப் பற்றி அவன் கேட்டிருக்கிறான். ஆனால் காளிமுத்துவிடம் ஜாக்கிரதையாக இருக்கும்படி அவன் எச்சரித்திருக்கிறானே தவிர, அவன் ஏற்கும் வகையில் வேறு எதுவும் சொல்லியதில்லை.

உதயன் பதில் எதுவும் பேசாமல் இருப்பதைக் கவனித்த காளிமுத்து, "அந்த மனோகரன் பயல் இல்லை போலிருக்கே?" என்று கேட்டவாறே உள்ளே வந்து, அவனருகில் அமர்ந்தான்.

எதற்கு அவன் வந்திருக்கிறான் என்று புரியாத உதயன், "என்ன வேணும் காளிமுத்து?" என்று கேட்டான்.

"அட! சும்மா வரக் கூடாதா உதயா? உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சே, சும்மா பார்த்துட்டு போகலாம்னுதான் வந்தேன்.. பொழுதுபோகாம உட்கார்ந்திருக்கியே? கொஞ்சம் பேசிட்டுப் போகலாம்னு நினைச்சேன்?"

"ஆமா, காளிமுத்து பொழுதே போக மாட்டேங்குது. அம்மாவிடம் அனுமதி வாங்கிக்கிட்டு, ஆழிக்குப்பத்துக்குப் போயிட்டு வரலாமான்னு கூட நெனைக்கிறேன்... ஆசை தீரக் கடல்ல விளையாடணும்னு மனசு ஏங்குது... பழைய இடங்களையும், பழகிய சினேகிதர்களையும் பார்த்து ரொம்ப நாளாச்சே?" என்றான் உதயன் உண்மையான ஏக்கத்துடன்.

காளிமுத்து அவன் முகத்தை உற்றுநோக்கினான். "இன்னிக்குத்தான் அம்மா ஊர்ல இல்லியே...? இது உனக்குத் தெரியாதா? சொந்த ஊருக்கெல்லாம் போகணும்னா அம்மாகிட்டத்தான் அனுமதி வாங்கியாகணும்" என்றவாறு உதயனின் முகத்தை ஆராய்ந்தான் காளிமுத்து.

உதயனின் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது. அதைக் கவனித்த காளிமுத்து, "உதயா, இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை தானே...? வாயேன் டவுனுக்குப் போயிட்டு வரலாம், வர்றியா?" என்று கேட்டான்.

"டவுனுக்கு எதுக்கு காளிமுத்து?"

"புடலங்கா வாங்க...! அட போப்பா, டவுனுக்கு எதுக்கு போவாங்க...? நல்ல சினிமா எல்லாம் வந்திருக்காம்... பாத்துட்டு கொஞ்ச நேரம் ஜாலியா சுத்திட்டு வரத்தான்."


உதயன் தயங்கினான். "அனுமதி இல்லாம வெளியே போகக் கூடாதுன்னு அம்மா சொல்லியிருக்காங்க இல்ல?"

"அனுமதிதானே வேணும்? நான் வார்டன்சார்கிட்ட வாங்கித் தர்றேன்" என்றான் காளிமுத்து நயமாக.

உதயனின் மனம் ஆசையால் நிறைந்தது. "வார்டன் சார் அனுமதி தருவாரா?" என்று ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தான்.

"அதைப் பற்றி நீ கவலைப்படாதே... இதோ ஒரு நிமிஷத்துல வரேன்" என்று வேகமாக வெளியே சென்ற காளிமுத்து, சற்று நேரத்தில் வார்டனின் அனுமதியோடு திரும்பி வந்தான்! அதற்கு மேல் உதயன் விவாதிக்கவில்லை.

இருவரும் பஸ் பிடித்து டவுனுக்கு வந்து சேர்ந்தனர். சிறைச்சாலைக்குள்ளிருந்து வெளியே வந்தது போன்ற



குழந்தைக் கவிஞர்

அப்பா என்றால் அப்பாதான்
அவரே வள்ளி யப்பாவாம்
இப்பா ரதத்தில் குழந்தைகளின்
இலக்கியம் வளர்ந்த அப்பாவாம்

குழந்தைக் கவிஞர் பெயரினிலே
குன்றாக் கவிதை பலபாடி
மழலைக் கவிகளின் செம்மலென
மங்காப் புகழைப் பெற்றவராம்.

நாளைய தலைமுறை நலமுடனே
நன்றாய்த் திகழ வேண்டுமென
இளையவர் இலக்கியத் துறையினிலே
இனிமையாய்ப் பாடிய ஒரு கவிஞர்

தமிழின் பேரவைச் செம்மலெனத்
தந்தது பல்கலைக் கழகமுமே
அமிழ்தினு மினிய செந்தமிழில்
அழகாய் பாடிய நற்கவிஞர்

கள்ளம் இல்லாக் குழந்தைகளின்
கனவில் சுற்றும் அவரேதான்
பிள்ளைக் கவிகளின் அரசு எனப்
பெரிதும் போற்றும் மன்னவராம்.

- பால நடராஜன்

உணர்வு ஏற்பட்டது உதயனுக்கு! காய்கறித் தோட்டமும், மாட்டுக் கொட்டிலும், பாடப் புத்தகங்களையும் தவிர அங்கு வேறென்ன இருக்கிறது என்று அவன் மனம் எண்ணமிட்டது.

காளிமுத்து அவனை ஒரு நவீன ஆடம்பர உணவு விடுதிக்கு அழைத்துப் போனான். அங்கிருந்த மின்விளக்கு அலங்காரங்களையும், செயற்கை நீரூற்றுகளையும் பார்த்து பிரமித்தான் உதயன். காளிமுத்து விதவிதமான சிற்றுண்டிகளையும், ஐஸ்கிரீம்களையும் வரவழைத்தான். இருவரும் உண்டுமகிழ்ந்தனர். "இந்த ஆடம்பரச் செலவுகளுக்கெல்லாம் இவனுக்கு எப்படிப் பணம் கிடைக்கிறது!" என்ற கேள்வி உதயனின் மனதைக் நடைந்து கொண்டே இருந்தது.

திரைப்படக் கொட்டகையில் அப்படியொரு கூட்டம். ஏதோ புதிதாக வந்திருந்த படமாதலால், டிக்கெட் எல்லாம் விற்றுப் போய் விட்டன. பத்து ரூபாய் டிக்கெட்டை இருபது ரூபாய் என்று சிலர் திருட்டுத்தனமாக விற்றுக் கொண்டிருந்தனர். காளிமுத்து சற்றும் தயங்காமல் அந்த டிக்கெட்டுகளை வாங்கினான். இருவரும் திரைப்பட அரங்கினுள் நுழைந்தனர். பிரம்மாண்டமான அந்த அரங்கின் அழகைப் பார்த்து பிரமித்தான் உதயன். ஆழிக்குப்பத்திலுள்ள டூரிங் ஓலைக் கொட்டகை அவன் நினைவுக்கு வந்தது.

நிச்சயமாகவே உதயனைப் பொறுத்த வரையில் அவன் இதுவரை கண்டிராத ஒரு புதிய உலகம்தான் அது! வானளாவிய கட்டிடங்களும், தொடர்ந்து ஓடும் மோட்டார் வாகனங்களும், கேளிக்கை விளையாட்டுகளும், இனிமையான பொழுது போக்குகளும் நிறைந்த அதிசய உலகம். காற்றையும், கடலையும், மழையையுமே பார்த்துப் பழகிய உதயனின் கண்கள் இந்தப் புதிய சூழலைப் பெரிதும் ரசித்தன. அவன் மனம் உல்லாசத்தில் மிதந்தது.

காளிமுத்து அவன் தோளில் உரிமையுடன் கையைப் போட்டுக் கொண்டான். "உதயா, கருணையில்லத்துக்கு வெளியே உலகம் எப்படி இருக்குன்னு இப்பவாவது தெரிஞ்சுக்க.... மார்கரெட் கிழவி நம்மை அடிமை வேலை வாங்கி, நாலு சுவருக்குள்ள சிறைப்படுத்தி வச்சிருக்கா... அதுல



பாப்பா... பாப்பா... ஆடு - துள்ளும்
பார், பார் வெள்ளை ஆடு!

பழகிப் பழகிக் கூடு - மரத்தில்
பறவை தங்கும் கூடு!

பாலில் படரும் ஏடு - நீ
படிப்பாய் அறிவியல் ஏடு!

பாயும் முயலாம் ஓடு - தூக்கிப்
போட்டால் உடையும் ஓடு!

தமிழில் பேச நாடு - நம்
தாயகம் இந்திய நாடு!

- அரிமதி தென்னகன்.

இருந்து கொஞ்ச நேரமாவது விடுதலையா இருக்கலாமேன்னுதான் உன்னை இங்க கூட்டிட்டு வந்தேன்" என்றான் தோழமை உணர்வுடன்.

காளிமுத்து சொல்வது எல்லாம் உண்மையென்றே இப்பொழுது முதல் முறையாக உதயனுக்கும் பட்டது! மனோகரனைப் போன்ற கோழைகளோடு பழகுவதை விட, காளிமுத்துவோடு சேர்ந்தால், தானும் அவனைப் போலவே சந்தோஷமாக இருக்கலாம் என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. ஆனாலும் கூடவே, ஏதோவொரு பயமும் மனதுக்குள் ஆக்கிரமித்துப் படரத்தான் செய்தது.

திரைப்படம் முடிந்து பஸ் பிடித்து இருவரும் விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில், இதுவரை தன் மனதை உறுத்திக் கொண்டிருந்த சந்தேகத்தைக் காளிமுத்துவிடம் மெதுவாகக் கேட்டான் உதயன்.

"இன்னிக்கு இவ்வளவு பணம் செலவு செஞ்சியே, உனக்கு எப்படிப் பணம் கிடைக்குது?"

அதைக் கேட்டதும் காளிமுத்து கலகலவென்று சிரித்தான். "எல்லாம் என்னுடைய உழைப்புக்குக் கிடைக்கிற சம்பளந்தான்... நீங்க காய்கறித் தோட்டத்துல அடிமை வேலை செய்யறீங்க. நான் சுதந்திரமா சம்பாதிக்கறேன்... இதுக்கு மேல, இதைப் பற்றி அதிகமாக எதுவும் கேட்காதே" என்றான்.

உதயனுக்குப் புரியவில்லை. ஆனாலும் பிறகு விளக்கமாகக் கேட்டுக் கொள்ளலாம் என்று பேசாதிருந்தான்.


அன்றும் நள்ளிரவுக்கு மேல் தன் அறையிலிருந்து வெளிவந்த மனோகரன், பூனை போல நடந்து மாடிப்படிகளில் ஏறினான். மூன்றாம் மாடியில் ஐம்பதாம் எண் அறையை அடைந்தவன் ஜன்னல் வழியே மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தான். காளிமுத்துவின் படுக்கை காலியாக இருந்தது! அதை எதிர்பார்த்தவனாகத் தோன்றிய அவன் விடுவிடென்று சமையல் அறைப்பக்கம் விரைந்தான்.

அதன் பக்கத்திலிருந்த தானியங்கள் சேமித்து வைக்கும் அறையின் கதவு திறந்திருந்தது தெரிந்தது. மறைந்து கொண்டு கவனித்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அந்த அறையினுள்ளிருந்து ஒரு பெரிய மூட்டையுடன் வெளிப்பட்ட காளிமுத்து சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு, ஜாக்கிரதையாகக் கதவைப் பூட்டி, சாவியைத் தன் பையில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

மறுநிமிடம் அந்த மூட்டையைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு, அடிக்கொருதரம் திரும்பிப் பார்த்தவாறு பின்புறமாக, தோட்டவழியாக வேகமாக நடக்கலானான் காளிமுத்து!

(தொடரும்)



முன் மாதிரி!

மணி பால்கனியில் உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். கீழே, சிறுவர்கள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். அவன் நேற்றுத்தான் அந்தக் குடியிருப்பிற்கு வந்திருந்தான். அவன் அப்பாவிற்குத் திருச்சியில் இருந்து சென்னைக்கு மாற்றலாகி இருந்தது. அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் மொத்தம் நாற்பது குடும்பங்கள், ஐந்து பிளாக்குகள். ஒவ்வொன்றும் நான்கு மாடி. மணியிருப்பது "பி" பிளாக். மூன்றாவது மாடி.

மணிக்கு அந்தப் பிளாட்டைப் பிடித்து விட்டது. ஆனால் ஒரு குறை... மாதிரிக்குக் கூட ஒரு செடி இல்லை. "இருக்கும் மண் தரையை ஏன் இப்படிப் பயன்படுத்தாமல் விட்டிருக்கிறார்கள்?" யோசித்தான். சில நாட்கள் கழிந்தன... மணிக்கு உடன் பிறந்தவன் இல்லாதக் குறையைப் போக்கி விட்டான் குகன். இருவரும் இணைபிரியா சகோதரர்கள் ஆகி விட்டார்கள்.

ஒரு நாள்....

"குகா! நானும் ரொம்ப நாளா கேட்கணும், கேட்கணும் என்று நினைச்சுட்டிருந்தேன். நம்ம பிளாட்ல ஏன் செடி, கொடி இல்லை?" - கேட்டது மணிதான்.

குகன் அந்தக் குடியிருப்பு கட்டியது முதல் அங்கு வசித்து வருகிறான்.

"இல்லை மணி... முதல்ல செடியெல்லாம் போட்டாங்க... அப்பறம் யாரும் சரியா கவனிக்கல. எல்லோர் வீட்டுலும் கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போறவங்க..."

"பெரியவங்க இருக்கட்டும்! நாமெல்லாம் சேர்ந்து செய்யலாமே?!"

ஆர்வம் குறையாமல் கேட்டான் மணி.

"அதெல்லாம் சரியா வருமா தெரியலை! இருந்தாலும் உனக்கு உதவியா நான் இருப்பேன்" என்றான் குகன்.

மறுநாள்... அந்தக் குடியிருப்பில் இருந்த சிறுவர், சிறுமிகளை அழைத்துப் பேசினான் மணி. சிலர் தயங்கினர். "விதை வாங்க காசு வேணுமே" என்றான் கணேஷ். "வீட்டுப் பாடம்... விளையாட்டு... இதெல்லாம் பாதிக்கலைன்னா நான் வருவேன்" - இது நவநீதன்.

எப்படியோ மணியின் யோசனை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. குகனின் ஆலோசனைப்படி சிறுவர்கள் அந்தக் குடியிருப்பின் சங்கத் தலைவரைக் கலந்து பேசினார்.

"தம்பிகளே! நீங்க செடி, கொடிகளை வைங்க... ஆனால் அதை வளர்ப்பது, பாதுகாப்பது உங்க பொறுப்புதான். ஆடு, மாடுகள் வராம பாத்துக்கணும். வேளா வேளைக்குத் தண்ணி விடணும்." என்றார் சங்கத் தலைவர்.

"நாங்க பார்த்துக் கொள்கிறோம்" என்று எல்லாச் சிறுவர்களும் உற்சாக மாகச் சொன்னார்கள்.

மணி தலைமையில் சிறுவர் பட்டாளம் உற்சாகமாக வேலை செய்தது. பரணில் தூங்கிக் கொண்டிருந்த கடப்பாரை, மண்வெட்டி, பூவாளிகள் கீழே இறக்கப் பட்டன. பூச்செடிகள், கீரை, கத்திரி, வெண்டை... நுழைவாயிலில் அசோக மரம் இரண்டு... என்று திட்டமிடப்பட்டது.

ஒருநாள்... "உங்க பாக்கெட் மணியை என்ன செய்யறீங்க?" என்று மணி நண்பர்களைக் கேட்டான்.

"நான் புத்தகங்கள் வாங்குவேன்" என்றான் கண்ணன். "சினிமா... ஐஸ்கிரீம்..."- கணேஷ். ஒவ்வொருவரும் ஒவ்வொரு செலவு செய்வதாகச் சொன்னார்கள்.

"நம்ம பிளாட்ல இருக்கிற கொஞ்ச மண் இடத்துல செடியெல்லாம் போட்டாச்சு. இனிமே குரோட்டன்ஸ், ரோஜா இதெல்லாம் மண்தொட்டில போடலாம்.

ஜமதக்னி



எல்லோரும் அவங்க அவங்க செலவைக் குறைச்சுக்கிட்டா நிறைய மண்தொட்டி வாங்கலாம். உரம், விதை வாங்கலாம்!" மணியின் யோசனை எல்லோருக்கும் பிடித்தது.

சில நாட்கள் சென்றன.

சிறுவர்கள் தினமும் மாலையில் பள்ளியிலிருந்து திரும்பியதும் அரைமணி நேரம் தோட்ட வேலையில் ஈடுபடுவார்கள். கிட்டத்தட்ட ஓர் ஆண்டு ஆகியிருக்கும். சிறுவர்களின் உற்சாகம் குறையவே இல்லை. அந்தக் குடியிருப்பைக் கண்ணுக்குக் குளிர்ச்சியாக மாற்றி விட்டனர். இப்பொழுது அதற்கு ஒரு புதுக் களையும் பொலிவும் வந்து விட்டது! அழகான பாத்திகள்... அதில் கத்திரி... வெண்டை... தக்காளி. பால்கனியில் மண்தொட்டிகள்... ரோஜா, குரோட்டன்ஸ் வகைகள். ஓரங் களில் பூச் செடிகள் அரளி... செம்பருத்தி... வாசலில் முகப்பில் அசோக மரம். குடியிருப்பு வெளியில் இரண்டு வேப்ப மரங்கள்... என்று புதுப்பொலிவோடு மாறுபட்ட தோற்றத்துடன் திகழ்ந்தது அந்தக் குடியிருப்பு.

ஒருநாள் மாலை....

மணி தன் சிறுவர் குழாத்துடன் உட்கார்ந்து தங்கள் தோட்டத்தை ரசித்துக் கொண்டிருக்கும்பொழுது பரபரப்புடன் சிலர் வேகமாக உள்ளே வந்தனர்.

"தம்பி... உடனே இந்தக் குடியிருப்புல இருக்கும் பெரியவங்களைக் கூப்பிடு!... இங்க அமைச்சர் வரப் போறார்..." என்றார் ஒருவர்.

"மந்திரியா!" - மணி ஆச்சரியமாகக் கேட்க விஷயம் வேகமாகப் பரவியது.

வனத்துறை அமைச்சர் அந்தப் பக்கம் போனாராம். போகும்போது இந்தக் குடியிருப்பு மட்டும் பசுமையாக இருந்தது அவர் கண்ணுல பட்டதாம்... விசாரித்ததில் சிறுவர்கள் பாடுபட்டது தெரிந்தது. அவரே பாராட்ட நேரில் இங்கு வரப் போகிறாராம்.

பெரியவர்களுக்குப் பரபரப்பு... அழைக்காமலேயே அமைச்சர் வருவது என்றால்... வனத்துறை அமைச்சர் வந்தார். விபரங்களைக் கேட்டறிந்தார்.


"இது போன்று ஒவ்வொரு குடியிருப்பில் இருக்கும் சிறுவர்களே மரங்களை வளர்த்தால் பசுமைப்புரட்சியை நாம செய்ய முடியும்.... இதுக்கெல்லாம் காரணமாய் இருந்த சிறுவன் மணியின் முயற்சி பாராட்டுக்குரியது" என்றார்.

"என் நண்பர்கள் முழுமூச்சுடன் ஒத்துழைச்சாங்க! பெரியவங்க ஆதரிச்சாங்க.... இது தனி மனிதன் பணி இல்லே. கூட்டு முயற்சி... அதனால்தான் முடிந்தது" என்று தன்னடக்கத்துடன் பேசினான் மணி.

"உங்கள் குடியிருப்பு சங்க ஆண்டு விழாவுக்கு என்னைக் கூப்பிடுங்கள். என் செலவில் என் கையால் இந்தச் சிறுவர்களுக்கு பதக்கம் பரிசாகத் தர விரும்புகிறேன். "மாதிரி குடியிருப்பு" என்ற பெருமையையும் இதற்குத் தருகிறேன்" என்றார் அமைச்சர்.

மரங்களும், செடிகளும் தங்கள் கிளைகளை ஆட்டி சிறுவர்களைப் பாராட்டி மகிழ்ந்தன.

உலகின் தாய்!



எகிப்து நாட்டை மிகவும் நேசித்தவர்களில் ஒருவர் மாவீரன் நெப்போலியன். எகிப்தை அவர் வெற்றி கொள்ள முக்கிய காரணம் அதுதான்.

கி.பி. 1798-ல் எகிப்தைக் கைப்பற்றியதும் எகிப்தின் பழம்பெருமைகளை உலகறியச் செய்யும் முயற்சிகளுக்கு வித்திட்டவர் நெப்போலியன் தான்.

இன்றைக்கு உள்ள 'எகிப்திய இயலை' (Egyptalogy) உருவாக்கக் காரணமாக இருந்ததே நெப்போலியனின் படையெடுப்புத்தான். கி.பி. 1799ல் பிரெஞ்சு வீரன் ஒருவன் நைல் நதியின் மேற்குக் கரையோரம், அலெக்சாந்திரியாவுக்கு அருகே, கேட்பாரற்றுக் கிடந்த 'ரோஸெட்டாக் கல்'லைக் கண்டான்.

கல் என்றதும் அலட்சியமாக நினைக்காதீர்கள். அது மிகப் பெரிய அளவிலான ஓர் இராட்சதக் கல்! அதன் உயரம் 112.5 மீட்டர், அகலம் 71.25 மீட்டர். தடிமன் 20.5 மீட்டர்! நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்! இந்த இராட்சதக் கல்லின் முக்கியத்துவத்தை அதுவரை யாருமே அறிந்திருக்கவில்லை. இந்தக் கல்தான் எகிப்தின் ஐயாயிரம் வருடத்திய புகழ்மிக்க கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும், உலகம் தெரிந்து கொள்ள உதவப் போகிறது என்பதை அப்போது யாரும் கனவிலும் கூட எண்ணிப் பார்த்திருக்க முடியாது. இந்தக் கல்லை கி.பி. 1801-ல் இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்று அங்குள்ள மியூசியத்தில் வைத்துள்ளார்கள். மற்ற இடங்களில் உள்ளதெல்லாம் அதன் நகல்தான்!

இன்றைக்கு 2193 ஆண்டுகளுக்கு முன், அதாவது மார்ச் மாதம் 27-ம் தேதி, கி.மு. 196-ல் 5-ஆம் தாலமிய மன்னரின் முடிசூட்டு விழாவின் போது பொதுமக்கள் மன்னரின் அருமை பெருமைகளை அந்தக் கல்லில் பொறித்துத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்தார்கள். இந்த பிரம்மாண்டக் கல்லில் இருந்தது என்னவோ ஒரே ஒரு


வாசகம்தான். ஆனால், அதையே கிரேக்க மொழி, காப்டிக் மொழி, ஆதி எகிப்திய சித்திரமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் பொறித்திருந்தார்கள்.

இந்தக் கல்லைக் கண்டுபிடித்த போது, அதன் வாசகங்களை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தக் காலகட்டத்தில், காப்டிக் மொழியை கசடறக் கற்றுத் தெளிந்திருந்தவர் ஜீன் ஃபிராங்கோயிஸ் சிம்போலியன் (1790 – 1831) எனும் பிரெஞ்சுக்காரர் ஒருவரே. இந்த ரொஸட்டாக் கல்லின் வாசகத்தை அடிப்படையாக வைத்து, காப்டிக் மொழி தெரிந்திருந்த இந்த பிரெஞ்சுக் காரரே எகிப்திய சித்திர மொழியின் புதிரை அவிழ்த்தார்! அவரது கடின உழைப்பும் ஆழ்ந்த ஈடுபாடுமே கல்லில் பொறிக்கப்பட்டிருந்த சித்திர மொழியின் விளக்கத்தைத் தந்தது. இன்று, 'எகிப்திய இயலின் தந்தை' என்று நன்றியோடு அவரை நினைவு கூர்கிறார்கள் வரலாற்று மாணவர்கள்.

சிம்பொலியன் அவிழ்த்த எகிப்திய சித்திரமொழிப் புதிருக்குப் பிறகுதான் பிரமிடு, கல்லறைக் கோயில்... போன்ற இடங்களிலிருந்து கண்டெடுத்த பாபிரஸ் சுருள்களில் இருந்த வாசகங்களையும் மொழிபெயர்க்க முடிந்துள்ளது. பண்டைய எகிப்தியர்களின் அனைத்துத் துறை அறிவாற்றலையும் உலகம் வியக்க ஏதுவானது.

கல்வெட்டில் பதிந்துள்ள இந்த அழியா சாட்சியத்தினால்தான் எகிப்தை 'உலகத்தின் தாய்' (உம்முல் துனியா) என்று ஒப்புக் கொள்ளுகிறது உலகம் இன்று.

- எஸ். இ. பாத்திமா




''என்னை கேட்டுக்கிட்டுதான் எங்க வாத்தியார் அடுத்த பாடத்துக்கே போவார்.''

''உன் பேர்ல அவ்வளவு பாசமாடா?''

''ஊகூம்; எனக்குப் புரிஞ்சிட்டா எல்லாருக்கும் புரிஞ்சிருக்கும்னு சொல்லுவார்!''

— சீகாழி. வி. ரேவதி



''எதுக்குடி பவுடரும் லிப்ஸ்டிக்கும் கேட்குறே...?''

''சினிமாவில் நடிக்கப் போறேன் அம்மா...''

- நெற்குப்பை. கி. மனோகரன்



''விளையாட்டுல இருக்குற ஆர்வம் படிப்புல இருக்க மாட்டேங்குதுடா.''

''விளையாட்டுல பரீட்சை இல்லாதது தான்டா காரணம்!''

— சீர்காழி. வி. ரேவதி



இப்படி ஆவோமா?

மாலை நேரம்...

வானொலியில் சினிமாப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்க செந்தில் டீயை சுறுசுறுப்பாய் ஆற்றிக் கொண்டிருந்தான்.

"எனக்கு ஒரு லைட் டீ கொடுப்பா..."

"எங்களுக்கு மூணு டீ கொடு தம்பி..."

டீக் கடையில் வியாபாரம் சுறுசுறுப்பாய் நடந்து கொண்டிருக்க அதற்கு நேர் மாறாக செந்திலின் மனம் சோர்ந்து போயிருந்தது. "ச்சே! என்ன பிழைப்பு இது...! எந்த நேரமும் அனல் கிட்டேயே நிற்கணும். சதா வேர்த்து வழியும்... என்ன தான் வருமானம் நிறைய வந்தாலும் இப்படியா...! கடைக்கு டீ குடிக்க வரவங்க எத்தனை அழகா டிரஸ் செய்துகிட்டு வராங்க! வேலைக்குப் போயி அழகா சம்பாதிக்கறாங்க...? நானும் கொஞ்சம் படிச்சிருந்தா இந்தநிலை வருமா...?" – மனசுக்குள் புலம்பியபடி இருந்தான் செந்தில்.

பேசாமல் வேறு ஏதேனும் தொழில் செய்யலாமா என்று நான்கு நாட்களாக ஒரே யோசனை. ஒரு முடிவுக்கும் வர முடியாமல் செந்தில் தவித்தான்.

செந்திலுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். ஒரு தங்கை உண்டு. கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தும் படிப்பு ஏறாததால் வேறு வழியில்லாமல் ஒரு தேனீர் கடை வைத்துக் கொடுத்தாள் அம்மா. வியாபாரம் பிடித்துக் கொண்டது. ஆனாலும் சில நாட்களாகவே தான் செய்யும் தொழில் பிடிக்காமல் அவன் தவிக்கிறான்.

மறுநாள் காலை மணி - 10.

செந்தில் மனதில் வழக்கம்போல் சோகம் சூழ்ந்திருக்க... கடையில் வியாபாரம் தூள் பறந்தது. அவன் தங்கை கீதா கல்லாவில் காசு வாங்கிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரமானது... அப்போது முப்பத்தி ஐந்து வயது மதிக்கத்தக்க இருவர் டை கட்டி, ஷூ போட்டு மிக டீட்டாக டிரஸ் செய்து கொண்டு கடைக்குள் வந்தனர்.

"இரண்டு காபி கொடு தம்பி"


"இதோ சார்!" என்று கூறிவிட்டுப் பரபரத்த செந்தில் அவர்களின் கம்பீரத்தைப் பார்த்து பிரமித்து "நாமும் இப்படியெல்லாம் ஆக வாய்ப்பே இல்லையா?" என்று மனதுக்குள் புலம்பியபடி, காபியைப் போட்டுக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு அடுத்தவரைப் பார்க்கத் திரும்பினான்.

டை கட்டியவர்களில் ஒருவர் "ச்சே... என்ன பிழைப்புப்பா நம்ம பிழைப்பு? காலையில அவசர, அவசரமாய் எழுந்து குளித்து, கரெக்ட் டைமுக்கு ஆபீஸ் போயி... ஏதும் தப்பு செய்தா மேனேஜர் கிட்ட திட்டு வாங்கிட்டு எந்தவிதமான சுதந்திரமும் இல்லாம கொத்தடிமை கணக்கா செக்குமாடு மாதிரி ஓரே ரொட்டீன்ல சுழண்டுகிட்டு... இந்தப் பையனையும் பாரு... தனியா ஒரு சுய தொழில் வெச்சிருக்கான்! யார்கிட்டயும் கையேந்த வேண்டியதில்லை... நல்ல வருமானமும் இருக்கு. பேசாம நாமளும் இந்த டிரஸ், டையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு வேஷாக்கு பாக்காம இது மாதிரி ஒரு கடை வெச்சுடலாம்"... என்று பேசிக் கொண்டே போனார்.

செந்தில் திகைத்தான். அவனுக்கு எதுவோ இப்பத்தான் புரிந்தமாதிரி இருந்தது. டை கட்டாமலேலேயே பெருமையுடன் அவன் இப்பொழுது நிமிர்ந்து நடந்தான்.

— இரா.அ.தென்றல் நிலவன்

என்ன குறள்? - போட்டி



இந்த நான்கு படங்களையும் கவனமாகப் பாருங்கள். இவை ஒரு திருக்குறளை நினைவூட்டும். இந்தக் குறளை எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புங்கள். முகவரிக் கூப்பனில்லாமல் வருபவை கவனிக்கப்பட மாட்டா. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒருவருக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதினால் குலுக்கல் முறையில் பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி 31.3.97.

ஆசிரியர்: கோகுலம்
47, ஜவஹர்லால்நேரு
சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



தாடகை ஆடிய தாயம்!

சென்ற இதழ் தொடர்ச்சி திக்... திக்... திக்... கதைகள்!

இதுவரை

நண்பன் சபாபதியின் வற்புறுத்தல் தாங்காமல் தாடகா நதிப் பள்ளத்தாக்கில் அடர்ந்த காட்டுக்கு நடுவே அமைந்திருக்கும் தாடகைக் கோட்டைக்கு பொன்முடியும் செல்லமணியும் மோட்டார் சைக்கிளில் கிளம்புகிறார்கள். கோட்டையில் உள்ள தடாகா தேவி, சபாபதியின் குடும்பத்தாருக்குக் குலதெய்வம். "ஒவ்வொரு அமாவாசையன்றும் இரவு பன்னிரண்டு மணிக்கு பூஜை நடக்கும். பூஜை முடிவில் தாடகா தேவி தாயக் கட்டம் ஆடுவாள்" என்று சபாபதி கூறியதும் அந்த பூஜையைப் பார்க்கத்தான் நண்பர்கள் இருவரும் கிளம்பி வந்திருந்தார்கள். வழியில் தரைப்பாலத்தில் பயங்கர வெள்ளம். தடுப்புக்கட்டை போட்டிருந்தார்கள். பத்து மணிக்குள் பூஜைக்குக் கிளம்பும் குடும்பத்துடன் சேர்ந்து விட நண்பர்கள் துடிக்கிறார்கள். வந்தது வரட்டும் என்று ஆற்றைக் கடக்கத் துணிகிறார்கள். ஒரு போலீஸ்காரர் தடுத்து விடுகிறார். அவருக்கும் தாடகாதேவிதான் குலதெய்வம் என்பதையும், அவரும் பூஜைக்குப் போக வேண்டியவரே என்பதையும் அறிந்து அவருடைய உதவியை நாடுகிறார்கள். அவரும் தன்னுடன் அழைத்துப் போக சம்மதிக்கிறார்.

சின்னபாபு

மூவரும் ரொட்டி ஜாமை ஒரு கை பார்க்கிறார்கள் பேசிக் கொண்டே.

"என்ன தம்பி இப்படிப் பார்க்கிறீங்க! பூஜை முடிவில் தாடகாதேவி கீழே உள்ள தாயக் கட்டைகளைக் கை தாழ்த்தி எடுத்துக் கொள்ளுவாள். அதற்கப்புறம் நமக்கு அங்கே இருக்கவே குலை நடுங்கும். நீங்களும் இதையெல்லாம் பார்க்கத்தானே போகிறீர்கள்?" என்றார் போலீஸ்காரர் ஜாமை ரொட்டியில் தடவியபடி.

"இந்த இருபதாம் நூற்றாண்டில், அறிவியல் முன்னேற்றத்திற்கு நடுவில், இன்னமும் இப்படி ஒரு அதிசயம் நடக்குது என்றால் என்னால் நம்பவே முடியவில்லை" என்றான் பொன்முடி.

"நீங்க பட்டணத்துப் பிள்ளைங்க. இப்படித்தான் பேசுவீங்கன்னு நல்லா தெரியும். இதுக்காகவே அசலூர்காரங்க யாரையும் பூஜைக்கு அனுமதிக்கத் தயங்கறாங்க."

"இது உண்மைதானென்னு அறிவியல் அடிப்படையில் பார்த்து, உண்மையாகவே இது ஒப்புக் கொள்ளக்கூடிய பேரதிசயம் தான் என்பது மெய்ப்பிக்கப் பட்டு விட்டால். தாடகைக் கோட்டைக்கும், தாடகா தேவிக்கும் இன்னும் அதிகப் பெருமை தானே?

"அது எங்க தேவிக்குத் தேவை இல்லை. இந்தக்

காட்டுப் பகுதியிலும், மலையைச் சுற்றியும் உள்ள நூற்றுக்கணக்கான கிராம மக்களுக்கு தாடகாதேவி கண்கண்ட குல தெய்வம். எங்கள் நம்பிக்கையை மூட நம்பிக்கைன்னு எடுத்துக் கிட்டாலும் சரி., அறிவியல் அற்புதம்னு புகழ்ந்தாலும் சரி, எங்களுக்குக் கவலை இல்லை."

போலீஸ்காரரின் எச்சரிக்கையிலேயே சூடு இருந்ததை நண்பர்கள் இருவரும் கவனிக்கத் தவறவில்லை.

"ஐயா, இந்தக் கோவிலுக்கு வரலாறு ஏதாவது உண்டா?" என்று கேட்டான் செல்லமணி.

"இரண்டாயிரம் வருஷத்துக்கு மேல் இந்தக் கோயில் இருக்குன்னு பூசாரி சொல்கிறார்."

"கல்வெட்டு ஏதாவது இருக்கான்னு நாங்க பார்க்க அனுமதிப்பாங்களா?" இது பொன்முடி.


"பூஜை செய்யும் குடும்பத்தாரையும், அவங்க பங்காளிகளையும் மட்டும் தான் பூஜையை பார்க்க அனுமதிப்பாங்க. பெண்களுக்கு அனுமதி இல்லை. முன்னால அனுமதிச்சிட்டிருந்தாங்களாம். தேவி தாயக்கட்டைகளைக் கையில எடுத்ததும், யாரோ ஒரு பெண் பயந்து மயக்கமாயிட்டாளாம். அதுனால பெண்களையும் குழந் தைகளையும் அனுமதிக்கறதில்ல. அதோட தேவி தாயக்கட்டையை எடுத்ததும், எல்லோரையும் வெளியே அனுப்பிடுவாங்க.

"பரவாயில்லே சார். தேவி தாயக்கட்டையைக் கையில் எடுக்கும்வரையாவது புகைப்படம் எடுக்க அனுமதிச்சாப் போதும்" என்றான் செல்லமணி

போலீஸ்காரர் பலமாகச் சிரித்தார். இருவரும் வியப்புடன் அவரை நோக்கினர்.

"தம்பி, உங்க ரெண்டு பேரையும் பூஜையைப் பார்க்கவே அனுமதிப்பாங்களான்னு சந்தேகம். அப்புறம்தானே போட்டோ எடுக்கறது!"

இருட்டிக் கொண்டே வந்தது. சில் வண்டுகளின் பயங்கர சத்தம். நரிகளின் ஊளை எல்லாமாகச் சேர்ந்து மனதை என் னவோ பண்ணியது. ஒரு வழியாக ஒன்பது மணிக்குமேல் தபால் கொண்டு போகும் ஜீப் வந்தது. போலீஸ்காரரின் பலமான சிபாரிசு இருந்ததால் இருவரையும் ஏற்றிக் கொண்டனர்.



"மோட்டார் பைக் இங்கேயே இருக்கட்டும். நாளைக்கு வந்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் போலீஸ்காரர். ஜீப் வளைந்து வளைந்து கொண்டை ஊசித் திருப்பங்களைத் திரும்பித் திரும்பி முன்னேறியது.

மணி பதினொன்று.

"தம்பிங்களா, யானைஅடி வந்துடுத்து. இறங்குங்க" என்றார் போலீஸ்காரர். தூங்கிக் கொண்டு வந்த செல்லமணியைத் தட்டி எழுப்பி இறங்க வைத்தான் பொன்முடி. ஜீப் போய்விட்டது.

சின்ன ஓலைக் கொட்டகையில் நாலைந்து தீவட்டிகள் மெல்லிய ஒளியைத் தந்து கொண்டிருந்தன. முண்டாசும் முறுக்கிய மீசையுமாக இருந்த நாலைந்து பேர்களில் ஒருவன் ஓடி வந்து, "வாங்க எட்டையா, கும்புடரேனுங்க" என்று பணிந்தான்.

"தம்பிங்களா, கோவில் எல்லை இங்கிருந்துதான் ஆரம்பமாகுது. இதுக்குமேல் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் புதியவர்களுக்கும் அனுமதி இல்லை," என்று விளக்கிய போலீஸ்காரர்,

"கட்டளைக்காரங்க வந்துட்டாங்களா?" என்று கேட்டார்.

"இன்னும் வரலை. வரவேண்டிய நேரம்தான்," என்றான் ஒரு கொடுவாள் மீசை.


"மின் விளக்குக்கூட இல்லையே!" என்றான் செல்லமணி.

"இங்கே அந்நியர்கள் யார் வரப் போறாங்க? எங்களுக்கெல்லாம் இங்கே ஒவ்வொரு அடியும் பழகிப் போன இடம். வெளிச்சமே தேவை இல்லை. நீ வார்த்தியைப் பிடிச்சிக்கிட்டு நடந்திருவோம். தீவட்டி இருந்தால் எந்த வனவிலங்கும் வராது. பாதுகாப்பு" என்றார் மீசை.

மலைப்பாதையில் தீ வட்டிகளின் வெளிச்சம் தெரிந்தது. "கட்டளைக்காரங்க வராங்க." என்று கூறிய பெரிய மீசைக்காரர் ஒரு பட்டாசுச் சரத்தைக் கொளுத்திப் போட்டார். இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அவை படபடவென்று வெடித்தன.

"கட்டளைக்காரங்க... அதாவது இன்னைக்கு பூஜை பண்ண வேண்டிய உன் நண்பன் சபாபதியின் குடும்பத்தார் வராங்க என்று தலைமைப் பூசாரிக்கு செய்தி தெரிவிக்கிறாங்க" என்று பட்டாசு வெடிக்கப்பட்டதன் பொருளை விளக்கினார் போலீஸ்காரர்.

தீ வட்டிகளுடன் மாட்டு வண்டிகள் வந்து நின்றன. ஆண்கள் மட்டுமே வந்திருந்தனர். சபாபதியும் வந்திருந்தான். எல்லோரும் வேட்டி. போலீஸ்காரர், செல்லமணி, பொன்முடி மட்டுமே பேண்ட் சட்டை!



நண்பர்கள் இருவரையும் தந்தையிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினான் சபாபதி.

"தம்பி, அன்னியர்களை உள்ளே பூஜை பார்க்க அனுமதிக்க மாட்டாங்க. ஆனாலும் பூசாரி ஐயாவிடம் நான் சொல்றேன். எங்களையே பத்தடி பின்னால்தான் உட்கார வைப்பாங்க. எங்களுக்குப் பின்னாலே நீங்க உட்காரக் கேட்டுப் பார்க்கிறேன். உங்க அதிர்ஷ்டம்" என்றார் சபாபதியின் தந்தை.

வண்டியில் இருந்து இறங்கிய வாழைப் பழங்கள், பலகாரங்கள், தேங்காய், தாம்பூலம், பன்னீர். சந்தனம் எல்லாவற்றையும் ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண் டார்கள். நண்பர்கள் முன் வந்தும். அவர்களை எதுவும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கவில்லை!

"தாடகாதேவி சரணம்!" என்ற கோஷத் துடன் பூஜை அணியினர் கிளம்பினர். சுற்றிலும் தீ வட்டிகள். பாதி வழியில் உடுக்கை அடிப்பவர் கலந்து கொண்டார்.

அடர்ந்த காட்டுக்கு நடுவே, வழி கீழ் முக மாக இறங்கி வளைந்து வளைந்து போனது. உண்மையாகவே பாதாளத்திற்குப் போவது போலத்தான் இருந்தது.

கோவில் அமைந்திருந்த கோட்டை வாசலே பூதத்தின் பெரிய பயங்கர வடிவில் அமைந் திருந்தது. அதன் வாய் வழியாகத்தான் உள்ளே போனார்கள்.

சிறிது தூரம் நடந்ததும் கோயிலின் குகை முகப்பு தீவட்டிகளின் ஒளியில் தெரிந்தது. படிகள் இறங்கி சம தரைக்கு வந்தன. மலை களுக்குக் கீழே குடைந்து அமைக்கப்பட்ட குகைக் கோயில்.

உதவிப் பூசாரி குறுக்கே நின்று கொண்டு ஒவ்வொருவராக உற்றுப் பார்த்து அனுமதித் தார். கடைசியில் போலீஸ்காரர், செல்லமணி, பொன்முடி.

"எட்டாவது கம்பத்தைத் தாண்டி இந்தப் பக்கமே உட்கார். வேட்டி கட்டலே" என்ற எச்சரிக்கையுடன் போலீஸ்காரர் அனுமதிக் கப்பட்டார்.

பின்னால் பொன்முடி. செல்லமணி!

இருவரையும் உறுத்து; கூர்ந்து பார்த்த உதவிப் பூசாரி, "சபாபதி சொன்ன பசங்க நீங்க தானா?" என்று கேட்டுவிட்டு பொன் முடியை நோக்கிக் கையைக் கொண்டு வந்தார். பொன்முடி நடுங்கினான்.

(மன்னிக்கவும். முடிக்க முடியவில்லை! கண்டிப்பாக அடுத்த இதழில் முடிந்து விடும்!)



இல்லமானதாம்!

குதிரைவண்டி சாரட்டிலே ஊர்வலமாம்
கொள்கை வீரர் விவேகானந்தர் நகர்வலமாம்
எழும்பூரில் வரவேற்பு அமர்க்களமாம்
எழுச்சியுள்ள மக்கள் கூட்டம் ஏராளமாம்!

திரண்டிருந்த மாணவர்கள் கூடினார்கள்
தேர்வடம் போல் பிடித்திழுக்க நாடினார்கள்!
குதிரையாகி சாரட்டினை இழுத்தனராம்;
குருவுக்கு காணிக்கையாய் உழைத்தனராம்!

அல்லிக்கேணி பாதையிலே ரதம் தெரிந்ததாம்
அள்ளி அள்ளி மக்கள் கைகள் பூச்சொரிந்ததாம்;
விவேகானந்தர் பேச்சுவெள்ளம் பெருக்கெடுத்ததாம்
வேட்டி துண்டு வெள்ளைக்காரர் கருக்கெழுத்தாராம்!

கெர்னான் மாளிகையில் கற்பூரவிளக்காம்
கேள்விக்கு உடனடியாய் சொற்போர் விளக்கமாம்
கெர்னான் ஐஸ்ஹவுஸாய் கரைந்து போனதாம்
அதுவே விவேகானந்தர் இல்லமானதாம்!

- தென்றல் ராமலிங்கம்

நீங்களாக இருந்தால்..?

புத்தாண்டு ஜனவரி (1997) இதழில் வெளியான இந்தப் போட்டியைச் சிறிது நினைவு படுத்திக் கொள்ளுங்கள். குடையை ரிப்பேர் செய்து கொண்டு நல்லமுத்து திரும்பும் போது திடீரென்று அடைமழை பிடித்துக் கொள்கிறது. குடையில் 2-வது ஆள் நனையாமல் போகலாம். அவன் வசித்த தெருவிலேயே குடியிருக்கும் வயதான பெரிய சாமித் தாத்தா, விடைத்தாள் கட்டுடன் வகுப்பாசிரியர், அவசரக்கேசை கவனிக்கப் போகும் குடும்ப டாக்டர் ஆகிய மூவரும் தங்களைக் குடையில் கூட்டிக் கொண்டு போகும்படி அவனை அழைக்கிறார்கள். நல்லமுத்துவின் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன பண்ணுவீர்கள், யாரை முதலில் அழைத்துக் கொண்டு போவீர்கள் என்பதுதான் போட்டி.

ஏராளமானவர்கள் மிக உற்சாகமாகக் கலந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் "டாக்டரைத்தான் முதலில் அழைத்துச் செல்வேன். அவர்தான் ஓர் உயிரைக் காக்க விரைந்து கொண்டிருப்பவர்" என்று எழுதியிருக்கிறார்கள். இது தான் சரியான பதில். வாசகர்கள் நல்ல உயர்ந்த சிந்தனையுடன் விழிப்பாக இருக்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. குலுக்கல் முறையில் ரூபாய் பத்து பரிசு பெறுபவர்கள்:

1. வி.எம்.எச். சைபுல்லா, பல்லாவரம், சென்னை -43.
2. அ. சீனுவாசன், புதுவை -1.
3. எஸ்.டி. கோகிலா, கோவை - 45.
4. ச. முருகராஜ், சத்திரப்பட்டி 626 102
5. பி. கோகுல கிருஷ்ணன், பொன்மலை திருச்சிராப்பள்ளி - 4.
6. சி. முருகன், முத்துச்சுப்பையாபுரம், முகவூர்.
7. எல்.ஆர். பஹ்ருதீன் அலி அகமத், புத்தமங்கலம் அஞ்சல், 610 114.
8. சந்திரபோஸ், தேவனூர்புதூர், உடுமலை.
9. என். அன்பரசன், மயில்பாளையம், பட்டுக்கோட்டை.
10. திவ்யா சாய்நாத், பூனா, மகாராஷ்டிரா.
11. க. கலைவாணன், பாளையாம்பேட்டை, திருவிடமருதூர்.
12. டி.எஸ். முகமத் சலீம், கடையநல்லூர்.
13. வெ. ஜெயந்தி, காட்டூர்.
14. ஏ.ஏ. யாஸ்மின் பாவீன், புதமங்கலம்
15. கே.எஸ்.வி. தேசிகன், கீழநத்தம்.
16. சி. சூர்யபாரதி, விருத்தாசலம்.
17. ஆர். பிரபு, தாண்டவராயபுரம்.
18. ஜெ. ஷேக் முகமது, மாங்கணம்பட்டி, கொள்ளிடம் அஞ்சல்
19. பி. ஜானகிராணி, திருச்சி - 21.
20. பு. அங்கயற்கண்ணி, ஆலாத்தூர்.

போட்டி முடிவு

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

வேண்டும்!

உலகம் உயர கல்வி வேண்டும்
உள்ளம் உயர கல்வி வேண்டும்!
நாடு வளர கல்வி வேண்டும்
நம்பிக்கை வளர கல்வி வேண்டும்!
மனம் வளர கல்வி வேண்டும்
மகிழ்ச்சி பெற கல்வி வேண்டும்
அறியாமை அகல கல்வி வேண்டும்
சாதனை படைக்க கல்வி வேண்டும்
கண்ணியம் ஓங்க கல்வி வேண்டும்
கவலைகள் நீங்க கல்வி வேண்டும்!

- எஸ். ஜின்னா, நெல்லை.





குரங்குக் குட்டி!

குரங்குக் குட்டி ஆடுது!
குதியாட்டம் போடுது!
குரங்காட்டி சொன்னபடி
குட்டிக்கரணம் போடுது!

டிஸ்கோ டான்ஸ் ஆடுது!
பிரேக் டான்ஸும் ஆடுது!
ஆளைப் பார்த்து விசிலடிச்சு
ஆரவாரம் போடுது!

குரங்காட்டம் பார்த்ததும்
கூட்டம் சொக்கிப் போனது
குரங்கு 'சலாம்' போட்டது
காசு கேட்டு வந்தது!

- சிவ. கலாதரன், சிதம்பரம்.

சேர்ந்து வாழனும்


கோழிக்குஞ்சு ஒன்று
குப்பை கிளறித் தின்றது
கோழி தூரம் சென்றது
குஞ்சும் தாயைப் பிரிந்தது

பருந்து வானில் பறந்தது
பறந்து கீழே பாய்ந்தது
விருந்து கிடைத்த மகிழ்ச்சியில்
விரைந்து கவ்விச் சென்றது

தாயைப் பிரிந்த குஞ்சுமே
தவித்து இரையும் ஆனது!
சேர்ந்து வாழ மறந்திடல்
சோகம் நேரும் அறிந்து கொள்!



- அ. ஹாஜா நஜ்முதீன்.





சின்னத்தம்பி

சின்ன சின்னத் தம்பியாம்
சிங்காரத் தம்பியாம்!

பலூன் வாங்கி ஊதுவான்
பறக்க விட்டுத் தட்டுவான்

ஓடிக் குதித்து ஆடுவான்
உட்காராமல் பாடுவான்

குட்டிக்கரணம் போடுவான்
குதித்துக் குதித்து ஆடுவான்

சுட்டிப்பயல் என் தம்பி
சலாம் வைப்பான் என் தம்பி!


- கி. மனோகரன், நெற்குப்பை.


லட்டு

அம்மா செய்த லட்டு
அடுக்கி வைத்த லட்டு
ஓடி வாடா சிட்டு
உனக்குத் தருவேன் பிட்டு

எனக்கு வேண்டும் எட்டு
தரா விட்டால் குட்டு
எடுத்து கணக்குக் காட்டு
எல்லாம் மடியில் கட்டு!

- எம்.கே. வேங்கவேல், சேலம்.





பேருந்து!

பேருந்து பெரிய பேருந்து!
பயணம் சென்றிடும் பேருந்து!
ஊருக்கு அழைத்திடும் பேருந்து!
உல்லாசம் கொடுக்கும் பேருந்து!

சாலையில் விரையும் பேருந்து!
சத்தம் போடும் பேருந்து!
காலை மாலை பாராமல்
கடுகி ஓடும் பேருந்து!

இருக்கைகள் நிறைந்த பேருந்து!
இயக்க எளிதாம் பேருந்து!
தடைகள் எத்தனை வந்தாலும்
தகர்த்து ஓடும் பேருந்து!

- பொன். குமார், சேலம் - 6.



● ஆர். ரமேஷ், காகிதபுரம்

? எனக்கும் என் நண்பனுக்கும் ஒரு போட்டி. நான் 'சென்னை கண்நோய்' (MADRAS EYE) காற்று மண்டலத்தில் வாழும் பாக்டீரியா மற்றும் வைரஸ் கிருமிகளால் வருகிறது என்கிறேன். என் நண்பன் உடம்பு வெப்பத்தினால் வருகிறது என்கிறான். எங்கள் இருவரில் யாருக்குப் பரிசு என்றும், சரியான பதில் எது என்றும் 'கோகுலம்' வழியாகத் தெரிவிக்க வேண்டுகிறேன், டாக்டர்?

! உன் பதில்தான் சரி ரமேஷ்! பரிசு உனக்குத்தான்!



● வை. நரேந்திரகுமார்,
சென்னை-70

? இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்துப் படித்துவிட்டு, பகல் முழுவதும் தூங்கினால் உடம்புக்குக் கெடுதலா?

! கெடுதல்தான், நரேந்திரகுமார்! பகல் தூக்கம் இரவுத் தூக்கத்திற்கு ஈடாகாது. பகல் தூக்கம் என்பது அலைகள் ஆர்ப்பரிக்கும் கடற்கரையில் கப்பல் நிற்பதைப் போன்றது. ஆனால், இரவுத் தூக்கம் அமைதியான ஆழ் கடலில் கப்பல் பயணம் செய்வதைப் போன்றது. இரவுத் தூக்கத்தில் இடையூறுகள் இருக்காது. பகல் தூக்கத்தில் இவை இருக்கும். ஆகையால், தேவையான அளவுக்குத் தூக்கம் கிடைக்காது. இதனால் ஆரோக்கியம் பல வழிகளில் கெடுவதற்கு வாய்ப்பு உண்டு.

பொரிகடலை தின்றால் காமாலை வருமா?






● எம். செந்தில்குமார்,
சந்தை புதுப்பாளையம்.

? ரத்தத்தின் வகைகள் என்ன, டாக்டர்?

! A, AB, B, O இவைதான் இரத்தத்தின் பொதுவான வகைகள். A வகையில் A_1, A_2 என்று உப வகைகள் உண்டு. இவை தவிர M,N,P,K,L என்று சில இரத்தவகைகளும் உள்ளன.



● நா. ரவிவர்மன், கபிஸ்தலம்.

? நம் ரத்தத்தில் பாசிடிவ், நெகடிவ் வகை ரத்தம் உள்ளதாமே, அப்படி என்றால் என்ன, டாக்டர்?

! இரத்த சிவப்பணுக்களில் Rh ANTEGEN இருந்தால் அந்த ரத்தத்தை Rh பாசிடிவ் இரத்தம் எனவும், Rh ANTIGEN இல்லாத ரத்தத்தை Rh நெகடிவ் ரத்தம் எனவும் வகைப்படுத்துவதுண்டு.

● **டி.பி. பெருமாள், இன்னப்பட்டி.**

? டாக்டர், தினமும் 50 கிராம் பொரி கடலை தின்றால் காமாலை வந்து விடும் என்கிறார்கள் என்னுடைய நண்பர்கள். இது உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை, பெருமாள்! உன் நண்பர்கள் கூறுவது தவறு. பொரிகடலை நல்ல சத்துணவு. புரதச்சத்து நிறைந்தது. உடல் வளர்ச்சிக்கு உதவுவது. பொரி கடலைக்கும் காமாலைக்கும் தொடர் பில்லை. காமாலை எப்படி வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ள அடுத்த கேள்வியைப் படி. உன் நண்பர்



களையும் படிக்கச் சொல்.

● **இரா. அருண்மொழி, விழுப்புரம்.**

? மஞ்சள் காமாலை எதனால் வருகிறது?

! மஞ்சள் காமாலை வருவதற்குப் பல காரணங்கள். முக்கியமானவற்றை மட்டும் இங்கே கூறுகிறேன். அசுத்தமான தண்ணீர் மூலம் வைரஸ் கிருமிகள் உடம்புக்குள் நுழைந்து கல்லீரலைப் பாதிப்பதால் காமாலை வருவது ஒரு வகை. சுத்தமில் லாத இரத்தத்தை பிறருக்குச் செலுத்தும் போது வருகின்ற காமாலை இன்னொரு வகை. மூன்றாவதாக, பித்தப்பையில் கல் அடைப்பு ஏற்படுவதால் வருவது. இவை தவிர இரத்த அணுக்கள் எதிர்பாரா விதமாக அதிக அளவில் அழிந்து போகும் போதும் மஞ்சள் காமாலை தோன்றும். குழந்தைகளுக்குப் பிறவியிலேயே ஏற்படுகின்ற காமாலை நோயும் உள்ளது.

● **கோ. கேசவமணி, மேலப்பாதி.**

? ஏர்க்கண்டிஷன் அறையில் தினமும் உட்கார்ந்திருந்தால் இரத்த சோகை வருமா, டாக்டர்?

! இல்லையே! இரத்த சோகைக்கும் ஏர்க் கண்டிஷன் அறையில் இருப்பதற்கும் தொடர்பில்லையே, தம்பி! நம் ரத்தத்தில் இரும்புச் சத்து குறைவாக இருந்தால் இரத்த சோகை ஏற்படும். அல்லது திடீரென்று மிகுதியாக இரத்த இழப்பு ஏற்பட்டால் இரத்த சோகை வெளிப்படும்.

● **எம். செந்தில்குமார், சந்தை புதுப்பாளையம் - 5.**

? பீடி புகைப்பதால் என்ன நோய் ஏற்படும்?

! ஒன்றா, இரண்டா... செந்தில் குமார்? பெரிய பட்டியலே தரலாம். என்றாலும் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே தருகிறேன்... 1) இரத்தக்

டாக்டர் கு. கணேசன்

குழாய் சுருங்குவது, 2. உயர் ரத்த அழுத்தம், 3. மாரடைப்பு, 4. வயிற்றுப் புண், 5. சுவாச நோய், 6. கை, கால் அழுகல் நோய், 7. புற்று நோய், 8. கெண்டைக்கால் வலி, 9. பக்கவாதம், 10. ஆஸ்துமா.

● **என். ராஜி, மேலப்பாதி.**

? உடம்புக்குள் போடப்படும் தையல்களைப் பிரிக்க வேண்டாமா? அப்படிப் பிரிக்காவிட்டால் ஆபத்து வராதா?

! இல்லை, ராஜி! அறுவை சிகிச்சையின் போது உடம்புக்குள் போடப்படும் தையல்கள் காலப்போக்கில் தசையோடு தசையாக இணைந்து விடும். இவற்றைப் பிரிக்க வேண்டிய அவசியமுமில்லை; பிரிக்காததால் ஆபத்து வருவதுமில்லை. அபூர்வமாக சிலருக்கு வேண்டுமானால் இந்தத் தையல்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல், தோலுக்கு வெளியே எட்டிப் பார்க்கும். அப்போது அவற்றை மருத்துவர்கள் அகற்றி விடுவார்கள்.



மழை மேகம்

நீலக் கடலில் நீர்வாரி
நீண்ட வானில் தாலாட்டி
கோலம் போடும் மேகமே
குளிர்ந்து தீர்ப்பாய் தாகமே!

அலையி லாடி எழுகிறாய்
அலைந்து ஓடித் திரிகிறாய்
மலையை நாடிச் செல்கிறாய்
மண்ணில் துளியாய் விழுகிறாய்.

ஆழி நீரை எடுக்கிறாய்
அமுத நீரைக் கொடுக்கிறாய்
வாழி யென்றே வாழ்த்திட
வார்த்தை எது எட்டிலே?

- பாளை. பி. ஏ. ஜவஹர்லால்.

பட்டுக் குடை

பட்டுக் குடையைப் பாரம்மா!
பார்க்க பார்க்க அழகம்மா

சிட்டுக் குருவி படம் ஒன்று
சிறிதாய் நடுவில் காணம்மா!


தொட்டுப் பிரித்துப் பார்த்திட
துடிக்கு தேனோ மனசம்மா!

கோபுரம் போல் குடையம்மா
கொண்டை ரோஜாப்பூவம்மா!

கொட்டும் மழையில் பிடிக்கவே
கொஞ்சம் தயக்கம் தானேம்மா!

- தேனி. மு. ருக்மணி.





கடிகாரம்

நேரம் காட்டும் கடிகாரம்
நேர்த்திமிகு கடிகாரம்

முட்கள் இரண்டு கடிகாரம்
மெதுவாய் ஒலிக்கும் கடிகாரம்

தங்க வண்ண கடிகாரம்
தம்பி கேட்கும் கடிகாரம்


மதிப்பு மிகு கடிகாரம்
மாமா பரிசு கடிகாரம்

இரவில் ஒளிரும் கடிகாரம்
இனிய அடியேன் கடிகாரம்

- கெட்டிச் செவியூர் கே. பாலு.

தவளையாரே

தத்திதத்தி தாவிவரும் தவளையாரே -
நீங்க
தண்ணீரில் மறைந்திடவே
கற்றதெங்கேங்க?
பூச்சி பிடித்து உண்ணுகின்ற
தவளையாரே - உங்க
புறமுதுகில் கோடு ஏனோ கூறிடுவீரே?
இடிஇடித்து மழைபெய்தால் தவளையாரே
- உமக்கு
எல்லையில்லா இன்பம்ஏனோ
சொல்லிடுவீரே
இசையுடனே தாளமிடும் தவளையாரே -
இதை
எப்படித்தான் கற்றீரோ கூறிடுவீரே?



கால்கள் நான்கு இருந்தும் என்ன
தவளையாரே - உமக்கு
குட்டிவால் கூட இல்லை தவளையாரே?
நி.பிர்ந்து எம்மைப் பார்க்கின்ற
தவளையாரே - நீவிர்
நீண்ட நாட்கள் வாழ்கஎன்றே
வாழ்த்துகிறேன் நான்!

- ஆர். தமிழரசன், நெய்வேலி - 3.

எங்கே போறீங்க?

எலியாரே! எலியாரே! எங்கே போறீங்க?
எதிர்வீட்டு நெல்லை நானும் திருடப்
போறேங்க!

பூனையாரே! பூனையாரே எங்கே
போறீங்க?
பகைவன் எலியைக் கொன்றிடவே தேடிப்
போறேங்க!

நாயாரே! நாயாரே! எங்கே போறீங்க?
நான்தேடும் பூனையாரை விரட்டப்
போறேங்க!

தம்பிப் பையா கல்லுடனே எங்கே
போறேப்பா?
திருட்டு நாயை அடித்திடவே எடுத்துப்
போறேங்க!

பெரியவரே! பெரியவரே! எங்கே
போறீங்க?
பேரன் காணோம் போலீஸில் சொல்லப்
போறேங்க!

- த. பழனி, வரிக்கல்.



வள்ளியப்பா இலக்கிய விழா!

கோவையில் இயங்கி வரும் வள்ளியப்பா இலக்கிய வட்டத்தின் வள்ளியப்பா கலை, இலக்கிய விழா, செட்டிநாட்டில் உள்ள நச்சாந்துப்பட்டி நகரத்தார் திருமண மண்டபத்தில் 12.1.97 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு.எம். செல்லப்பன், திரு. என். சிவனடியான், திரு.கே. ராமநாதன், திரு பழ.எஸ். ஆர்.எம். சிவனடியான் ஆகியோர் பங்கு கொண்டு நடத்திய இந்த விழாவில் குழந்தைப் புத்தகக் காட்சியும், கலை, இலக்கியப் போட்டிகளும் நடைபெற்றன.


பதிப்பாளருக்கான இவ்வாண்டு விருதை பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளர் திரு. எஸ்.எம். பழனியப்பச் செட்டியார் அவர்களுக்கு தவத்திரு பொன்னம்பல அடிகளார் வழங்கினார். நாவல் விருது பால நம்பூதிரி எழுதிய 'மாயக்கோல் மந்திரவாதி' (மணிமேகலைப் பிரசுரம்) நூலுக்கு வழங்கப்பட்டது/

விழாவில் கோகுலம் நடத்திய வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் (1994) பரிசு பெற்ற சிறுகதைகளின் தொகுப்பு "மணிக் கதைகள்" நூல் வெளியிடப்பட்டது. திரைப்பட இயக்குநர் திரு இராம. நாராயணன் சிறப்புரையாற்ற, பேராசிரியர் கண. சிற்சபேசன் தலைமையேற்று சிறுவரே பங்கு கொண்ட "சிறுவர் பண்பாட்டை வளர்க்கப் பெரிதும் துணைபுரிபவர் ஆசிரியரா, பெற்றோர்களா?" என்ற தலைப்பில் மாணவ, மாணவியரின் பட்டிமன்றம் ஒன்றும் நடைபெற்றது.

நச்சாத்துப்பட்டி இரா.செ.மேல் நிலைப் பள்ளி குழிபிறை வள்ளுவர் பள்ளி மாணவர்கள் பங்குகொண்டு சக்கை போடு போட்டனர். குன்றக்குடி பெரிய பெருமாள், கூத்தபிரான், கோகுலம் ஆசிரியர், தேவி. நாச்சியப்பன் ஆகியோர் பங்குகொண்ட இந்த விழாவை மிகச் சிறப்பாக நடத்திய பெருமைக்குரிய டாக்டர் பூவண்ணன், கவிஞர் செல்லகணபதி ஆகியோரை எத்தனை பாராட்டினாலும் தகும்.

''பரிசுக் கதை மன்னிப்பாயா முகுந்த்?'' - பரிசுக்கு ஏற்ற கதை. எங்கள் மனம் நிறைவாக இருக்கிறது. ஏனென்றால் நாங்களும் சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்டவர்களே! - செம்மலை எஸ். மயில்ராவணன், தேவகோட்டை கா. கிருஷ்ணசாமி, திருமெய்யம் சு. சுப்பையா, தண்டரை எஸ். பாக்கியநாதன், தக்கோலம் மு. வைரமுத்து, சுவாமிமலை கா. இராஜதுரை, தரணி என். வையாபுரி, காயக்காடு ப. ராமகிருஷ்ணன், கபிஸ்தலம் கே. ஆர். ரவிவர்மன்.

தினமும் பார்க்கும் சாதாரணமான மண் புழுதான். அதைப் பற்றி எங்களுக்குத் தெரியாத இத்தனை தகவல்களா! கல்லூரியில் நான் விலங்கியலைத்தான் பாடமாகப் படிப்பேன் - தத்தமங்கலம் கா. கிருஷ்ணமூர்த்தி, வில்லிவாக்கம் எல். கனகலிங்கம், அண்ணாமலை நகர் மு. செல்வராசன், பாளையங்கோட்டை ஜெ. சீனிவாசன், வைத்தீஸ்வரன்கோவில் மு. பெரியநாயகி, வடமலை எஸ். பொன்னரசன், தம்மம்பட்டி கூ. பாஸ்கரசேதுபதி, காஞ்சி எஸ். பரிதி, மேட்டுப்பாளையம் சு. ராஜாமணி, விருத்தாசலம் வ.பிரபாகர், விபீஷணபுரம் ஸ்ரீவித்யா காளிதாஸ், காயக்காடு ப. ராமகிருஷ்ணன், மேலப்பாதி எஸ். நாகராஜன், திருவண்ணா



மலை ஆர். வானதிராமு, நெய்வேலி எஸ். இந்துமதி.

இந்த சின்னபாபுவுக்கு என்று எங்கிருந்துதான் இப்படித் தலைப்புகள் கிடைக்கிறது சார்! "தாடகை ஆடிய தாயம்!" - பெயரே திகைப்பாக; புதுமையாக; ஆவலைத் தூண்டும்படி இருக்கே சார்! பொன்முடியும் செல்லமணியும் தாடகைக் கோட்டைக்குப் போவார்களா மாட்டார்களா என்பது பெரிய சஸ்பென்சாக இருக்கே! - குடந்தை, சு. மாலி, திருநெல்வேலி கா. அடைக்கலராஜா, பொன்மரப்பட்டி தா. வாசவி லட்சுமி, கோட்டையூர் வா. சுந்தரபாபு, காரைக்குடி எஸ். ஸ்ரீதர், வலங்கைமான்

வா. கண்ணாயிரம், விருதை கு. தேன்மொழி, ஈரோடு என். மதிஒளி, காயக்காடு ப. ராம கிருஷ்ணன், மீனாம்பாள்புரம் ஆர். சந்தோஷ் சுப்ரமணியம், கபிஸ்தலம் கே. ஆர். ரவிவர்மன்.

'கண் திறந்தது' படக்கதை சினிமா படம் பார்ப்பது போலவே இருந்தது. பாலாஜி அருமையான பாத்திரப் படைப்பு. பிறர் பொருளைக் கனவில் கூட நினைக்கக் கூடாது என்பதை மிக அழகாக, மனதில் உறுதியாகப் பதியும்படி கதையை அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. மனதைப் பண்படுத்தும் கதைகள் கோகுலத்தில் மட்டுமே வருகின்றன. மகத்தான பணி! – திருவாரூர் என். சொக்க லிங்கம், மானாமதுரை மு. சோமப்பன், கோலார் என். சாந்தப்பன், சாத்தூர் மு. கரு ணாநிதி, பெரியபாளையம் இ. சுக்கூர், நாகை என். அர்சுனன், தேனி மு. அம்மையப்பன், வலிவலம் தா. சுப்பையா, தரங்கை. க. மாணிக் கம், பாண்டி. போதாகர் என். ரூசை, புதுகை கா. பழனியப்பன், ஸ்ரீவில்லிபுத்தூர் வி. சரண்யா, காயக்காடு, ப. ராமகிருஷ்ணன், சென்னை – 1 கே. ஆர். உதயகுமார், மேலப் பாதி என். நாகராஜன், திருச்சுழி சுந்தர் அழ கேசன், நாகை சந்திரா, கபிஸ்தலம் கே. ஆர். ரவிவர்மன்.

எங்க ஊர் வைஷ்ணவிதேவி, ஜப்பான் சென்று வந்த கட்டுரை பிரமாதம் போங்க! நாங்களே போய் விட்டு வந்த மாதிரி பெருமை! – காயக்காடு ப. ராம கிருஷ்ணன், அருப்புக்கோட்டை க. கண்மணி, இ. காவடி முருகன், தா. அடைக்கலம், பூ. முத்துக்கிருஷ்ணன், அ. பக்கிரிசாமி, தா. எஸ்தர், மு. புவனகிரி, தா. வெள்ளிச்சாமி, மற்றும் செனடாம்பிகா பள்ளி மாணவர்கள் ஏராளமானோர். திருச்சுழி சுந்தர் அழகேசன்.

எல்லா மதத்தினரின் பண்டிகைகளுக்கும் மதிப்புத் தருவது கோகுலம்தான். நோன்பு பலித்தது நாடகம் ரமலாவின் புனித இலட்சியத்திற்குப் பெருமை கூட்டியுள்ளது! – ராணிப்பேட்டை கா. கல்தான் முகமது, செஞ்சி என். மீரான், வல்லக் கோட்டை கா. நடனசபாபதி, சென்னிமலை கோ. ஆவுடையப்பன், வேப்பம்பட்டி மா. சுதா ராணி, சாத்தூர் எல். கற்பூரபாண்டி, கோவை. மா. முத்துமீனாக்ஷி, வடக்குநத்தம் என். வெங்கடேசன்.

"கொடிநாள்" அன்று உணர வேண்டிய ஓர் உன்னதமான கருத்தை "சிப்பாய் மக்கள்" கதை உள்ளத்தில் ஆழமாக விதைத்து விட்டது. நன்மாறன் நம் மனத்தில் உறுதியாக இடம்பிடிக்கிறான்! – தென்திருப் பேரை என். பூமிநாதன், வண்டியூர் கு. மாணிக் கம், சேலம். என். சுப்ரமணியன், வரகூர் இ. வீரராகவன், நாமக்கல் தா. நாச்சியார், வியாசர்பாடி. கா. டிமாண்டி.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	V. Murali
Nationality	:	Indian
Address	:	D-38, Nelson Chambers, 115, Nelson Manickam Mudaliar Road, Aminjikarai, Chennai- 600 029.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1997

K. Rajendran
Publisher

"பாவம் அப்பா" – இலட்சியவாதிகளின் பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை மனதை நெருடி உணர வைத்தது – தூத்துக்குடி கா. அப்துல் காதர், காரை. சா. சையத்பாட்சா, கோவை ஜூனியர் தினகரன், சிதம்பரம் கா. நல்லசிவம், சிவபுரி தம்பி ராஜா.

"நீ மட்டும் எப்படி?" சிறுகதை ஒரு புதிய மொழியை சிறப்பாகப் பயில எப்படி முயல வேண்டும் என்பதை மிக அழகாகக் காட்டியது. – பெங்களூர் மா. சீதா ராணி, சிவபுரி வி. லட்சுமி நாராயணன், கடலூர் எஸ். பட்டாபி, திருச்செந்தூர் கா. பொன்னப்பன்.

"நீயா நானா?" – ஒரு பக்கக் கதை என்றாலும் சூப்பருங்க. 40 வாட் மூக்கைப் பொத்திக் கொண்டது என்பதைப் படித்தபோது வாய்விட்டுச் சிரித்து விட்டேன்! – பொன்னமராவதி க. கல்யாணம், இடமலை கா. இராகவேந்திரன், தில்லை வா. சொர்ண முத்து.



"மழைக்காக லீவு விட்டும் பிரயோஜனமே இல்லைடா"


"ஏண்டா?"


"மழையில வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாதுன்னு சொல்லி படிக்க வச்சு துன்புறுத்திட்டாங்களே!"

— சீர்காழி வி. ரேவதி

"டேய், பக்கத்து வீட்டு மாமாவுக்கு இன்னைக்கு பிறந்தநாள் 'ஹாப்பி பர்த்டே' சொல்லு அவர்கிட்டே"

"நான் மாட்டேம்பா, அவர் பெரியவரு. 'டே' போடறது மரியாதையில்லே.






"சமத்துப் பையன் இல்லே நீ, இன்னிக்கு எந்தக் கையில ஊசி போடணும்னு சொல்லு?"

"உங்க கையில."

— பழனி, மும்பை.




"நான் சொல்றதெல்லாம் நடக்கும்"

"எங்கே ஒன்னு சொல்லு? நடக்குதான்னு பார்ப்போம்?"

"ஆடு, மாடு, கோழி...."

— சிறுவயல் ஜெயமணி, சிங்கம்புணரி

சிரிப்




"கால்குலேட்டருக்கு எதிர்பதம் சொல்லு?",


"தெரிலையே"

'கை' குலேட்டர்".

— பா.ஜெயக்குமார், வந்தவாசி.


பூனை ராஜா!
கதை அமைப்பு: ரே
ஓவியம்: சசி
தேவகிரி மன்னர் சிவராஜா நீதி தவறாதவர். ஏழை பங்காளர்
வெட்டுக்கிளிபடையெடுப்பில் பயிரெல்லாம் நாசம் மன்னா...
பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வரி விலக்கும், நிவாரணமும் கொடுங்கள் அமைச்சரே.
அரசே... எனக்கும் நீதி தேவை...
என்ன குறை?
வேகவதி ஆற்றின் படகோட்டி நான். பெயர் தனகோடி...
மேலே சொல்லுங்கள் தனகோடி?
ஆற்றங்கரையில் எனக்கு பழத் தோட்டம் கூட உண்டு.


பணக்காரப் படகோட்டிதான்! என்ன குறை?
நேற்று முன் தினம் என் தோட்டத்தை யாரோ நாசமாக்கி விட்டார்கள். பழங்களெல்லாம் பாழ்...
அடடா! செய்தது யாரென்று கண்டு பிடிக்க முடிந்ததா?
முடியவில்லையே மன்னா!
துப்பு ஏதாவது கிடைக்குமா பாருங்கள்?
தோட்டத்தில் ஒரு வளைந்த கொண்டை ஊசி கிடந்தது. ஒரே துப்பு! பாருங்கள்...
மன்னர் வாங்கிப் பார்த்து–
இந்தக் கொண்டை ஊசிக்கு உரியவர் யாராக இருந்தாலும் தக்க தண்டனை உண்டு.
இதற்கு உரியவரை உடனே கண்டு பிடியுங்கள். தனகோடிக்கு உதவித் தொகை வழங்குங்கள்.
அமைச்சர் கொண்டை ஊசியைப் பார்த்து–
மன்னவா, இதற்கு உரியவரை நமக்குத் தெரியும்!...
அப்படியா! உடனே வரவழையுங்கள்.


மன்னா, இதற்கு உரியவர் இந்த நாட்டின் வணக்கத்திற்குரியவர்...
யாராக இருந்தாலும் நீதியின் முன்னால் ஒன்றுதான். சலுகை பெற முடியாது. அழைத்து வாருங்கள் உடனே...
இதற்கு உரியவர் தங்கள் தாயார் மகாராணியார் தான்!
அன்னையாரா! உடனே அழைத்து வாருங்கள்.
மகாராணி வந்ததும்—
இந்த வெள்ளிக் கொண்டை ஊசி தங்களுடையதுதானா?
வாங்கிப் பார்த்து—
ஆமாம். இதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்.
தொலைத்தது நினைவிருக்கிறதா?
வேகேஸ்வரரைத் தரிசிக்கப் போனேன். ஆற்றில் வெள்ளம். வடியும் வரை ஒரு பழத் தோட்டத்தில் காத்திருக்கும்படி ஆயிற்று. பசித்தது. இரண்டு பழங்களைப் பறித்து வரச் சொன்னேன். கொண்டை ஊசி அங்கேதான் தவறியிருக்க வேண்டும்.



மகாராணி அவர்களே, உங் களுக்கு உரிமை இல் லாத மற்றவர் தோட்டத் தில் இருந்து, பழங்களைப் பறிக்க நீங்களே உத்தரவிட்ட பிறகு பரி வாரங்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் இஷ்டத்திற்குப் பறித்து தோட்டத்தை நாசப் படுத்தி இருக் கிறார்கள்.
அந்தத் தோட்டத் தின் பரிதாபத்துக்கு உரிய உரிமையாளர் இந்த தனகோடிதான்.
என்னை மன்னித்து விடு அரசே!
வேறுயாராக இருந்தாலும் மன்னித்து விடுவேன். ஆனால் உங் களை மன்னிப்பது மற்றவர்களும் பாரபட்சம் காட்ட வழிவகுக்கும்.
நீதி என்பது எல்லோ ருக்கும் ஒன்றே. மற்றவர்க ளுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டிய தாங்களே இப்படி நடந்து கொண்டிருப்பது மன்னிக்க முடியாத குற்றம். ஒருவாரம் சிறைத் தண் டனை விதிக்கிறேன்.
மன்னவா, கருணை காட்டுங்கள். அவர் இந்த நாட்டின் மகாராணியார். தங்கள் தாய்...!
அமைச்சரே நீதிக்கு முன் உறவு கிடையாது. அப்படிச் செய்வது நீதிதேவதையையே அவமதிப்ப தாகும்.


அமைச்சரே, தவறுக்கு தண்டனை என்பது தான் நீதி. நான் பெருமைப் படுகிறேன். என் உதாரணம் எல்லோருக்கும் எச்சரிக்கையாக இருக்கட்டும்.
ஒரு நாள்—
அம்மா, வரச்சொன்னீர்களாமே?
ஆம் சிவா. இவர் அவந்திபுரத்து மகாராணியார். எனக்கு சிநேகிதி.
வணக்கம். மன்னர் நலமா?
சிவா, மன்னருக்கு அடிக்கடி உடம்பு பாதிக்கிறதாம். ஒரே மகளுக்கு உடனே திருமணத்தை முடிக்க விரும்புகிறாராம்.
அப்படியா?
அதற்காகத்தான் சிநேகிதி என்ற முறையில் தானே இங்கு தூது வந்திருக்கிறாள்.
இளவரசியின் விருப்பத்தை முதலில் கேட்டு வரச் சொல்லுங்கள் அம்மா.


கேட்டுவிட்டுத்தான் வந்திருக் கிறார்கள். நீதிதேவதையின் மனித உருவமல்லா என்று இளவரசியே புகழ்ந்திருக்கிறாளாம்!
உங்களுக்கும் பிடித்திருந்தால் எனக்கும் சம்மதமே அம்மா.
பெண்பார்க்க நாளைக்குப் கிளம்பப் போறேன் சிவா.
அடுத்த நாள் அரசவையில்—
அரசே. ஒரு மந்திரக்காரியும் ஒரு பெண்ணும் வந்திருக்கிறார்கள் ஏதோ முறையிட.
உடனே வரச் சொல்!
வணக்கம் அரசே. நான் தயாபரி. பெரிய மந்திரக்காரி. பிடிக்காதவர்களை சாபமிட்டு அடியோடு அழித்து விடுவேன்.


அறிமுகமே பயப்படுத்தலாக இருக்கே! நான் உட்கார்ந்திருப்பது புராதனமான தர்ம சிம்மாசனம். இங்கு நீதிதான் கிடைக்கும். பயப்படுத்துவதை எல்லாம் வெளியே வைத்துக் கொள்ளுங்கள்
அரசே, என்பெயர் வாசுகி. இசைப் பாடகி.
நல்லது வாசுகி. உங்கள் வழக்கு என்ன?
என் மோதிரம் கோவிலில் தவறிக் கீழே விழுந்தது. இந்தப் பாட்டி எடுத்துக் கொண்டு உரிமை கொண்டாடுகிறார்.
எங்கே மோதிரத்தைக் கொடு?
நல்லா பாருங்க. எனக்கு நல்ல தீர்ப்பைக் கொடுங்க
சங்கு மோதிரம்! பாட்டி... இது ஏது உங்களுக்கு?
இது எங்க கொள்ளுப்பாட்டி போட்டுக்கிட்டு இருந்தது. கோவிலில் தவற விட்டேன். இந்தப் பொல்லாத பொண்ணு முந்திக்கிட்டு தன்னுது என்று சண்டைபோடறா!


அரசே... இது எங்கம்மா நினைவாக நான் பல ஆண்டுகளாகப் போட்டிருக்கும் மோதிரம்.
பெண்ணே உன் விரலைக் காட்டு. பாட்டி நீங்களும் காட்டுங்கள்
பாட்டி, உங்க விரலில் மோதிரம் அணிந்த அடையாளமே இல்லையே! இந்தப் பெண்ணின் விரல்லதானே அடையாளம் இருக்கு!
நீங்க மந்திரம் அறிந்தவர். மனசு வைச்சா இது மாதிரி ஆயிரம் மோதிரம் வரவழைக்கலாமே?
உங்க வயதுக்கு இப்படிப் பொய் சொல்லி மற்றவர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது
பெண்ணே, இந்தா உன் மோதிரம்
நன்றி மன்னா!


மன்னவா, என் கோபத்துக்கு ஆளாகிட்டே.
நான் வழங்கிபது நீதி.
உன் அழகியமுகம் பூனை முகமாகட்டும்.
என்னது! என் சாபம் பலிக்கவில்லையே! என்ன ஆச்சு?
அரசே, மனஉறுதியுடன் இருங்கள். யாரும் உங்களை எதுவும் செய்ய இயலாது!
நான் தர்மதேவதை. சிவராஜா, நீ நீதி தவறாதவன். அந்த தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் வரை எந்த சாபமும் பலிக்காது.
சாபம் உன்னிடம் பலிக்காவிட்டால் என்ன? உன் நாட்டு மக்களை என்ன பாடு படுத்துறேன் பார்!



நகரம் தீப்பற்றி எரிந்தது
எங்கும் கலவரக்குரல்
ஐயோ! அம்மா! ஆ! ஐயோ!
மன்னவா, இந்த அரசவையைத் தவிர எல்லாமே பற்றி எரிகிறது. மக்கள் தவிக்கிறார்கள்!
அரசே, எங்களைக் காப்பாற்றுங்கள்!
தர்மதேவதையே. என்னை மன்னித்து விடுங்கள். குடிமக்களைக் காப்பது மன்னனின் கடமை. சாபம் பலித்து மந்திரக்காரியின் கோபம் தணிந்து மக்கள் நலம் பெறட்டும். என்னைப் பற்றிக் கவலை இல்லை!
மன்னர் சிங்காசனத்தில் இருந்து இறங்கினார்



உடனே மன்னரின் முகம் மட்டும் பூனை முகமானது!
பூனை முகத்துடன் அரசாள விரும்ப வில்லை. விடை கொடுங்கள்
பூனை முகமானால் என்ன? எங்களுக்கு நீங்கள்தான் மன்னர். எங்கும் போகக் கூடாது. போகவிடமாட்டோம்.
பூனை ராஜாவின் ஆட்சி தொடர்ந்தது!
அரண்மனையில்—
சிவா, அவந்தி மன்னரிடம் இருந்து கடிதம். பிரித்துப் படி
பிரிக்க அவசியமே இல்லை அம்மா. அதில் இருப்பதை நான் கூறுகிறேன்...!
பூனை ராஜாவை மணக்க இளவரசி விரும்பவில்லை என்று எழுதியிருப்பாங்க. நீங்களே பிரித்துப் பாருங்கள்


மகாராணி பிரித்துப் படித்து—
ஆமாம்! அதையேதான் எழுதியிருக்கிறார்கள்...!
எத்தனை அவமானம்! இதைச் சும்மா விடக் கூடாது. நீ உடனே படையெடுத்துப் போ.
எதற்காக அம்மா? இளவரசி மறுத்ததில் தவறே இல்லை. உங்கள் மகளாக இருந்தால், பூனை முகமுடைய இளவரசனுக்கு மணம் செய்து தருவீர்களா?
காலம் ஓடியது
மகனே, உன்னை மணக்க எந்த இளவரசியும் முன்வரலையே!
நீங்களும் விடாம முயற்சிக்கறீங்க! பூனை முக மனிதனை மணக்க யாரும்மா முன் வருவாங்க? வீண் முயற்சி பண்ணாதீங்க.
சிவா, உனக்குத் திருமணமே ஆகாதா?
காவலாளி வந்து
அரசே, உங்களைக் காண ஒரு பெண் வந்திருக்கிறாள்
பெண்ணா! சரிவரச் சொல்!
வணக்கம் அரசே! வணக்கம் மகாராணி..
வாசுகியா!


ஆம் அரசே... இந்த நிலைக்கு நீங்கள் வரக் காரணமான அதே வாசுகிதான்...!
வந்த விஷயத்தைச் சொல்லும்மா?
மந்திரக்காரி என்னையும் சபித்து விட்டாள். எனக்குப் பார்வை போய் விட்டது!
அப்படியா! என்ன கொடுமை!
அரசே! உங்களுக்கு மறுப்பு இல்லை என்றால், நான் உங்களை மணந்து கொள்கிறேன்.
என் முகத்தை உன்னால் பர்க்க முடியவில்லை. அதனால் கூறுகிறாய். எனக்கு மனித முகம் இல்லை. பூனை முகம்!
எல்லாம் எனக்குத் தெரிந்ததே. என்னால் தானே உங்களுக்கு இந்த கதி? அந்த நன்றிக்காகவாவது உங்களை மணக்கத்தான் வேண்டும்.
நன்றியைக் காட்ட வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளாதே வாசுகி. நான் பூனை ராஜா.
முடிவு எடுத்து விட்டேன். உங்களுக்கு மனைவியாவதில் பெருமைப்படுகிறேன் மன்னா.


திருமணம் நடைபெற்றது.
ஒளிவெள்ளம் பாய நீதி தேவதை தோன்றியது!
என்னை அழைக்கா விட்டாலும் நானே வாழ்த்த வந்துவிட்டேன் அரசே.
என் பாக்கியம் தேவி!
திருமணப்பரிசாக என்ன வரம் வேண்டும்?
வாசுகிக்குப் பார்வை கிடைக்க அருளுங்கள் தேவி.
வாசுகிக்குப் பார்வை வந்தால், உங்கள் பூனை முகத்தைக் கண்டு வெறுக்கக கூடும் அல்லவா? யோசித்துக் கேளுங்கள், பூனை முகம் மறைய வரத்தைக் கேட்கலாமே?


வாசுகி என் மனைவி. அவள் குறையை நிவர்த்திப்பது என் கடமை. வெறுக்கலாம் என்பதற்காகக் கடமையிலிருந்து தவற விரும்பவில்லை. அருளுங்கள்.
அப்படியே ஆகட்டும்!
மன்னா, எனக்குப் பார்வை திரும்பி விட்டது!
தர்ம தேவதையின் அருள். வணங்கிக் கொள்!
இருவரும் சிங்காசனத்தில் அமர்ந்தனர்
மன்னா, நீதி நெறி தவறாத உன் தியாகத்திற்குக் கிடைத்துள்ள பரிசு இது! இனி எந்தத் தீயசக்திகளாலும் உன்னை எதுவும் செய்ய முடியாது. வாழ்க பல்லாண்டு!
மன்னனின் பூனை முகம் மறைந்தது!
உங்கள் முகம் பழையபடி ஆகிவிட்டது மன்னா!
பூனை முகம் மறைந்து விட்டது அரசே!

கொஞ்சும், பேசும், பாடும் பஞ்சவர்ணக்கிளி!



கிளி பேசுமா பேசாதா? வீட்டில் வளர்த்த கிளிகளுக்குப் பேசப் பழக்கி, தூது அனுப்பிய கதையை நமது இலக்கியங்கள் கூறுகின்றன. திருவரங்க ஆலயத்தின் கிளி மண்டபத்தில் நூற்றுக்கணக்கான கிளிகள் "ரங்கா ரங்கா" என்று பேசி அழைத்ததாகக் கர்ணபரம்பரைக் கதைகளில் கூறியிருக்கிறார்கள்.

அறிவியல் அடிப்படையில் கிளி பேசுவது என்பது நடக்கக்கூடியதுதானா? கிளியின் நாக்கு அமைந்துள்ளவிதம், பழக்கினால் அதனால் பேச முடியும் என்பதாக உயிரியல் அறிவியலார் கூறுகிறார்கள்.

எது எப்படிப் போனாலும் சரி, கிளிகள் பேசும் என்றுதான் குழந்தைகள் நம்புகிறார்கள். கிளி பேசாது என்று யாராவது கூறிவிட்டால் முதலில் ஏமாற்றம் அடைகிறவர்கள் குழந்தைகளாகத்தான் இருக்கும். கிளியைப் பற்றி ஒரு பாடலாவது பாடாத குழந்தைக் கவிஞர்கள் உண்டா? இந்த அளவுக்குக் குழந்தைகளின் மனதைக் கவர்ந்த கிளிகள் தெய்வங்களையும் விடவில்லை! ஆண்டாள் கையிலும், மீனாக்ஷி கையிலும் கிளி இருப்பதைப் பார்த்திருப்பீர்களே? உண்மையில் கிளி, விவசாயிகளின் நண்பன் அல்ல. பழங்களையும், பயிர் பச்சைகளையும் நாசப்படுத்தும் பறவைகளில் கிளிகளுக்குத்தான் முதலிடம் உண்டு!

இத்தனை இருந்தபோதிலும், கிளியை வெறுப்பவர்கள் யாருமே இல்லை! அது பேசாதா என்று ஏங்காதவர்கள் இல்லை! இப்படி ஏங்குபவர்களின் ஏக்கத்தைப் போக்க பேசும் கிளி கண்கவர் பொம்மையாகவே வந்திருக்கிறது!

ஊஞ்சல் கம்பியில் ஒய்யாரமாக அமர்ந்திருக்கும் இந்தக் கிளியோடு நீங்கள் பேசலாம்! பாடக் கூடப் பாடலாம்! அதை அப்படியே கிளி திருப்பிப் பேசும்; பாடும்! இது எப்படி இயங்குகிறது? கிளியின் காலுக்குக் கீழே உள்ள சின்னப் பெட்டி போன்ற பீடத்திற்குள் ஒரு மினி டேப் ரிகார்டர் பொருத்தப்பட்டிருக்கிறது. ஸ்விட்சை ஆன் பண்ணிவிட்டு நீங்கள் பாடினாலும் சரி, கை தட்டினாலும் சரி, விரல்களால் சொடக்குப் போட்டாலும் சரி ஒலிநாடாவில் பதிவாகி, உடனுக்குடன் ஒலிபரப்பப்படுகிறது! இது நாடு, மதம், மொழி, இனங்களைக் கடந்த கிளி! எம்மொழியும் எம்மதமும் எந்த நாடும் இதற்குச் சம்மதமே! மனிதர்களும் இப்படி இருந்து விட்டால் உலகத்தில் பிரச்னைகளே இருக்காது இல்லையா? இந்தக் கிளியைத் தடவிக் கொடுத்தால், உண்மையான கிளியைத் தடவிக் கொடுத்த அதே உணர்வு ஏற்படும். **அத்தனை** நேர்த்தியாகச் செய்திருக்கிறார்கள். இது இப்பொழுது சிங்கப்பூரில் கிடைக்கிறது. விரைவில் இந்தியாவுக்கும் இது படையெடுக்கலாம்!

அட்டையில் **சிறுமி ஷில்பா**

இங்கே ரஞ்சு, கோகுல்.

வண்ணப்படம் : ஸ்ரீஹரி

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெறும் இரண்டாவது கதை



நானா அழைத்தேன்?

வரும்போதே ராமு உற்சாகக் கடலில் மிதந்து வந்தான்.

"அப்பா! இன்னிக்கு எங்க பள்ளிக்கு எம்.எல்.ஏ. எழுச்சிவேந்தன் வந்திருந்தார். மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் நான் முதல் பரிசு வாங்கியதை மிகவும் பாராட்டிப் பேசினார். அவர் பேசும் பொழுது, பேச்சால் மற்றவர்களை ஈர்க்கும் திறமை பெற்ற என்போன்ற மாணவர்கள் தான் மேன்மேலும் வளர்ந்து வருங்காலத்தில் அரசியலில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்றார்."

மகிழ்ச்சி மிகுதியால் பேசிக் கொண்டே போன ராமுவைத் தன் பார்வையாலேயே நிறுத்தினார் அப்பா.

"முதல்ல உள்ளே போய், கை கால்களை அலம்பிக் கொண்டு சாப்பிட்டு விட்டு வா."

"பண்றேம்பா" என்று பதிலளித்த ராமு எம்.எல்.ஏ. தன்னைப் புகழ்ந்த பெருமையை விடாமல் தொடர்ந்தான்.

"எழுச்சிவேந்தன் மிகவும் நல்லவரப்பா. பள்ளி முடிந்த பின்பு நாளை தன்னைத் தன் வீட்டில் வந்து காணும்படி என்னிடம் தனியாகக் கூப்பிட்டுக் கூறினார். உன்னால ஒரு காரியம் ஆகணும். அவசியம் வா என்றார் அப்பா!"

"ராமு, நீ படிக்கின்ற மாணவன். உன்னிடம் ஒரு எம்.எல்.ஏ.விற்கு என்ன உதவி தேவைப்படும்? உன்னைப் பாராட்டி உற்சாகப்படுத்த ஏதாவது கூறியிருப்பார். அதைப் பெரிதாக நினைத்து இல்லாத மனக்கோட்டை எல்லாம் கட்டி படிப்பில் உள்ள கவனத்தைச் சிதற விடாதே. நாளைக்கு எங்கும் போக வேண்டாம். படிப்பைக் கவனி. என்ன புரிகிறதா?" என்றார் அப்பா.

"இல்லைப்பா. நான் கண்டிப்பா வரேன்னு சொல்லி விட்டேன். அதோட அவர் நாளை மறுநாள் வெளியூர் போய் விடுகிறார். அதனால், சொன்ன மரியாதைக்காவது கண்டிப்பாய்ப் போய்த்தான் தீர வேண்டும். தயவுசெய்து மறுக்காதீங்க அப்பா. எதற்காக அழைத்தார் என்பதைத் தெரிந்து கொள்ளவாவது போக வேண்டாமா?" என்றான் ராமு விடாப்பிடியாக.

மகனின் குரலில் இருந்த ஏக்கம் அப்பாவை இரங்க வைத்தது.

"சரி, சரி. சொன்னதுக்காக இந்த ஒரு முறை மட்டும் போய் விட்டு சீக்கிரம் வந்துடு."

ராமு, மகிழ்ச்சியோடு குதித்துக்

இ. நித்யா

கொண்டே உள்ளே ஓடினான்

மறுநாள் மாலை, எம்.எல்.ஏ.வின் இல்லம் என்ற பெயரில் அமைந்திருந்த பகட்டான மாளிகைக்குள் ராமு எவ்விதத் தடையும் இன்றி அனுமதிக்கப்பட்டான். எத்தனையோ பெரிய மனிதர்கள் அவரைக் காணக் காத்திருக்க ராமு வந்த செய்தியை அறிந்த உடனே அவனை உள்ளே அனுப்பி வைத்தார் எம்.எல்.ஏ.வின் செயலாளர். ராமுவுக்கு ஏதோ மகுடம் சூட்டியது போல இருந்தது!

"வாங்க தம்பி! சொன்னபடியே சரியாக வந்திட்டீங்களே! எனக்கு இப்படி இருக்கிற துடிப்பான இளைஞர்களை மிகவும் பிடிக்கும். நாட்டின் வருங்காலம் உன்னைப் போன்ற இளைஞர்களின் கையில் தான் இருக்கிறது. சும்மாவா நம் தலைவர் சொல்லியிருக்கிறாரு 'இளைஞர்கள் என் இதயத்துக்கு நெருங்கியவர்கள்' என்று. என் கொள்கையும் அதுதானே?" என்ற எம்.எல்.ஏ. அவனைத் தன் அருகே உட்கார வைத்து உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தார்.

"ஏய்! தம்பிக்கு ஸ்பெஷல் காப்பி கொடு."

குளுகுளு அறை! உற்சாகப்படுத்தும் பேச்சு. நெஞ்சுக்கு இதமாகக் காப்பி. எதிரே மாட்டியுள்ள தலைவரின் படம் ராமுவைப் பார்த்துக் கண்களால் சிரித்தது.



"ஐயா, வெளியே உங்களைப் பார்க்க எத்தனையோ பேர் காத்துக்கிட்டிருக்காங்க. என்னை என்ன விஷயமா வரச் சொன்னீங்க?"

"இருக்கட்டும் தம்பி. அவங்க யாரும் உன்னை விட எனக்கு வேண்டியவங்க இல்லை. அவர்களெல்லாம் அவங்க சொந்தக்காரியமா வந்திருக்காங்க. ஆனா நீ அப்படி இல்லே. என் காரியமா உன்னை வரச் சொல்லி நீ வந்திருக்கே."

ராமு உச்சிகுளிர்ந்தான்.

"தம்பி, உங்களுக்கு அற்புதமான பேச்சுத் திறமை இருக்கு. மாறு

பட்ட கொள்கை உடையவர்களைக் கூடத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்ளும் வசிகரம் உன் பேச்சில் இருக்கு. இது ஓர் அற்புதமான கலை. வீணாக்கக் கூடாது. நீங்க நம்ம விநிபா கட்சிக்காக சுற்று வட்டார கிராமங்களில் போய் உங்க பேச்சுத் திறமையைப் பயன்படுத்தி கட்சி பற்றி கூறினால் மிகவும் உதவியாக இருக்கும். தினமும் நாலு கூட்டம் போதும். தேர்தலுக்கு இன்னும் ஆறு மாதம் தானே இருக்கு!''

ராமுவுக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சி! தான் அவ்வளவு பெரிய பேச்சாளனா! எம்.எல்.ஏ.வே விரும்பிக் கூப்பிடுகிறார் என்றால்.... உதடு அசைக்கவும் மறந்து அவன் அமர்ந்திருந்தான்.


''என்ன தம்பி! யோசிக்கிறே? நீ மனசு வைச்சுப் பேசினா, வாக்காளர் எல்லாமே கண்டிப்பாக நம்ம கட்சிக்குத்தான் ஓட்டுப் போடுவாங்க. அந்த அளவுக்கு உன் பேச்சில் மந்திர சக்தி இருக்கு. சாதாரணமா இந்த மாதிரியான ஆற்றல் ஆயிரத்தில் ஒருத்தருக்குத்தான் அமையும். அதுவும் நாற்பது வயதுக்கு மேல்தான். ஆனால், அந்த ஆற்றல் இந்தப் பள்ளிப் பருவத்திலேயே உனக்குக் கிடைச்சிருக்கு. இதை நல்லபடியாகப் பயன்படுத்திக் கிட்டால் நீ ஓகோன்னு எங்கேயோ போயிடுவே! என்ன சொல்றே?''

எம்.எல்.ஏவின் இனிமையான பேச்சு ராமுவைக் கவர்ந்து அடிமை கொண்டது. அப்பா என்ன சொல்வாரோ என்ற தயக்கம் எழுந்தாலும் எம்.எல்.ஏ.வின் தனியன்புக்குப் பாத்திரமாகி விட்டோம் என்ற நினைப்பு எந்த எதிர்ப்பையும் சமாளிக்க முடியும் என்ற துணிவைக் கொடுத்தது!

''உங்க விருப்பப்படியே செய்யறேன் ஐயா'' என்றான் ராமு பெருமிதத்துடன்.

''தம்பி! வரும் ஞாயிற்றுக்கிழமை நம் ஊர் மைதானத்திலே கூட்டம்! போஸ்டரில் உன் பெயரைப் போட்டிருக்கிறேன்! வெளுத்துக் கட்டணும்!'' என்று மகிழ்ச்சியுடன் கூறிய எழுச்சிவேந்தன் தனக்கு வந்





தேர்வு வருகுது!

தேர்வு வருகுதய்யா – தம்பி
தினமும் படித்திடுவாய்!
சோர்வை அகற்றிடுவாய் – தம்பி
சுறுசுறுப் பாயிடுவாய்!

ஆர்வம் இருந்தாலே – பாதி
ஆனது மாதிரிதான்!
பெறு வாழ்வினிலே – என்றும்
சிந்தைகொள் தேர்வினிலே!

அதிக மதிப்பெண்தான் – உன்
அறிவை எடை போடும்!
புதிதாய் பலவற்றை – உன்
புத்தியில் ஏற்றிடுவாய்!

நினைவைப் பெருக்கிடுவாய் – எதையும்
நெஞ்சில் நிறுத்திடுவாய்!
அனைவரும் போற்றுகின்ற – நல்
அறிவினைப் பெற்றிடுவாய்!

காலைப் படிப்புத்தான் – தம்பி
கல்மேல் எழுத்தாகும்!
நாளும் தவறாமல் – தம்பி
நன்கு படித்திடுவாய்!

பாலப் பருவந்தான் – தம்பி
பசுமரத் தாணியாகும்!
காலம் தவறாமல் – தம்பி
கருத்தாய்ப் படித்திடுவாய்!

— அ.சுப்பையன்

திருந்த பொன்னாடைகளில் ஒன்றை எடுத்து அவனுக்குப் போர்த்தி முதுகில் தட்டிக் கொடுத்தார்!

ராமுவுக்கு எங்கோ வானத்தில் பறப்பது போலிருந்தது! வீட்டுக்கு விரைந்தான். தந்தையிடம் செய்தியைப் பக்குவமாகக் கூற முயன்றான்! அப்பாவுக்கு ஒரே கோபம்.

"ராமு, உன் நிலை உனக்குத் தெரியுமா? இப்போ +2வில் இருக்கிறே! இதுதான் நல்ல வருங்காலத்தை முடிவு செய்ய வேண்டிய காலம். இதில் நீ எடுக்கும் மதிப்பெண்தான் மேல்படிப்புக்கான அஸ்திவாரம். இப்பப் போய் தீவிர பேச்சாளனா அரசியல் மேடையில பேசப் போறேன்னு சொல்றியே! இது நல்லதுக்கு இல்லே. எம்.எல்.ஏவுக்கு உன்னால் ஆதாயம் இருக்கு. ஆனால், உன் வாழ்க்கை இருண்டு போயிடும்."

"அப்பா, யாருக்குமே கிடைக்காத அருமையான வாய்ப்பு அப்பா! ஓய்வு நேரங்களில் அல்லது விடுமுறை நாட்களில் மட்டும்தானே கூட்டத்தில் பேசப் போறேன்?"

"முதல்ல அப்படித்தான் ஆரம்பிக்கும். ஆனால், அரசியல்வாதிங்க உன்னை அப்படி இருக்க விட மாட்டாங்க. சொன்னால் கேள். +2வை முடிச்சிட்டு இதில் இறங்கு."

"எனக்கு அரசியல் பிடித்திருக்கு. இந்த வாய்ப்பை நான் நழுவ விரும்பலே. வரேன்னு எம்.எல்.ஏ.விடம் சொல்லியிருக்கேன்" – தரையைப் பார்த்தவாறே ராமு கூறினான்.

அப்பா அதிர்ந்து போய் நின்றார். அம்மா திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

"ஏன் இப்படிப் பார்க்கறீங்க ரெண்டு பேரும்? நான் என்ன கொலையா செய்யப் போறேன்? விநிபா கட்சிக்காக மேடையில் பேசப் போறேன். அவ்வளவுதானே? இதனால் என் திறமையும் வளரும், என்னைப் பற்றி பலரும் அறிய இது பொன்னான வாய்ப்பு."

"ராமு! மாணவர்கள் அரசியலில் பார்வையாளர்களாக வேண்டுமானால் இருக்கலாம்! படிப்பு முடிந்த பின்னர்தான் அரசியலில் இறங்கலாம்னு பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் சொல்லியிருக்காங்க."

"நான் ஒன்றும் படிப்பை விடப் போவதில்லை அப்பா! படித்துக் கொண்டே தான் அரசியலிலும் ஈடுபட விரும்புகிறேன்."

"உன் வாதத்தை ஏற்க முடியாது. எல்லாம் பட்ட பின்னால்தான் தெரியும். நீ அப்படிப் பட்டுவிடக்கூடாது என்றுதான் தடுக்கிறேன்" என்றார் அப்பா. ராமு அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை!

காலமும் நேரமும் யாருக்கும் நிற்பதில்லை. ராமு பல ஊர்களில் பேசினான்! இளம்புயல் ராமு என்று சுவரொட்டியில் பெரிய எழுத்தில் அவன் பெயரைக் குறிப்பிட்டார்கள். விநிபா கட்சியின் மேல் அவனுக்கு ஈடுபாடும் நன்றி உணர்வும் அதிகரித்தது. அதுவே கட்சி வெறியாக மாறியது. கட்சிக் கொடி ஏற்றல் மற்றும் போஸ்டர் ஒட்டுதல் என நேரம் ஓடியது. இரவும் பகலும் கட்சி பற்றிய சிந்தனை! பெரும்பான்மையான நாட்கள் அவனால் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலைதான்!

ராமு பன்னிரெண்டாம் வகுப்பு மாணவன் என்பதால் அவனுடைய வருகைப் பதிவு 95 விழுக்காடு இருக்க வேண்டும். எப்படி இருக்கும்?

பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து அப்பாவின் முகவரிக்குக் கடிதம் வந்தது.

"உங்கள் மகன் ராமு பள்ளிக்கு ஒழுங்காக வருவதில்லை. பொதுத் தேர்விற்கு இன்னும் இரண்டே மாதம் உள்ளபடியால் இனியேனும் விடுப்பு எடுக்காமல் வரும்படி எச்சரிக்கப்படுகிறது. தவறினால் தேர்வு எழுத அனுமதிக்க இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது கடிதத்தில்.

அப்பா ராமுவிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தார். ராமு ஒருகணம் அதிர்ச்சியுற்றான். ஆனால் அடுத்தகணமே, அலட்சியமாகச் சிரித்தபடி அதைத் தூக்கிப் போட்டு விட்டுப் போய் விட்டான்!

பொதுத் தேர்வுக்கு ஒரு மாதம் இருக்கும்பொழுது, தேர்தல் முடிவடைந்தது. ராமு ஆதரித்துப் பேசிய விநிபா கட்சியே வெற்றிவாகை சூடியது. எழுச்சிவேந்தன் மிக அதிக எண்ணிக்கையிலான ஓட்டு வித்தியாசத்தில் மீண்டும் எம்.எல்.ஏ. ஆனார். அது மட்டுமா? ஏதோ கூட்டணி ஏற்பட்டு எப்படியோ அடித்த அரசியல் காற்று அவருக்குச் சாதகமாக அமைய, அவர் கல்வி அமைச்சராகவும் ஆகிவிட்டார்! அதைக் கண்டு ராமுவுக்கு ஏற்பட்ட இன்ப மகிழ்ச்சியும் பெருமையும் உண்மையாகவே அவருக்குக் கூட ஏற்பட்டிருக்குமா. என்பது சந்தேகமே!

அன்று மதியம் ராமு தேர்வுக்காக ஹால் டிக்கெட் வாங்கச் செல்ல வேண்டியிருந்தது. அங்கு ஏமாற்றமே காத்திருந்தது. தேர்வு எழுத அவனுக்குப் பள்ளியில் அனுமதி வழங்கப்படவில்லை! சற்றுக் கலங்கினாலும் உடனே தன்னைத்தானே தேற்றிக் கொண்டான் அவன்.

ராமுவின் கற்பனையில் ஒரு வசந்த காலம் விரிந்தது. அமைச்சர் எழுச்சி வேந்தன் இருக்கும்போது நமக்கு என்ன பயம் என்ற துணிவு தோன்றியது. அவர் உதவியால் தேர்வு எழுத அனுமதி பெற்று, தேர்வை எழுத வேண்டும். பிறகு அவருக்கே உதவியாளனாகச் சேர்ந்து முழு நேர அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு படிப்படியாக முன்னேற வேண்டும். என்றோ ஒருநாள் அவனால் கூட அமைச்சராக முடியும் என்று எண்ண எண்ண மகிழ்ச்சியும் மனதிடமும் பெருகியது அவனிடம்.

"அப்பா, என் எதிர்காலம் அரசியலில்தான்" என்று தந்தையிடம் ராமு துணிச்சலாகத் தன் முடிவைக் கூறினான். அப்பாவுக்கு பயங்கர அதிர்ச்சி. தேர்வு எழுத அனுமதி கிடைக்காததாவது அவன் மனதை மாற்றும் என்று நம்பியிருந்தார் அவர். "எவ்வளவோ கூறியும், நீ மாறவில்லை. இத்தனை நடந்த பிறகும் மாற மறுக்கிறாய். மீதியையும் அனுபவி. அப்புறம்தான் தெரியும்" எனக் கோபமாய்க் கத்தினார் அப்பா.


தந்தையின் கோபம் ராமுவைப்

"காலையில ஏண்டா அழுதே?"

"விளையாடும் போது கடைக்குப் போகச் சொன்னா எப்படிடா இருக்கும்?"

"நீ அழுததைப் பார்த்ததும் படிக்கத்தான் சொன்னாங்களோன்னு நினைச்சிட்டேன்!"

– சீர்காழி. வி. ரேவதி





''வெண்ணெயில ஒரு 'ஈ' கிடந்தால் அதுக்கு என்னடா பேரு...?''
''எனக்கா தெரியாது...? BUTTERFLY!''
– சீர்காழி. வி. ரேவதி

பாதிக்கவில்லை. அவன் மனம் முழுக்க அமைச்சர் எழுச்சிவேந்தரே நிறைந்திருந்தார். தந்தையைத் துணிவுடன் உறுத்து நோக்கினான். ஏதோ ஒரு முடிவுடன் அமைச்சரின் வீடு நோக்கி நடந்தான். அங்குள்ள காவலாளி அவனுக்கு நன்கு தெரிந்தவன். ஆனால் அன்றைக்கு என்னவோ அவன், ராமுவை உடனே உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை! ராமுவுக்கு இது முதல் அதிர்ச்சி!

''என்ன மாணிக்கம்! என்னைப் போய்த் தடுக்கிறே! நான் புதியவனா?" – ராமு அதிர்ச்சியோடு எரிச்சலாய்க் கேட்டான்.

"இங்கே வருபவங்க எல்லாரும்தான் தெரிஞ்சவங்க. அதற்காகத் திறந்த வீட்டிலே எதுவோ நுழைந்தது போல, அமைச்சர் வீட்டிலே நுழைய முடியுமா? போய் அங்கே நில்லு! ஐயா கூப்பிட்டால் போகலாம்" – பதில் கூறியது பழைய மாணிக்கமேதான்!

ராமுவுக்குக் கண்கலங்கி விட்டது.

மனதைத் தேற்றிக் கொண்டு, "அமைச்சர் வரட்டும். அவரிடம் சொல்லி உனக்கு வேட்டு வைக்கிறேன்" என்று மனத்தில் கருவினான். பிறகு சிறிது நேரம் என்ன செய்வது எனத் தெரியாமல் வீட்டின் முன்னே அமர்ந்தான். வெளியே வந்த அமைச்சர், "என்ன ராமு! என்ன இந்தப் பக்கம்?" என்றார். ராமு துள்ளி எழுந்தான். "ஐயா! நீங்கள் அமைச்சரானதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்!" என்று ஆரம்பித்தான்.

"சரி சரி! சந்தோஷம்!" என்று அவசரமாகப் பதிலளித்த அமைச்சர், வேறு பேச்சுக்கே இடமளிக்காமல் உள்ளே போகத் திரும்பினார்.

போன வாரம் வரை எவ்வளவு அன்பாக இருந்தவர் ஏன் இன்று இப்படிப் பாராமுகமாக இருக்கிறார்! ராமுவுக்கு அதிர்ச்சி! தன் உணர்வை வெளிக்காட்டாமல் உமிழ்நீரைக் கூட்டி விழுங்கினான். "ஐயா, என்னைப் பள்ளியில் பொதுத் தேர்வு எழுத அனுமதிக்கவில்லை. நீங்கள் சற்றுக் கூறினீர்கள் என்றால்" என்று விடுவிடுவென்று துணிவோடு அவர் முன்னே போய் நின்றான்.

"என்னப்பா கிண்டலா பண்றே? நீ பள்ளிக்குப் போகாமல் படிக்காமல் ஊர் சுற்றுவே! அதற்கு நான் சிபாரிசு செய்யணுமா? நியாயம் தவறி எதையும் நான் செய்ய முடியாது. அதுவே எங்கள் தலைவர் கொள்கை" என்றார் எழுச்சிவேந்தன் கடுகடுப்புடன்.

ராமுவுக்குத் தன்மானம் சிலிர்த்து எழுந்தது.

"ஐயா, உங்களால்தானே எனக்கு இந்த நிலை? உங்க கூட்டங்களுக்குப் பேசப் போனதால்தானே பள்ளிக்குப் போக முடியாமல் போச்சு?"

"என்னது! நானா உன்னைப் பள்ளிக்கு மட்டம் போட்டுட்டு கூட்டத்துல பேச அழைச்சேன்? உனக்கு புத்தி ஏன் இப்படிப் போச்சு? படிக்கிற காலத்திலேயே படிக்கணும் தம்பி. அரசியலில் பார்வையாளனாக இருக்க வேண்டிய மாணவனான நீ, நேரடி அரசியலுக்கு வரலாமா? போ ராஜா, உன் தப்புக்கு என்னைக் குற்றம் சொல்லாதே!" என்ற அமைச்சர், "இந்தப் பையனை வெளியிலே அனுப்பு. இனிமே வந்தால் உள்ளே விடாதே. பள்ளிக்கு மட்டம் போட்டு ஊர் சுத்திட்டு சிபாரிசுக்கு இங்கே வரானுங்க" என்றார் உதவியாளரிடம். எல்லோரும் சிரித்தனர் ஏளனமாக.

இளம்புயல் ராமு, கழுத்தில் கை வைத்துத் தள்ளப்படாத குறையாக வெளியே அனுப்பப்பட்டான்! அவன் மனம் கொதித்தது. ஏமாற்றம், அவமானம், இயலாமை எல்லாமாகச் சேர்ந்து அவனுக்கு அழுகை வந்தது.

அவன் அழுத கண்ணீரை ஒரு கரம் துடைத்தது! நிமிர்ந்து நோக்கியவனின் கண்களில் கண்ணீர்! வேறு யார்? அவன் அப்பாவேதான்! "வா போகலாம். இதே சூட்டில் நன்கு படித்து அடுத்த முறை நன்கு தேர்வு எழுது. உன்னால் முடியும். கவலைப்படாதே," என்றபடியே அவனை அணைத்து அழைத்துச் சென்றார் அப்பா.

ராமு புத்தி வந்து மாறி விட்டதை அவனுடைய விசும்பல் உணர்த்தியது.

எந்நாட்டவர்க்கும்...

த. ஜானகி

மன்னர் ஜெயவேந்தனின் முகத்தில் கவலை அப்பிக் கொண்டிருந்தது. மனத்தில் நிறைந்திருந்த வேதனையின் சுமை முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

அவர் எதிரே அமைச்சர் பூபதி.

அமைச்சரின் முகத்திலும் சிந்தனைக் கோடுகள் அவ்வப்பொழுது மின்னி மறைந்து கொண்டு இருந்தன.

இருவரும் மௌனமாக எந்த பிரச்சனைக்குத் தீர்வு காண முயற்சிக்கின்றனர்?

மன்னர் ஜெயவேந்தன் மக்களை அன்புடன் நேசித்து, நல்ல முறையில்தான் ஆட்சி செய்து வந்தார். நாட்டில் வளமையும் செழுமையும் அன்பும் அமைதியும் நிலவியிருந்தன.

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வியாபாரம் செய்ய வந்த பல நாட்டினர்களைத் தன் நாட்டிலேயே தங்கி வியாபாரம் செய்ய மன்னர் அனுமதித்திருந்தார். அதற்கான வசதிகளையும் செய்து தந்திருந்தார். அவர்களும் அந்நாட்டுப் பிரஜைகளாகவே மாறி அனைவருடனும் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

ஆனால்...

கடந்த சில மாதங்களாக சில விஷமிகளின் தூண்டுதலால் நாட்டில் ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால், நிறத்தின் பெயரால் சண்டையும் கலகங்களும் அடிக்கடி நிகழ ஆரம்பித்தன. அரசு இதையெல்லாம் அதிகார பலம் கொண்டு அடக்கிக் கொண்டிருந்தாலும் சில சமயங்களில் எரிமலை போன்று கலவரங்கள் படீரென்று வெடித்து வந்தன.

தன் நாட்டில் பழையபடி அமைதித்



தென்றல் வீச மன்னர் ஆசைப்பட்டார். அதற்கு வழி காணத்தான் மன்னரும், அமைச்சரும் தீவிர சிந்தனையில் மூழ்கி யிருந்தனர்.

"மன்னா, அதிகாரத்தைக் காட்டி அரசு மதக் கலவரங்களை ஒடுக்கிக் கொண்டிருந் தாலும், மக்கள் மனத்தில் ஜாதி, மத, மொழி, இன வேற்றுமைகளுக்காக சண் டையிடக் கூடாது என்ற விழிப்புணர்ச்சி தானாக வர வேண்டும். மக்களின் மனத் தில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்காக மக்களின் மனதைக் கவர, ஒரு சிறந்த அறநெறி போதகரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு ஊராகச் சென்று மக்களுக்கு நல்ல உபதேசங்களைச் செய்ய அவருக்கு வசதி செய்து தர வேண்டும். அவருடைய உயர்ந்த பண்பால், நாவன் மையினால் சண்டை போடுபவர்கள மனம் திருந்த வேண்டும். நாட்கள் செல் லச் செல்ல மக்களும், நற்பண்புகளைப் பெற்று அன்போடும் ஒற்றுமையோடும் வாழ்ந்தால் கோடி நன்மை என்ற உண் மையை உணர்ந்து கொள்வார்கள்" என் றார் அமைச்சர்.

"நல்ல யோசனை. சிறந்த அறநெறி போதகரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் உங்களுடையதே."

"உத்தரவு அரசே!" - அமைச்சர் விடை பெற்றுக் கொண்டார்.

அறநெறி போதகர் பதவிக்காக வந் திருந்தவர்கள் அந்த மண்டபத்தில் நிறைந் திருந்தனர்.

"இந்தச் சுவரில் வரையப்பட்டிருக்கும் ஓவியத்தை உற்றுப் பாருங்கள். கவனமாகப் பாருங்கள். பார்த்து முடித்ததும் இந்த ஓவி யத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக் கின்றீர்கள் என்பதைக் கூறுங்கள்!" என்று மந்திரி கூறியதும் அனைவரின் பார்வை யும் ஓவியத்தின் மீது பாய்ந்தது.

நீண்டு வளைந்து செல்லும் ஆறு. அதன் உயரே நீலவானம். வானத்தின் ஒரு மூலையில் உதிக்கும் செங்கதிரோன். சூரிய ஒளி ஒரு பகுதியில் விழுகிறது. மற்ற இடம் இருளாக இருக்கிறது. பறவைக் கூட்டங்கள் பறந்து கொண்டிருக்கின்றன. ஆற்றங்கரை யில் உள்ள மரங்களின் கிளைகள் காற் றினால் அசைந்து கொண்டிருக்கின்றன. பசும் புல்வெளியில் பலநிறத்தில் பசுக்கள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. சூரிய ஒளி படும் ஒரு மரத்திற்குக் கீழே முனிவர் ஒருவர் தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார். இதுதான் அந்த ஓவியம்.

ஒருமுறைக்குப் பலமுறை அனைவரும் உற்றுப் பார்த்தனர்.

"ஈசனுக்கு அபிஷேகப் பால் கொடுப் பதற்காகப் பசுக்கள் மேய்ந்து கொண்டிருக் கின்றன," என்று ஒருவர் கூறினார். "மெது வாகக் காற்று வீசினால் மரம் சாயாது என்ற உண்மையை உணர்த்துகிறது'' என்று மற்றொருவர் கூறினார். "உயரப் பறக்கும் பறவைகள் போல உயர்ந்த உள் ளம் தேவை என்பதைப் பறக்கும் பறவை கள் கூறுகின்றன" என்று இன்னொருவர் கூறினார். இப்படி ஆளுக்கு ஆள் தங்களுக் குத் தோன்றிய கருத்தைக் கூறினர். ஆனால் யார் கூறிய கருத்தும் மந்திரியின் உள்ளத்தைத் தொடவில்லை.

கடைசியாக ஓர் இளைஞன் எழுந்




தான். அனைவரும் கவனித்தனர்.

"மந்திரியாரே! இந்த ஓவியம் சாதாரண ஓவியம் அல்ல. இது எக்காலத்திற்கும் எந்த நாட்டவருக்கும் பொருத்தமான முறையில் வரையப்பட்டிருக்கிறது. இதில் உள்ள ஒவ்வொன்றும் என்ன உணர்த்துகிறது தெரியுமா?"

"மரக்கிளைகளை அசைத்துக் கொண்டிருக்கும் காற்று, என்னைப் போல் உங்கள் கண்களுக்குப் புலப்படாமல் இறைவன் எங்கும் நிறைந்து நிற்கிறான். காற்றான என்னை உங்களால் உணர முடியும். அதே போல, இறைவனின் கருணையையும் அன்பையும் கூட முயன்றால் உங்களால் உணர முடியும். இப்புவிக்கு நான் ஒரே காற்றுத்தான். மக்கள் தங்கள் தங்கள் மொழியில் எனக்குப் பலவிதமான பெயர்களைச் சொல்லி அழைத்தாலும் நான் ஒருவனே. அதே போல, மக்கள் பல பெயர்களைச் சொல்லி அழைத்தாலும் இறைவன் ஒருவனே என்ற மகத்தான உண்மையைத்தான் காற்று விளக்குகிறது."

"அடுத்து - இங்குள்ள பசுக்களைப் பாருங்கள். பல நிறங்களில் உள்ளன. ஆனாலும் கூட நாம் அவற்றை எல்லாமே பசு. என்றே அழைக்கிறோம். அவைகள் பெற்றுள்ள நிறத்தால் நாம் அவற்றைப் பிரிப்பதில்லை; வேற்றுமைப்படுத்துவதில்லை. அதே போல மனிதர்களின் தோலின் நிறம் மாறுபட்டிருந்தாலும் அனைவரும் ஒரே மனிதகுலம் என்ற மாபெரும் உண்மையைத்தான் இந்தப் பசுக்கூட்டம் உணர்த்துகிறது."

"சமயம் என்றால் பக்குவம் என்பது பொருள். மனிதர்களின் மனது பக்குவமடைய வேண்டும். இதைத்தான் தவம் செய்யும் முனிவர் விளக்குகிறார். பக்குவம் பெற்ற மனது, உண்மை சமய ஒளியை உணர்கிறது. அது மற்ற மதத்தினரைத் தூற்றாது. இதை உணராத மனது இருளாகத்தான் இருக்கும். இதுதான் மற்ற மதத்தினரைச் சண்டைக்கு இழுக்கும். சூரிய ஒளி






"ஏது தாத்தா சாக்லேட்?"

"எங்க முதியோர் பள்ளியில ஒருத்தருக்கு இன்னைக்கு 60-வது 'வெட்டிங்-டே' யாம்... எல்லாருக்கும் நாலைந்து சாக்லேட் கொடுத்தார்!"


— சீர்காழி. வி. ரேவதி



"டீ.வி.க்கு மாலையெல்லாம் போட்டு வச்சிருக்கீங்களே ஏன்?"

"கடுமையான புயல் வீசப் போவதால் பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப் பட்டுள்ளதுன்னு அறிவிச்சதும், என் பையன் போட்ட மாலை அது!"

சீர்காழி. வி. ரேவதி



நாகுரு ஓடுவதேன்? நாய் ஓடுவதேன்? இரண்டுக்கும் ஒரே பதில் கூறு?"

"கல்"கண்டால்.

- மா. அன்பழகன்

படும் இடமும் படாத இருண்ட இடமும் இதைத்தான் விளக்குகின்றன!"

"பறவைகளில் பல இனங்கள் உள்ளன. ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு மொழியால் தங்கள் எண்ணங்கள்; தேவைகளைப் பரிமாறிக் கொள்கின்றன. எடுத்துக்காட்டாக குயில் கூவிக் கொண்டே செல்கிறது. காகம் கா.. கா என்று கரைந்து கொண்டே பேசுகிறது. ஆனால் பறவை இனங்கள், மொழியின் பெயரால் தங்களைப் பிரித்துக் கொள்வதில்லை. சண்டை போட்டுக் கொள்வதும் இல்லை. எல்லாம் ஒரே கிளைகளில் ஒற்றுமையாக வாழ்கின்றன. இதே போல் பல மொழிகள் பேசும் மனித சமுதாயமும் மொழியின் பெயரால் சண்டை போடக் கூடாது என்பதை உணர்த்துகிறது."

"நான் உதவி செய்வது போல நீங்களும் பிரதிபலன் கருதாது; வேறுபாடு இன்றி உதவி செய்ய வேண்டும் என்று ஓடும் ஆற்று நீர் போதிக்கிறது. நான் எந்த நாட்டிற்கும் சொந்தமானவன். எல்லாருக்கும் பொதுவானவன். எனக்கு எல்லைக் கோடு கிடையாது. மனிதர்களாகிய நீங்கள் உங்கள் மனதை என்னைப் போன்று பரந்ததாக ஆக்கிக் கொள்ள வேண்டும். விரிந்து பரந்த மனத்தில் கருத்து வேற்றுமைகள், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேத பாவங்கள் தோன்றாது. உயர்ந்த மனது உன்னத வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பதை நீலவானம் தெளிவாகக் கூறுகிறது."

இளைஞனின் நீண்ட விளக்கத்தைக் கேட்டதும் அங்கு குழுமியிருந்தோர் முகத்தில் மட்டுமல்ல. மந்திரியின் முகத்திலும் பிரமிப்புக் கலந்த பிரகாசம்!

இளைஞனை அமைச்சர் கூர்ந்து பரிவுடன் கவனித்தார்.

"இளைஞனே! உன் பெயர் என்ன?"

"சைலேந்திரன்."

"சைலேந்திரா! நான் வைத்த போட்டியில் நீ வென்று விட்டாய். நான் எதிர் பார்த்த பதிலை விட மிகச் சிறந்த பதிலை நீ கூறி விட்டாய். உன் விளக்கம் எக்காலத்திற்கும் எந்த நாட்டவர்க்கும் பொருந்தும். அதனால் உன்னையே அறநெறி போதகராக நியமிக்கிறேன். நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் நிலவ உன்னுடைய நாவன்மையும், புதிய வழிகாட்டல் விளக்கங்களும் வழிகாட்டும்"

அமைச்சர் முடித்தார் அவரது முகத்தில் நம்பிக்கை ஒளி மலர்ந்தது.




எங்கள் ஊரில் நடந்தது!



9 கொசு!

எங்க ஊர் பஸ் ஸ்டாப்பில் எல்லோரும் பஸ்ஸுக்காக நின்று கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் அவசரம் அவசரமாக ஓடி வந்தார். அங்கே இருந்த ஒருவரைப் பார்த்து, "7 E போய் விட்



டதா?" என்று கேட்டார். அதற்கு அவர் "செவன் ஈ போகலைங்க. னைன் கொசு தான் போனது" என்றாரே பார்க்கலாம்!

வரிக்கல், டி. உதயசங்கர்.

விடுமுறை உப்பு!

அன்று வெள்ளிக்கிழமை. நானும் எனது நண்பன் துரையும் பள்ளி மதிய உணவு வாங்கிக் கொண்டு எல்லோருடன் சாப்பிடச் சென்றோம். நான் சாப்பிடும் போது உப்பு அதிகமாக இருந்ததைக் கண்டுபிடித்து துரையிடம் "உப்பு அதிகமாக இருக்குடா" என்று சொன்னேன். அதற்கு துரை, 'சனி, ஞாயிறு விடுமுறைக்கும் சேர்த்து இதுலயே உப்புப் போட்டு விட்டிருப்பாங்க" என்றான்!

துதிப்பட்டு, கே. கார்த்திகேயன்

ஸ்கின் பாத்தா?

ஊரிலிருந்து எங்கள் பாட்டி வந்திருந்தார்கள். பேசிக் கொண்டிருந்தபோது என் தம்பி, "பாட்டி, எனக்கு அடிக்கடி வயிற்று வலி வருகிறதே, ஏன்?" என்று கேட்டான். அதற்கு பாட்டி "ஸ்கின் எடுத்துப் பார்த்தா தெரிஞ்சிடும்" என்றார். "தோலை எடுத்துப் பார்த்தா வயிற்று




வலியைக் கண்டுபிடிக்க முடியுமா!" என்று தம்பி திருப்பி வியப்புடன் கேட்டான். உடனே பாட்டி, "நான் ஸ்கின்னுன்னு சொன்னா, நீ தோல்னு சொல்றியே என்ன? எக்ஸ்ரேயிலேயே புதுவிதமா ஏதோ வந்திருக்காமே! அதைத்தான் சொன்னேன்" என்று திரும்பவும் விளக்கிக் கூறினார். உடனே நான் 'அதற்குப் பெயர் ஸ்கேன்' ஸ்கின் இல்லே பாட்டி" என்று கூறித் திருத்தவும் பாட்டியின் முகத்தில் டன் கணக்கில் அசடு வழிந்தது!

மன்னார்க்குடி, த.வரதன்

தலைவலி!

நானும் என் தம்பியும் அப்பா புதியதாக வாங்கி வந்து கொடுத்திருந்த பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தோம். பொம்மையை நாங்கள் தூக்கிப் போட்டு விளையாடியதைப் பார்த்த அம்மா, அப்படிப் போட்டால் பொம்மை உடையப் போகிறது



என்பதற்காக, "அதற்கு இன்றைக்குத் தலையை வலிக்குது" என்றார்கள். அதன் உள் அர்த்தம் புரியாத என் தம்பியோ "தலை வலித்தால் 'தைலம் தடவி விடு வேன்" என்றான்!

வெள்ளையாம்பட்டு. ந. துரை

சொந்தக் காருங்க!

காலையில் பள்ளிக்குச் செல்வதற்காக பஸ் நிலையத்தில் காத்திருந்தோம். அப்போது பெரியவர் ஒருவர் அருகே



சிறுவன் ஒருவன் நின்றிருப்பதைப் பார்த்தார். அவனிடம் வந்து "தம்பி உனக்கு சொந்தக்காருங்க யாராவது இருக்கிறாங்களா இங்க?" என்று கேட்டார்.


"எங்க வீட்டில் மாருதி காருதான் இருக்குதுங்க" என்றான் சிறுவன்.

துத்திப்பட்டு, சக்கரபாணி.

பிள்ளையார் குடித்த பால்!

எங்கள் வீட்டில் பால் பாயசம் பண்ண நிறைய பால் வாங்கியிருந்தார்கள். இரண்டு பாக்கட் பால் மிஞ்சியிருந்தது. நாளைக்குக் காபி போட எடுக்கலாம் என்ற எண்ணத்தில் அம்மா பிரிட்ஜில் வைத்து விட்டார்கள்.

மறுநாள் காலை ப்ரிட்ஜைத் (குளிர் சாதனப் பெட்டி) திறந்து பார்த்தால் இரண்டு பாக்கட் பாலையும் காண



வில்லை. பிரிட்ஜில் மேல் எங்கள் மாமா பரிசாகக் கொடுத்த சிறிய வெண்கலப் பிள்ளையார் இருந்தது!

அம்மாவின் பார்வை பிள்ளையார் மீது விழுந்தது. "பிள்ளையார்தான் ப்ரிட்ஜில் இருந்த பாலைக் குடித்திருக்கிறார்," என்று மகிழ்ச்சியுடன் அம்மா கூவினாள். எல்லோரிடமும் விஷயம் பரவியது. எல்லோரும் தங்கள் வீட்டு ப்ரிட்ஜின் மேல் பிள்ளையார் சிலையை வைத்து பிள்ளையார் பால் குடிக்கிறாரா? என்று அவர்களும் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்!

இரண்டு நாள் கழித்து எங்கள் பக்கத்து வீட்டுச் சிறுமி பணம் கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்தாள்.

"எதற்காகப் பணம்?" என்று கேட்டோம் வியப்புடன். "அன்னிக்கு கடையில் பால் தீர்ந்து விட்டது. அம்மா உங்களிடம் எக்ஸ்ராவா பால் இருந்த கேட்டாங்க. நான் வந்தேன். உங்க வீட்டுல யாரும் இல்ல. கலாகுட்டி மட்டும் தான் இருந்தா. அவகிட்ட கேட்டுட்டு நானே பிரிட்ஜைத் திறந்து இரண்டு பாக்கெட் பாலையும் எடுத்துக்கிட்டுப் போனேன்" என்று கூறினாள்.


எல்லோரும் திகைத்து நின்றோம்.

"ஆமா மாமி! உங்க வீட்டில் பிரிட்ஜில் பிள்ளையார் பால் குடித்தாராமே" என்று வெகுளியாய்க் கேட்டாளே பார்க்கலாம்!

சென்னை-18, வீரலட்சுமி கண்ணப்பன்


கிளி மூக்கு!

எங்கள் தெருவில் ஒரு வியாபாரி "மாங்காய், மாங்காய்" என சத்தம் கொடுத்தார். இதைக் கண்ட எனது சித்தப்பா மகன் சேகர், "அது என்ன மாங்காய்?" என்றான். வியாபாரி, "கிளி மூக்கு மாங்காய்?" என்றார். உடனே சேகர் வியாபாரிடம் ஓடி வந்து, "நாங்கள் சைவம். கிளி மூக்கெல்லாம் வேண்டாம். மாங்காய்



மட்டும் கொடுங்கள்" என்றானே பார்க்கலாம். எங்கள் தெருவே சிரிப்பலையில் மிதந்தது. வியாபாரியும் எங்களுடன் சேர்ந்து சிரித்துவிட்டு "நீ மிகவும் குறும்புக்காரப் பையன்தான்" என்று கூறித் திரும்பினார்.

மாத்தூர், பா.பெரியசாமி



பாட நூல்

எங்கள் தமிழாசிரியர் ஒரு மாணவனிடம் "பாட நூல்" கொண்டு வா" என்றார். உடனே அவன் சினிமா பாட்டுப் புத்தகத்தைக் கொடுத்து "இப்போ பாடுங்கள் ஐயா" என்றானே பார்க்கலாம்!

வரிக்கல், எம்.ராஜதுரை.



யாருக்கு

கோடீஸ்வரர் ஒருவருக்கு மூன்று பிள்ளைகள். அவர் தம்முடைய சொத்துக்களை மூவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். ஒரு பெரிய வைர மோதிரத்தை மட்டும் தன்னிடம் வைத்துக் கொண்டார்.

மூன்று பிள்ளைகளையும் அழைத்து, "நீங்கள் மூவரும் ஒரு வருட காலம் வெளியூர்களில் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும். இந்த ஒரு வருடத்திற்குள் யார் மிகவும் பெருந்தன்மையான காரியத்தைச் செய்கிறீர்களோ அவர்களுக்குத்தான் இந்த விலையுயர்ந்த வைர மோதிரம்" என்று சொன்னார்.

மூன்று பிள்ளைகளும் ஆளுக்கொரு திக்கில் புறப்பட்டார்கள். ஒரு வருடம் கழித்து மூவரும் திரும்பி வந்தார்கள்.

முதல் பிள்ளை, சொன்னான், "அப்பா! முன்பின் தெரியாத ஓர் ஆள் என்னிடம் அவனுடைய விலை மதிப்பு மிக்க உடமைகளைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிக் காசி யாத்திரை போனான். அவைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டு அவன் சில மாதங்கள் கழித்துத் திரும்பி வந்து கேட்டவுடன் நாணயமாகத் திருப்பித் தந்தேன்" என்றான்.

"இது நாணயம்மிக்க காரியம்தான். ஆனால், இதைப் பெருந்தன்மையான காரியம் என்று கூற முடியாது. ஒரு நாணயம் மிக்க நல்ல மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படித்தான் நீ நடந்து கொண்டிருக்கிறாய்" என்று கோடீஸ்வரரான தந்தை கூறினார்.

இரண்டாவது பிள்ளை சொன்னான், "அப்பா, சிறுவன் ஒருவன் ஒரு ரூபாய் நாணயத்தை வாயில் போட்டுக் கொண்டிருந்தான். அது திடீரென்று

அவன் தொண்டையில் சிக்கிக் கொண்டது. உடனே நான் அவனைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு ஒரு தட்டு தட்டினேன். காசு உடனே வெளியே விழுந்து விட்டது. சிறுவன் பிழைத்துக் கொண்டான்'' என்றான்.

"நீ மிகவும் தைரியமாக அந்தச் சிறுவனுக்கு வைத்தியம் செய்துள்ளாய். ஆனாலும் ஏற்கெனவே மருத்துவனாக இருக்கும் நீ, ஓர் உயிரைக் காப்பாற்றியதைப் பற்றிப் பெருமை கொள்ள முடியாது. அது உன் கடமை. அதைத்தான் நீ செய்திருக்கிறாய். கடமையைச் சரியாகச் செய்வது பெருந்தன்மையான செயல் அல்ல'' என்றார் அப்பா.

மூன்றாவது பிள்ளை சொன்னான், "அப்பா நான் ஒரு மலையின் மீது ஏறி இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருந்தேன். என்னைப்

மோதிரம்?

பகைவனாக நினைத்துப் பலமுறை என்னைக் கொல்ல முயன்று தோல்வியடைந்த நண்பன் ஒருவனைப் பார்த்தேன். அவன் மலைச்சரிவில் தூங்கிக் கொண்டிருந்தான். சற்று உருண்டாலும் அவன் அதல பாதாளத்தில்தான் விழ வேண்டும். அவனுக்கு அருகே ஒரு நல்ல பாம்பு படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது. ஒரு கணநேரம் கூட யோசிக்காமல் பெரிய தடியொன்றைக் கையிலெடுத்து பாம்பை அப்புறப்படுத்தினேன். ஒரு கல்லை நகர்த்தி, அவன் புரண்டாலும் சரிவில் விழுந்து விடாது அவனிடம் வைத்தேன். அதோடு அவன் தூங்கி எழும்வரை கண்காணித்து விட்டுத் திரும்பினேன்'' என்றான்.

கோமேஸ்வரர் மகிழ்ச்சி அடைந்தார்.

"ஆபத்தில் இருந்த பகைவனுக்கும் கருணை காட்டி நல்லது செய்த உன் செயலே பெருந்தன்மையான செயல்'' என்று பாராட்டி 3வது மகனுக்கு வைர மோதிரத்தை அணிவித்தார்.

- (நாடோடிக்கதையின் தழுவல்)

அ.கு. கிருஷ்ணன்



வாய்

சிரித்து மகிழ்வதும்
வாயாலே
சிரிக்கப் படுவதும் வாயாலே!
மருட்டும் பகையும்
வாயாலே!
மலரும் உறவும் வாயாலே!

சத்தம் எழுவதும் வாயாலே
சத்தம் நிற்பதும் வாயாலே!
நட்பைப் பெறுவதும்
வாயாலே
நட்பு கெடுவதும் வாயாலே!

வயிறு நிறைவதும் வாயாலே
வயிறு காய்வதும் வாயாலே!
துயரம் அடைவதும் வாயாலே
துயரைத் துடைப்பதும்
வாயாலே!

நன்மை, தீமை
வாழ்க்கையிலே
நாடி வருவது எதுவெனினும்
உண்மைக் காரணம்
வாயேதான்
உணர்ந்துக் கொள்ளனும்
நீயேதான்!

— புலேந்திரன்.

குழந்தைகளுக்கு விருந்து வைத்தவர்!



நாற்பது ஆண்டுகளுக்கு முன், கலை ஆர்வமும், குறிப்பாக நடிப்புத் திறமையுள்ள குழந்தைகளை உற்சாகப் படுத்த அடையாறு வானொலிச் சிறுவர் சங்கத்தைத் தொடங்கி யிருந்த காலம் அது. வானொலி நாடகங் களில் எங்கள் சங்கத்துக் குழந்தைகள் நடிப் பில் சக்கைபோடு போட்டு நல்ல பெயர் வாங்கியிருந்தார்கள். ஒருநாள் வானொலி நிலையத்திலிருந்து உடனே வரச் சொல்லி அழைப்பு வந்தது. போனேன்.

"முழுக்க முழுக்கக் குழந்தைகளுக்காகவே எழுதப்பட்ட அருமையான நாடகம். உங்கள் சங்கக் குழந்தைகளுக்குத் தங்கள் திறமை யைக் காட்ட நல்ல வாய்ப்பு" என்று ஒரு நாடகத்தை கொடுத்தார்கள்.

வீட்டில், குழந்தைகளின் மனம் கவர்ந்த அன்பான பாட்டியை, பெரியவர்கள் கலை என்று ஒதுக்குகிறார்கள். மனம் தாங்காத குழந்தைகள், பெரியவர்களின் மனதை மாற்றி, பாட்டியிடம் அன்பு கொள்ள வைக் கிறார்கள். இதுதான் நாடகத்தின் கதை.

இடையிடையே ஓரிரண்டு பாடல்களு மாக, குழந்தைகளின் பிஞ்சு மனத்தில் பாட்டிக்கு இருந்த அன்புப் பிணைப்பை மிக அற்புதமாக எடுத்துக்காட்டுவதாக நாடகம் அமைந்திருந் தது. முழு ஈடுபாட்டுடன் குழந்தைகளுக்குப் பயிற்சி தந்தேன். மனதைத் தொடக் கூடிய வகையில் இருந்ததால் குழந்தைகளும் தங்கள் முழுத் திறமையைக் காட்டினார்கள். ஒலிபரப் பப்படுவதற்கு முந்தின நாள், குழந்தைகள் இறுதி ஒத்திகையில் ஈடுபட, கவனித்துக் கொண் டிருந்தேன். வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. கதர் வேட்டியும், ஜிப்பாவும் அணிந்த ஒரு இனியவர் நண்பரோடு வந்து இறங்கினார்.

"இவர்தான் 'பாட்டி' நாடகத்தை எழுதிய குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்" என்று நண்பர் அறிமுகப் படுத்தினார்.

குழந்தைக் கவிஞரை அப்பொழுதுதான் முதன் முதலாக நேரில் சந்தித்தேன். வெகு விரைவில் எங்கள் குடும்ப நண்பராகி, எனக்குக் குருவாகவும் ஆனார்! 'பாட்டி' நாடகம் அதன் சிறப்பைக் கருதி பிற்பகலில் சிறுவர் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகாமல், இரவு ஏழரை மணிக்கு ஒலிபரப் பானது. குழந்தைக் கவிஞருக்கு அதுதான் முதல் வானொலி நாடகம். என்னையும் எங்கள் சங்கத்தையும் நாடறிய வைத்த பெரிய நிகழ்ச்சியும் கூட அதுதான்.

நாடகம் ஒலிபரப்பான வாரம், சனிக் கிழமை. நாடகத்தில் நடித்த அத்தனை குழந்தைகளையும் தனது காரில் ஏற்றிக் கொண்டார்; தனது வீட்டில் இனிய விருந்து கொடுத்தார் குழந்தைக் கவிஞர். எங்கள் சங்கக் குழந்தைகளுடன் அவர் வசித்த தெருவில் இருந்த அத்தனை குழந்தைகளை யும் அழைக்கப்பட்டிருந்தனர்.

எனக்குத் தெரிந்து குழந்தைகள் நாடகத்தில், நடித்ததற்காக குழந்தைகளை அழைத்து விருந்து வைத்து அவர்களை உற்சாகப்படுத்திய முதல் மனிதர் குழந்தைக் கவிஞர்தான்.

- கூத்தபிரான்

வக்காவின் கால் என்ன நிறம்?

ரேவதி

தொலைநோக்கியை ஸ்டாண்டு போட்டு உயரமாக நிற்க வைத்திருந்தான் நம்பி. அவனுக்கருகே தூரிகைகளும், வண்ணப் பசைகளும் இரைந்து கிடந்தன. 'க்ளிப்'போட்டு அட்டையில் இறுக்கப் பட்ட வெள்ளைத் தாளில் தொலை நோக்கியை அடிக்கடி பார்த்து, பென்சி லால் வரைந்து கொண்டிருந்தான்.

பூனையைப் போல் உள்ளே வந்த சின்னி, "நம்பி, ஓவியமா வரையறே?" என்று கேட்டாள் வியப்புடன்.

"ஏரிக்கரை மரத்துல நிறையப் பறவைங்க கூடு கட்டியிருக்கே. அவைகளில் இருந்து 'வக்கா' பறவையை மட்டும் பார்த்துப் பார்த்து படம் வரையறேன்" என்றான் நம்பி.

"நான் ஏதாவது உதவி பண்ணட்டுமா?"

"உன்னால் என்ன பண்ண முடியும்?"

"நான் பைனாகுலர் வழியா பார்த்து, அந்த வக்கா பறவையை வர்ணிக்கறேன். சரியா வரைஞ்சிருக்கியான்னு பார்த்துக்க?" என்றாள் சின்னி.

நம்பி தலையை ஆட்டினான்.

"வக்கா பறவை குட்டை. சாம்பல் நிறம். தலையின் உச்சிப் பகுதி முதுகின் மேல் பகுதி கறுமை. வயறு மட்டும் வெண்மை. கொண்டையில் உள்ள இறகுகள் கறுப்பு. கொண்டை இறகுகள் கழுத்துப் பக்கமாகக் கீழே இறங்கி உள்ளன. நெட்டைக் கால்கள். சாம்பல் வண்ணமாக உள்ளன. அலகு கறுப்பு. வெளிர் நீலமா இருக்கு. கண் படலம் சிவப்பு."

சின்னி தொலைநோக்கியைப் பார்த்தபடி கூறிக் கொண்டே வர, நம்பி தான் வரைந்த ஓவியத்தை சரிபார்த்துக் கொண்டே வந்தான்.

"பைனாகுலரில் கண்ணுக்குத் தெரிந்த வரை இந்தப் பறவையின் தோற்றத்தைக் கூறி விட்டேன். சரியாக வரைந்திருக்கிறாயா அண்ணா?" என்று கேட்டாள் சின்னி.

"சரியாக இருக்கு சின்னி. உன் உதவிக்கு நன்றி."

"ஆமாம் அண்ணா, இந்தப் பறவையை என்னவென்று சொன்னாய்?"

"இந்தப் பறவையை ஆங்கிலத்தில் நைட் ஹெரான் என்பார்கள். தமிழில் வக்கா"



"ஏன் அண்ணா, இந்தப் பறவை மரக்கிளையிலேயே உட்கார்ந்து இருக்கு? இரை பிடிக்கப் போகாது? சோம்பேறியா உன்னை மாதிரி இருக்கே?"

"அது என்னை மாதிரி சோம்பேறி இல்லே. பகலில் கொஞ்சம் மந்தம்தான். என்னை மாதிரின்னே வைச்சுக்கயேன்! இரவிலே தான் சுறுசுறுப்பா பறக்கும். இரை தேடும். இரவில் வானத்தில் நம் தலைக்கு மேல்

கூட்டம் கூட்டமாப் பறந்து போகும். 'க்வாக்' என்று பறக்கும்போதே சத்தம் போடும்."

"அட ராக்கொக்கு! அடிக்கடி இரவு நேரத்தில் கூட்டம் கூட்டமா பறப்பதை பல்முறை நான் பார்த்திருக்கிறேன். அதானா? ஆமாம் அண்ணா, இந்த வக்காவை ஏன் படமா வரையறே?"

"பள்ளியிலே ஓவியப் போட்டி. அதுல வைக்கத்தான் வரைஞ்சுக்கிட்டு இருக்கேன். பரிசு கண்டிப்பா எனக்குத்தான். என்னை விட எவன் இத்தனை அழகா பழகின பறவையை வரைஞ்சிருக்கான்? வரைய முடியும்?" என்று பெருமிதமாகப் பேசினான் நம்பி.

மாடியில் துணி உலர்த்த வந்த அம்மா, நம்பி வரைந்திருந்த ஓவியத்தைப் பார்த்து மலைத்து நின்றாள்.

"என்ன பறவைடா இது?"

"நீங்கதான் என்னன்னு சொல்லுங்களேம்மா?"

"இராக் கொக்கு, வக்கா கொக்கு."



"சரியாகச் சொன்ன உங்களுக்கு ஐம்பது மதிப்பெண்கள் அம்மா" என்று கிண்டலடித்தான் நம்பி. மற்றவர்கள் சரியாக இனம் காணும் அளவுக்குப் படம் வரைந்திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியும் நிறைவும் அவன் முகத்தில் நிறைந்தது.

"எல்லாம் சரிதான் நம்பி. இது இருட்டியதும் கூட்டமா பறந்து போறதை தினமும் பார்த் திருக்கிறேன். 'க்வா'க்னு சத்தம் போடும். நான் பார்த்த வக்காப் பறவைகளுக்கு கால்கள் நல்ல சாம்பல் நிறமா என்ன இருந்தது! நீ ஏன் மாற்றிப் போட்டிருக்கே?"

"பைனாகுலர் வழியாப் பாரும்மா. அப்படிப் பார்த்துப் பார்த்துத்தான் இந்த ஓவியத்தை வரைந்தேன்."

அம்மா பைனாகுலர் வழியாகப் பார்த்தாள்.

"ஆமாம்! கால்கள் சாம்பல் நிறமாத்தான் இருக்கு! ஒருவேளை இது வேறு பறவையோ! வக்கா இல்லையோ?"

"அதுதான் இல்லை. இது வக்கா பறவையேதான். சிவப்புக் கால்களோட நீங்க பார்த்ததுதான் வேற பறவையா இருக்கலாம் அம்மா."

"இந்த விவாதமே வேண்டாம். மாமா ஊர்லதான் இருக்கிறார். அலுவலகத்துக்கு தொலைபேசியில் கேட்டால் போச்சு."

அம்மாவின் பின்னாலேயே நம்பியும், சின்னியும் கீழே வந்தனர். அம்மாவே தொலைபேசியில் மாமாவோடு தொடர்பு கொண்டாள்.

"இருட்டினதும், வானத்தில் தலைக்கு மேல் கூட்டமாகப் பறந்து செல்லும் பறவைகளைப் பார்த்து அவை வக்கா என்றுதானே சொல்லிக் கொடுத்தே? இப்போ நம்பி படம் போட்டிருக்கிறான். அவன் போட்ட வக்காவுக்கு கால்கள் சாம்பல் நிறமா இருக்கு. நான் பார்த்த வக்காக்களுக்கு கால் கள் இரத்தச் சிவப்பா இருந்ததே! நான் பார்த்தது வக்கா இல்லையா?" என்று பிரச்னையைக் கேட்டாள் அம்மா.

"நீங்க பார்த்தது வக்கா பறவைகளைத்தான் அக்கா" என்றார் மாமா.

"கேட்டுக்கோ...!" என்று நம்பியிடம் தொலைபேசியைத்

அறிவியல் உண்மைகள்

• நைட் ஹெரான் என்று ஆங்கிலத்தில் குறிப் பிடப்படும் வக்காவின் விலங்கியல் பெயர் **NYETICORAX.** இது **CICONILFORMES** வரிசையில், **ARDEIDAE** குடும்பத்தைச் சேர்ந்தது.

• நடமாட்டமெல்லாம் இரவில்தான். பகலில் நீர் நிலைகளுக்கு அருகே சோம்பேறியாக அமர்ந்திருக் கும்.

• கூட்டம் கூட்டமாக இது இரவில் பறக்கும். இதனாலேயே இதை கிராமங்களில் "ராக்கொக்கு" என்பார்கள். இரவில் பறக்கும் போது 'க்வாக்' என்று சத்தம் போடும். இதன் காரண மாகவே இது 'வக்கா' என்று அழைக்கப்படுகிறது.

• இரவில் இதற்கு ஆபத்து இல்லை. ஆனால் பகலில் சோம்பேறி யாக மரங்களில இருப்பதால் எளிதாக வேட்டையாடப்படுகிறது. இறைச்சிக் காகவே இது பிடிக்கப்படுகிறது.

• இது இரை தேடுவது வேடிக்கை யாக இருக்கும். காத்திருந்து சட்டென மீனைப் பிடிக்காமல் அலைந்து திரிந்து பரிதவிக்கும்.

• நீர் நிலைகளின் கரைகள், மரங்களில் கூடுகட்டி 4 அல்லது 5 முட்டை இடும்.

• சாதாரண காலத்தில் சாம்பல் நிறமாக இருக்கும் இதன் கால்கள். இனப்பெருக்க காலத்தில் மட்டும் இரத்தச் சிவப்பாக மாறிவிடும்!



தந்தாள் அம்மா.

"நீ போட்டிருப்பதும் வக்காவேதான் நம்பி!" என்றார் மாமா.

"நான் போட்டிருப்பதும் வக்கா தானாம்!" என்றான் நம்பி பெருமையாக.

"என்ன மாமா! வௌவால் மாதிரி இரண்டு பக்கமும் சரிங்கறீங்க?" என்றாள் சின்னி.

"சாதாரண காலங்களில் வக்காவின் கால் நிறம் சாம்பல் அல்லது பழுப்புத் தான். அது குடும்பம் நடத்த ஆரம்பிக் கும் போது கால்கள் இரத்தச் சிவப்பாக மாறும்!" என்றார் மாமா.



நீங்கதானே..?

புதுவை
தா. செல்வராசன்

கையில் ஒரு நீண்ட குச்சியை வைத்துக் கொண்டு வராண்டாவில் குறுக்கும் நெடுக்குமாய் உலவிக் கொண்டிருந்தார் அப்பா.

'காலை எட்டு மணிக்கு டிபன் சாப்பிட்டு விட்டுப் போன சத்யமூர்த்தி மணி இரண்டாகியும் சாப்பிட வரவில்லை. அப்படி என்ன ஊர் சுற்றுகிற வேலை?' பள்ளி விடுமுறைன்னா வீட்ல தங்கறதேயில்லே! வரட்டும் முட்டிக்கு முட்டி தட்டினாத்தான் ஒழுங்கா இருப்பான்!'

ஒரு வழியாக அரைமணிக்குப் பிறகு சத்யமூர்த்தி உள்ளே நுழைந்தான் உற்சாகத்துடன். அப்பாவைப் பார்த்தான். அவர் முகத்தில் கோபக் கனல். கையில் மூங்கில் குச்சி. அவனுடைய உற்சாகம் ஒரு வினாடியில் அவனை விட்டு ஓடிப் போயிற்று. அம்மாவின் முகத்திலும் கேள்விக்குறி. சத்யமூர்த்தி கிணற்றடிக்குப் போய் கைகால்களை அலம்பிக் கொண்டு வந்து பயத்துடன் நின்றான்.

"காலையிலேயிருந்து எங்கடா போனே?" அப்பாவின் அதட்டலான கேள்விக்குப் பதில் சொல்லாமல் நெளிந்தான் அவன்.

"டீ.வி.பாக்க கோபாலன் வீட்டுக்குப் போயிருந்தேம்பா."- பயத்துடன் சொன்னான்.

"நம்ம வீட்ல டீ.வி இல்லையா? உனக்காகத்தானே கலர் டீ.வி வாங்கி வச்சிருக்கேன்? நம்ம வீட்டுலயே டீ.வி.யை வச்சுகிட்டு அவங்க வீட்டுக்கு ஏன்டா போகணும்? காலை

யிலே எட்டு மணிக்குப் போய் இப்போ சாப்பாட்டுக்கு வர்றே? ஏன், ராத்திரி வர்றதுதானே?" - குச்சியை ஓங்கியபடி கேட்டார் அப்பா.

"அப்பா, கிராமத்திலேர்ந்து பாட்டி உடம்பு சரியில்லேன்னு வந்திருக்காங்க இல்லே?"

"அது எனக்குத் தெரியாதா? பக்கத்து வீட்லே போய் டீ.வி. பாக்காதேடான்னா, பாட்டியைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கே!"

"நீங்க தானேப்பா போனவாரம் நல்வழி வகுப்பில் பெரியவங்க பேச்சைத் தட்டாம, கேட்டு நல்ல பேர் எடுக்கணும். எதிர்த்துப் பேசக் கூடாது. அவங்க மனம் புண்படும்படி நடக்கவும் கூடாதுன்னு சொன்னீங்க?"

"ஆமாம் சொன்னேன். அதுக்கென்ன இப்போ?"

"பாட்டி கிராமத்திலேயிருந்து வந்திருக்காங்க இல்லே? அங்கே கேபிள் டீ.வி இல்லே. இப்போ கிரிக்கெட் மேட்ச் நடந்துக் கிட்டிருக்கு. எனக்கு விளையாட்டுலே ரொம்பவும் ஆர்வம்னு உங்களுக்கே தெரியும். நான் மேட்ச் பார்க்க டீ.வி.யை வைக்கும்போதெல்லாம் டேய், சத்யா பாட்டு வைடா, கிருஷ்ணர் கதை வைடா, இராமாயணம் வைடா"ன்னு கேட்கிறாங்க"

"சரி".

"நம்ம பாட்டி ரொம்பவும் பெரியவங்க தானேப்பா?"

"ஆமாம், பெரியவங்கதான் சொல்லு"? அப்பா கையில் இன்னமும் மூங்கில் குச்சி ஆடிக் கொண்டேதான் இருந்தது.


"பெரியவங்க மனசு புண்படாம இருக்க, அவங்களுக்காக புராணப் படங்கள், பூஜைப் பாட்டு வரும் சேனலா அம்மாவை வைக்கச் சொல்லி விட்டு நான் மேட்ச் பாக்க கோபால் வீட்டுக்குப் போனேன்... பாவம் பாட்டி. இங்கே இருக்கிற வரைக்கும்தானே இதெல்லாம் பாப்பாங்க? அவங்க மனசு புண்படக் கூடாதுன்னுதான் நண்பன் வீட்டுக்குப் போய்..."

சத்யமூர்த்தி சொல்லிக் கொண்டேயிருக்க அப்பாவின் கையிலிருந்த மூங்கில் குச்சி நழுவிக் கீழே விழுந்தது!



''கனவுலகூட எனக்கு வாத்தியார் பாடம் நடத்தறமாதிரி கனவுதான்டா வருது''

''அதுக்குத்தான் வாத்தியார் பாடம் நடத்தும்போது தூங்கக்கூடாதுன்னு சொல்றது!''



எங்க அப்பா ரொம்ப மோசம்டா.... பக்கத்து வீட்டு வாசல்படி தடுக்கி கீழே விழுந்துட்டேன்னு சொன்னதும் என்னை அடிச்சாங்கடா"

"ஏண்டா...?"

"நம்ம வீட்டுல வாசல்படி இருக்கும்போது அடுத்த வீட்டு படியில எதுக்கு தடுக்கி விழணும்னு கேட்டுத்தான்!"

— சீர்காழி வி. ரேவதி




"உனக்கு தாத்தாவே கிடையாதுன்னு சொன்னியே இப்ப இருக்கார்ன்னு சொல்றியே எப்படி?

"நான் சொன்னது நம்ம கிறிஸ்மஸ் - தாத்தாவதான்!"

— காழி. ஆர். சீதாராமன்

இதென்ன பிரமாதம்?



அன்று அரண்மனையில் விருந்து. அமெரிக்காவையும், மேற்கு இந்தியத் தீவுகளையும் கண்டுபிடித்த கொலம்பஸ்ஸை சிறப்பிக்கத்தான் அரசர் அந்த விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

விருந்து கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. அரசரின் உறவினர்களும், பிரபுக்களும், அரசு அதிகாரிகளும் பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர். விருந்து கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் பெருமை. கொலம்பஸைப் பாராட்டி அரசரும் மற்றவர்களும் பேசி மகிழ்ந்தனர். அதில் கலந்து கொண்ட ஒருவருக்கு மட்டும் கொலம்பஸ் மீது சற்றுப் பொறாமை. அதை வெளிப்படையாகவே வார்த்தைகளில் காட்டினார்.

"இதற்கெல்லாம் அரசர் விருந்து கொடுத்துச் சிறப்பிப்பது என்றால் முடிவே இருக்காது. விருந்து கொடுத்து கௌரவிக்கும்படி இந்த கொலம்பஸ் என்னதான் அப்படிச் சாதனை புரிந்து விட்டாரோ? எனக்குப் புரியவே இல்லை!" என்று ஆரம்பித்தார் அந்த எரிச்சல்காரர்.

"என்னது இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்! புதிதாக ஒரு நாட்டைக் கண்டுபிடிப்பது என்பது சாமானியமான செயலா? கொலம்பஸ் அமெரிக்கா என்ற கண்டத்தைக் கண்டுபிடித்ததை உலக நாடுகள் எல்லாம் அறிந்து மலைக்கின்றன. அவர்களெல்லாம் கொலம்பஸையும் அவரது முயற்சியையும் பாராட்டி வாழ்த்துகிறார்கள். நம் அரசர் அளிக்கும் விருந்தை ஏற்கும் முழுத் தகுதியும் கொலம்பஸுக்கு உண்டு" என்றார் மற்றொருவர்.



"நீங்கள் சொல்வதற்காக நான் இதை ஒப்புக் கொள்கிறேன். இருந்தாலும் இதெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட செயலாகவே எனக்குப்படுகிறது."

"ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? அவர் எத்தனை கடினமான கடற்பயணங்களை மேற்கொண்டார்?"

"கொலம்பஸ் கடலில் சென்றார். காற்றடித்தது. கரை ஒதுங்கினார். அது புதிய நிலப்பரப்பாக இருந்தது. இதில் கொலம்பஸின் தனிப்பட்ட முயற்சியின் கண்டுபிடிப்பு என்று சொல்லும்படி என்ன இருக்கிறது?" என்றார் எரிச்சல்காரர்.

தொடர்ந்து அவரே, "இந்த சாதாரண நிகழ்ச்சிக்காக அரசரே இப்படி ஆர்ப்பாட்டப்படுத்துவது வேடிக்

கையாக இருக்கிறது!" என்றார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கொலம்பஸ் மெல்லப் புன்னகைத்தார். எழுந்து வந்தார். ''உங்கள் வாதம் மறுக்க முடியாததாகத்தான் இருக்கிறது'' என்று ஒப்புக் கொண்ட கொலம்பஸ், "ஐயா நான் கூறும் ஒன்றைத் தங்களால் செய்ய முடியுமா?" என்று பணிவாகக் கேட்டார்.

"சொல்லுங்கள்! உடனே செய்து முடிக்கிறேன். அப்படியென்ன என்னால் முடியாத காரியத்தையா செய்யச் சொல்லப் போகிறீர்கள்?" என்றார் எரிச்சல்.

கொலம்பஸ் பணியாளரிடம் கேட்டு ஒரு முட்டையைக் கொண்டு வந்தார். அதை எரிச்சலிடம் கொடுத்தார்.

"இந்த முட்டையை உங்களால் செங்குத்தாக நிற்க வைக்க முடியுமா?" என்று கேட்டார் எரிச்சலிடம்.

''இது என்ன பிரமாதம்!'' – எரிச்சல் அலட்சியமாக வாங்கிக் கொண்டார்.

முட்டையை செங்குத்தாக நிற்க வைக்க நெடுநேரம் முயன்றார் எரிச்சல். எப்படி வைத்தாலும் அது சரிந்தது. மீண்டும் மீண்டும் செங்குத்தாக வைக்க முயன்றும் முடியவில்லை. சோர்ந்து போன எரிச்சல், "என்னால் முடியவில்லை!" என்று ஒருவாராகத் தோல்வியை ஒப்புக் கொண்டு, ''எங்கே, நீங்கள் இதை செங்குத்தாக நிற்க வையுங்கள் பார்க்கலாம்"? என்றார்.

கொலம்பஸ் அந்த முட்டையை வாங்கினார். வாங்கி, அதன் முனையை மேஜையில் இலேசாகத் தட்டினார். தட்டிய முனையில் பள்ளம் விழுமாறு செய்தார். செய்து, அந்தப் பள்ளத்தை ஆதாரமாகக் கொண்டு முட்டையை மேஜை மீது செங்குத்தாக நிற்க வைத்தார்.

இதைக் கண்டதும், "இப்படித் தட்டி அமுக்கி நானும் கூட செங்குத்தாக நிற்க வைத்திருப்பேனே?" என்றார் எரிச்சல்.


"எதையும் அடுத்தவர் செய்த பின்னால், அதையே பின்பற்றிச் செய்வது யாருக்குமே எளிதாகத்தான் இருக்கும். அந்தக் காரியத்தையும் செய்ய, முதன் முதலில் வழி கண்டுபிடிப்பது இருக்கிறதே, அதுதான் மிகவும் கடினமானது. நான் அமெரிக்காவுக்குக் கடல்வழி கண்டுபிடித்ததும் இது போலத்தான். நான் கண்டுபிடித்த கடல் வழி, கேட்கும்போது வேண்டுமானால் எளிதானதாகத் தோன்றும். ஆனால் அவ்வழியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில், நான் பட்ட துன்பங்கள் எப்படிப்பட்டவை என்பது எனக்கு மட்டும் தான் தெரியும்!'' என்றார் கொலம்பஸ்.

எரிச்சல் தலைகுனிந்தார்.

''தங்களுடைய கடின முயற்சியின் தன்மையையும், பெருமையையும் அறியாமல் ஏளனமாகக் குறைகூறி விட்டேன். என்னை மன்னியுங்கள். இந்தப் பெருமைமிக்க விருந்துக்குத் தாங்கள் முற்றிலும் தகுதி உள்ளவரே! இந்தப் பெருமையில் நாங்களும் பங்குகொள்வது எங்கள் கொடுப்பினை!'' என்று உண்மையான மகிழ்ச்சியோடு கூறினார்.



ஆர்.லோகநாதன்



அந்த நாய்க்குட்டி எங்கே?- பூவை எஸ். ஆறுமுகம். பக்:128. ரூ.24/- மணி மேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை - 600 017.

பண்பட்ட எழுத்தாளரின் சிறுவர்க்கான மூன்று குறுநாவல்கள் இதில் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை. வில்லனான சர்க்கஸ் முதலாளியிடமிருந்து பூபாலன் படிப்படியாகத் தப்புவது "அந்த நாய்க்குட்டி எங்கே?". செல்வந்தரின் மகனாகப் பிறந்தும், வீட்டை விட்டு ஓடிவந்து எளியவனாக, நல்லவனாக வாழ்ந்து காட்டும் உமைபாலனை சித்தரிக்கும் "மாஸ்டர் உமை பாலன்". "இளவரசி வாழ்க!" பெரிய குழந்தைகளுக்கான கதை. சிறுவர்களை ஈர்க்கும் அழகான தொகுப்பு.

தேன்குழல், புலவர் மு.வைத்திய லிங்கம், பக்:96, ரூ.16/- தேன் தமிழ்ப் பதிப்பகம், 5-123, அங்கம்மாள் நகர், சேலம் - 635 009.

சந்தத்திற்குப் பெயர்போன பாடல்களைக் குழந்தைகளுக்காக எழுதுவதில் பெருமை பெற்ற ஆசிரியரின் அருமையான 65 பாடல்களைக் கொண்ட மணியான தொகுப்பு இது. நல்ல பண்புகளையெல்லாம் பாடலாகத் தந்துள்ளார். இனிக்கும் பாடல்களும் உண்டு. இதோ மாதிரிக்கு ஒன்று :

அழகு வளையத் தேன்குழல்
அம்மா செய்த தேன்குழல்
தேனைப் போன்ற பாகிலே
இனித்து வைத்த தேன்குழல்.
மென்மையான தேன்குழல்
மிகவும் இனிக்கும் தேன்குழல்
சிவப்பு வண்ணத் தேன்குழல்
தேடி உண்ணும் தேன்குழல்!

உரக்கப்பாடி மகிழ அருமையான பாடல்களைக் கொண்ட தொகுப்பு.


மரியாதைராமன் மதிநுட்ப நாடகங்கள், அஸ்வகோஷ், பக்:228. ரூ.40/- மங்கை பதிப்பகம், 700 எம்.ஐ.ஜி.த.வீ.வ. வாரியக் குடியிருப்பு. வேளச்சேரி, சென்னை - 600 042.

சிறுவர் மனங்கவர்ந்த மரியாதை ராமன் கதைகளை எத்தனையோ பேர் எவ்வளவோ முறையில் எழுதிப் புத்தகமாக்கியிருக்கிறார்கள். ஆனால், அவைகளை நாடக வடிவில் தந்துள்ளவர்கள் மிகக் குறைவு. ஆசிரியர் இந்தக் குறையை இந் நூலின் மூலம் தீர்த்து வைத்துள்ளார். சிறுவர்கள் புரிந்து கொண்டு, எளிதில் படிக்கவும் (பெரிய எழுத்தில்) நடிக்கவும் வல்லதாக 13 நாடகங்கள் இதில் உள்ளன. எல்லாம் மரியாதை ராமன் தீர்ப்பு வழங்குபவை. சிறுவர் நாடக நூல் என்பதால், உள்ளே ஒவ்வொரு நாடகத்திற்கும் ஒரு படத்தையாவது சேர்த்திருக்கலாம். அடுத்த பதிப்பில் இக்குறையைத் தீர்த்து வைப்பார்கள் என்று நம்பலாம்.

அம்மா சொன்ன கதைகள். சிவசங்கரி, பக்:72, ரூ. 50/- வானதி பதிப்பகம். 13, தீனதயாளுதெரு, தி. நகர், சென்னை - 600 017.

குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கி பிறகு பெரியவர்களுக்காக எழுதிப் புகழ் பெற்று, குழந்தைகளுக்காக எழுதுவதையே மறந்துவிட்ட எத்தனையோ பிரபல எழுத்தாளர்கள் உண்டு. தொடங்கும்போதே பெரியவர்களுக்காக எழுதிப் புகழ்பெற்று, பிறகு குழந்தைகளுக்காக எழுத முயன்றவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே. இரண்டாவதாகச் சொன்ன இந்த அரிய வரிசையில் இப்பொழுது இடம் பிடித்திருப்பவர் பிரபல எழுத்தாளர் சிவசங்கரி. கர்ணபரம்பரைக் கதைகளின் புதிய உருவம் எனினும் கதைகள், நேரிடையாகக் குழந்தைகளுக்குக் கூறுவது போலவே அமைந்துள்ளது. மிகமிக எளிய நடை. களத்த எழுத்து. கண் கவர் படங்கள் (கோபுலு), பெரிய அளவு. அருமையான தாள் என்று எல்லாமாகச் சேர்ந்து புத்தகத்தின் தரத்தை அயல்நாட்டுத் தயாரிப்பின் அளவுக்கு உயர்த்துகின்றன. இப்படி ஒரு புத்தகத்தை தமிழ் பேசும் குழந்தைகளுக்கு வழங்கியுள்ளதற்காக ஆசிரியர், ஓவியர், பதிப்பாளர் ஆகிய மூவரையும் எத்தனை பாராட்டினாலும் தகும்.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.



ஒரு மணியாச்சுங்க
ஒரு ஊடும் வரலீங்க!

Registered with the Registrar of Newspaper of India Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

